# ஞானச்சுடர்

ஐப்பசி 2018

250 ஆவது மலர்




வெளியீடு:
சந்நிதியான் ஆச்சிரம சைவ கலை பண்பாட்டுப் பேரவை

# குறள் வழி



அவிசொரிந் தாயிரம் வேட்டலின் ஒன்றன்
உயிர்செகுத்து உண்ணாமை நன்று.

**பொருள்:** தீயில் உணவைப்போட்டு ஆயிரம் யாகங்கள் செய்வதைப் பார்க்கிலும் ஒரு உயிரைக் கொன்று அதன் இறைச்சியை உண்ணாமை நல்லது. (259)

கொல்லான் புலாலை மறுத்தானைக் கைகூப்பி
எல்லா உயிருந் தொழும்.

**பொருள்:** உயிர்களைக் கொல்லாதவனாயும் ஊனைப் புசியாத வனாயுமுள்ளவனை எல்லா உயிர்களும் கைகுவித்து வணங்கும் (260)

# நற்சிந்தனை

மறப்பேனோ குருநாதன் தன்னை

**முத்தி நல்குமே**

## முத்தி நெறி

*நேரிசை வெண்பா – அந்தாதித்தொடை*



காணுவார் தொண்டர் கருதுவார் சொன்னசொற்
பேணுவார் பேணிப் பெரிதுவப்பார் – சானு
வளர்க்க வழிதேடி வையத் தலையார்
கலக்கமறக் கண்டு களி 04

களிபெருகுங் காமக் குரோதமெலாங் குன்றுந்
தெளிவுண்டாஞ் சித்தத்தில் தீமை – விளியுமே
ஆரறிவா ரென்றதனை அந்திசந்தி சிந்தித்தாற்
பேரறிவு தான்வருமே பின் 05

பின்னுமுன்னு மில்லைப் பிரமமே யுள்ளபொருள்
என்னு மொழிதம் இதயத்தில் – மன்னுபவர்
சாந்தம் அடக்கம் தயவுடனே வாழ்ந்தினிது
சேர்ந்திடுவார் முத்தி தெரி 06

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஞானச்சுடர்



வெளியீடு:

சந்நிதியான் ஆச்சிரம சைவ கலைபண்பாட்டுப் பேரவை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஓ

# ஞானச்சுடர்



வெளியீடு - 3 சுடர் - 250

2018 ஐப்பசி

## பொருளடக்கம்


| | | |
|---|---|---|
| நவராத்திரிகாலச் சிந்தனைத்... | கு. சோமசுந்தரம் | 01 -04 |
| திருச்சதகம் | சு. அருளம்பலவனார் | 05 -08 |
| நல்லது தீயது என்ற மர்மத்தை... | பூ.க. இராசரத்தினம் | 09 -11 |
| திருவருட்பயன் | ஆ. ஆனந்தராசன் | 12 -17 |
| நாம் எங்கே... | செல்வி அ. கந்தையா | 18 -19 |
| ஆனந்தக் கிருஷ்ணனின்... | திருமதி பா. சிவனேஸ்வரி | 20 -22 |
| மனிதப் பதர் ஏழு | கே.எஸ். சிவஞானராஜா | 23 -25 |
| நித்திய அன்னப்பணி... | சந்நிதியான் ஆச்சிரமம் | 26 -27 |
| மொழியும் வழியும் | இ. ஜெயபாலன் | 28 -31 |
| மண்டூர்க் கந்தசுவாமி கோயில் | மூ. சிவலிங்கம் | 32 -35 |
| வழித்துணை | ஆசுகவி செ. சிவசுப்பிரமணியம் | 36 -37 |
| இறை தத்துவம் | ஆ. விநாயகமூர்த்தி | 38 -39 |
| விநாயகர் வழிபாடும்... | ஆ. சிவநாதன் | 40 -43 |
| தமிழர் தேசமெங்கும்... | R. செந்தூரன் | 44 -45 |
| சத்தியம் | திருமதி ஜெ. இராஜேஸ்வரி | 46 -47 |
| சமய வாழ்வு | இரா. செல்வவடிவேல் | 48 -51 |
| ஞானச்சுடரே!... | கி. குலசேகரன் | 52 -53 |
| சந்நிதியான் ஆச்சிரமம்... | வல்வையூர் அப்பாண்ணா | 54 -82 |


வருட சந்தா: 500/= (தபாற் செலவுடன்)

**சந்நிதியான் ஆச்சிரம**

**சைவ கலை பண்பாட்டுப் பேரவை**

தொலைபேசி இலக்கம்: 021 321 9599, 021 226 3406

அச்சகம்: சந்நிதியான் ஆச்சிரமம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஞானச்சுடர் புரட்டாதிமாத வெளியீடு

## வெளியீட்டுரை:-

ஞானச்சுடர் புரட்டாதி மாத மலருக்கான வெளியீட்டுரையினை ஆச்சிரமத்தோடு நீண்டகாலத் தொடர்புடையவரும், சமாதான நீதிவானுமாகிய திரு சிவ. ஆறுமுகஸ்வாமி அவர்கள் மேற்கொண்டார்கள்.

அவர் தமது உரையின்மூலம் ஆச்சிரமம் ஆற்றும் சகலவிதமான பணிகளை ஒழுங்கு படுத்திப் பார்ப்போமெனில் எது செய்யவில்லை என்று கேட்கத்தோன்றும். அவ்வகையான செயற்பாட்டினை ஆச்சிரமம் மேற்கொண்டு செல்கின்றது. எல்லாவற்றுக்கும் மேலாக 249 மாத காலமாக தொடராக மாதம் ஒரு மலராக ஞானச்சுடர் வெளிவருவதென்பது போற்றப்பட வேண்டியதே. இது மனித காரியமன்று. தெய்வ அனுகூலம் என்றே கூறவேண்டும். இம்மலருக்குரிய இம்மாத வெளியீட்டுரையினை பல வருட காலம் தொடராகச் செய்து வருகின்ற சந்தர்ப்பத்தைத் தந்த சந்நிதி வேற் பெருமானின் கருணையை போற்றித் துதித்து தனது வெளியீட்டுரையினை நிறைவு செய்தார்.

## மதிப்பீட்டுரை:-

ஞானச்சுடர் 249ஆவது மலருக்குரிய மதிப்பீட்டுரையினை ஆற்றுவதாக இருந்த யாழ்ப் பாணக் கல்லூரி ஆசிரியர் திரு துரை. கணேசமூர்த்தி வருகை தராததையிட்டு மதிப்பீட்டுரையினை அமரர் நித்திய தசீதரனின் சகோதரரும் ஆசிரியருமாகிய செல்வன் பாபுதரன் அவர்கள் மேற்கொண்டார்கள்.

ஆச்சிரமம் ஆற்றும் பணிகளில் முதன்மையானது ஞானச்சுடர் வெளியீடாகும். வருடா வருடம் தனது சகோதரன் ஆற்றிய மலருக்குரிய மதிப்பீட்டுரையினை என்னை ஆச்சிரம சுவாமிகள் மேற்கொள்ளுமாறு கேட்டுக்கொண்டார்கள். எனது தமையனாரிடம் அன்பு கலந்த உரிமையுடன் எப்படி சுவாமி ஆணையிடுவார்களோ அவ்வகையான உரிமையுடன் இக் கோரிக்கையை திடீரென அறியத்தந்தார்கள்.

இவ்வளவு காலமும் சொற்பொழிவில் ஈடுபட்டிருந்த நான் முதன்முறையாக சந்நிதி வேலவன் அருளாணைப்படி வெளியிடப்பட்டுவரும் ஞானச்சுடர் மலருக்கு மதிப்புரை ஆற்றுவது என்பது ஒரு கடினமான காரியம். ஆனாலும் சுவாமிகளின் கட்டளையை சிரமேற் கொண்டு இச் செயலைச் செய்வதற்கு முன் வந்தேன்.

எப்படியாயினும் பல பெரியோர்கள், அறிஞர்கள்மூலம் நடத்திவந்த இம் மதிப்பீட்டுரையினை கனதி குறையாவண்ணம் முடிந்தளவு செய்வதற்கு சந்நிதி வேலவன் பூரண அருள்புரிய வேண்டும் என்று கூறி மலரில் இடம்பெற்ற கட்டுரைகளின் சிறப்பு அம்சங்கள், உள்ளடக்கம் ஆகியவைபற்றி சபையில் இருந்த அடியார்களுக்கு விளக்கிக் கூறியதுடன் அனைவரது பாராட்டுதலுக்கும் உள்ளானார்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சுடர் தரும் தகவல்

இன்று "ஞானச்சுடர்" மலரின் 250ஆவது மலர் உங்கள் கைகளில் தவழுகிறது. இது ஆண்டவன் கட்டளை. இன்று நிறைவேறியுள்ளது. 1998 தைமாதம் 25 பக்கங்களுடன் "ஞானச்சுடர்" வெளியாகியது. ஆரம்பத்தில் 250 பிரதிகளுடன் வெளியான ஞானச்சுடர் இன்று 2250 பிரதிகள் அச்சிடப்படுகிறது. 20 ஆண்டுகள் கடந்து 21ஆவது ஆண்டில் நடைபோடும் தூய சமய சஞ்சிகையாக விளம்பரம் எதுவுமின்றி, விற்பனை நிலையங்களை நாடாமல், நாடு முழுவதும்- வெளிநாடு உட்பட விநியோகிக்கப்படுவது ஒரு பிரமிப்பான விடயம். இவ் வெற்றிக்கு காரணம் வேலவனின் திருக்கருணையே. வசதிகள் குறைவான அந்நாளில் "ஞானச்சுடர்" வெளியீட்டிற்குக் காரணமாக இருந்த அனைவரையும் நாம் இச்சந்தர்ப்பத்தில் நன்றியோடு நினைவு கூருகிறோம்.

ஞானச்சுடரின் ஆரம்ப காலத்துடன் ஒப்பிடுகையில் அதன் அட்டைப்படம், பொருளடக்கம், அச்சுப்பதிப்பு, படங்கள் எனப் பல மாறுதல்களுடன் இன்று முழுமைபெற்ற சமய சஞ்சிகையாக மிளிர்கிறது. இந்த வளர்ச்சிக்குக் காரணமான கட்டுரையாளர்கள், கவிதையாளர்கள், வெளியீட்டுரை- மதிப்பீட்டுரை நிகழ்த்துவோர் அனைவருக்கும் சைவ கலை பண்பாட்டுப் பேரவை தனது இதயபூர்வமான நன்றியறிதலைத் தெரிவித்துக் கொள்கிறது. எல்லாவற்றிற்கும் மேலாக வாசகர்களாகிய உங்களது கடிதங்கள்- கருத்துக்கள்- தொலைபேசி மூலமான உரையாடல்கள் அனைத்தும் இப்பணியில் உள்ள அனைவரையும் ஊக்கப்படுத்தி வருகிறது. வருங்காலத்தில் இன்னும் சிறப்பாக "ஞானச்சுடர்" மலர் வெளிவர உங்கள் அனைவரதும் பூரணமான ஒத்துழைப்பையும் சைவ கலை பண்பாட்டுப் பேரவை எதிர்பார்த்திருக்கிறது.

எந்நிதியும் தரும் சந்நிதி வேலவன்
அனைவரையும் ஆசீர்வதிப்பானாக.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஸ்ரீ அருணகிரிநாத சுவாமிகள் திருவாய் மலர்ந்தருளிய திருவகுப்பு

## 10. திருஞான வேழ வகுப்பு

சடலை பட்டலை யுடலெ னப்படு
 தரும சித்திர கூடமானவை
தவிர நிட்களவெளியி னிற்பன
 சமய தாக்கவி ரோத வாதிகள்
தகர வெற்றுவ புகர்ம னக்கிரி
 தனைமு ருக்குவ வாசை யாணவ
தளையி யற்கையை விடந டிப்பன
 சனன முற்றிய சாத மாமெழு:,

கடல்க டப்பன படுகொ லைச்சமர்
 கடக மப்படி சாய மோதுவ
கருவி னைத்தரு மிருவி னைத்தொடர்
 கழல்ப தத்தன யோக சாதகர்
களைப றிப்பன கிளையெ னப்படு
 கவலை சுற்றிய காடு சாடுவ
கருணை மொய்த்தவ திருவ ருட்கன
 கவள மொக்குவ காம ராசனை:,

அடல்கெ டுப்பன அகில கற்பனை
 யரண ழிப்பன கோப மானவை
அவிய நற்பொறை பெனுந திப்பிர
 ளயமி றைப்பன லோப மோகிதம்
அவைமு றிப்பன மதமு மூத்தறி
 யடிப றிப்பன ராச தாதியின்
அதிகு ணத்ரய மதிலி டிப்பன
 அளவி றத்துவ தூளி வீசுவ:
திடமு டைச்சிறை மயிலு கைத்தெழு
 சிகிரி குத்திய வேலை நீள்சுனை
தினமு முற்பல மலர்தி ருத்தணி
 யிறைதி ருப்புகழ் பாடு நாவலர்
திரள்ப்ரி யப்பட வினித எிப்பன
 செயலொ ழித்தநு பூதி மீமிசை
திகழு மற்புத மவுன நிர்க்குண
 சிவம யத்திரு ஞான வேழமே.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஐப்பசிமாத சிறப்புப்பிரதி பெறுவோர் விபரம்

A. சண்முகராஜா

(லண்டன்)

M. சதாசிவமூர்த்தி

(கனடா)

சி. மகேஸ்வரன்

(பிரதிக் கல்விப்பணிப்பாளர், புத்தூர்)

செ. ஞானசபேசன்

(கிராம அலுவலர், ஏழாலை)

சி. உதயகுமார்

(கிராம அலுவலர், கைதடி)

தலைவர்

(ப.நோ.கூ. சங்கம், கட்டைவேலி)

தி. இரவீந்திரநாதன்

(அதிபர், கலைமணி வீதி, கட்டைப்பிராய்)

திருமதி கமலாம்பிகை ஸ்ரீஸ்கந்தராசா

(சுண்ணாகம்)

ம. குகதாசன்

(வரணி)

க. கோபாலசுந்தரம்

(மாருதி மோட்டோர்ஸ், உடுப்பிட்டி)

உரிமையாளர்

(நந்தினி என்ரபிரஸ், யாழ்ப்பாணம்)

செ. ரவிசாந்

(குப்பிளான்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**நா. செல்வராஜா**

(கொக்குவில்)

**சி. சேது**

(அச்சுவேலி)

**S. செல்வராசா (செல்வி)**

(சேவிஸ் ஸ்ரேஷன், புலோலி)

**மு. அப்புலிங்கம்**

(கோண்டாவில் கிழக்கு)

**திருமதி ப. சொக்கநாதன்**

(கொக்குவில்)

**ந. சிவக்குமார்**

(ராஜன் எலக்ரோணிக், அச்சுவேலி)

**திருமதி சசிலேகா ஜெயராஜன்**

(ஆசிரியர், தோப்பு, அச்சுவேலி)

**ப. தியாகராஜசர்மா**

(திருமகள் வாசா, ஆவரங்கால்)

**மகாலிங்கம் செல்வமணி**

(ஊரெழு மேற்கு, சுன்னாகம்)

**K. முகுந்தன்**

(ஞானபண்டிதர் பாடசாலை அருகில், கொக்குவில்)

**நா. நாகராசா**

(பக்கிஸ்லேன், மானிப்பாய்)

**ந. மணிவண்ணன்**

(இரும்புமதவடி, வதிரி)

**இராதாகிருஷ்ணன் கிரிதரன்**

(தம்பலடி, பொலிகண்டி)

**ஆ. யோகதாசன்**

(பூதவராயர் கோவிலடி, உரும்பராய்)

**செ. இராசநாயகம்**

(காப்பாளர், இ.போ.ச, அல்வாய்)

**K. சீவரெட்ணம்**

(கஸ்தூரியார்வீதி, யாழ்ப்பாணம்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**கனகன் சின்னத்தம்பி**

(சிறுப்பிட்டி மேற்கு, நீர்வேலி)

**வே. முருகவேள்**

(நெடியகாடு, வல்வெட்டித்துறை)

**க. சத்தியதாஸ்**

(வில்லிசைக் கலைஞர், சிறுப்பிட்டி)

**வ. இராசநாயகம்**

(கவிதா பொடி பில்லேர்ஸ், கரவெட்டி)

**ரூபினி வசந்தகுமார்**

(யாழ்ப்பாணம்)

**உரிமையாளர்**

(ஸ்ரீதேவி தொலைத்தொடர்பகம், அச்சுவேலி)

**விக்னேஸ்வரி கணேசநாதன்**

(நீர்வேலி)

**சி. பத்மராசா**

(நவிண்டில், கரணவாய்)

**T.R. இரத்தினவேல்**

(அரசவீதி, உரும்பராய்)

**A. முரளிகரன்**

(ஊரெழு)

**பா. இந்துராணி**

(மல்ரி ஓயில், இணுவில்)

**சு. சுந்தரலிங்கம்**

(வேவில் லேன், வல்வெட்டி)

**வீ. வடிவேலு**

(தும்பளை தெற்கு, பருத்தித்துறை)

**Dr தர்மலிங்கம்**

(நீர்வேலி)

**சிவலிங்கம் சுகந்திகா**

(ஆதியாமலை, உடுப்பிட்டி)

**த. கனகம்**

(பன்னாலை, நீர்வேலி வடக்கு)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**நவரத்தினம் இந்திரமோகன்**

(சண்டிலிப்பாய் மேற்கு)

**திருமதி சிவநிதி முருகானந்தன்**

(கட்டுடை, மானிப்பாய்)

**இராசரத்தினம் வேல்குமார்**

(இணுவில்வீதி, மானிப்பாய்)

**P. சபாநாதன்**

(யாழ்வீதி, மானிப்பாய்)

**M. செந்தூரன்**

(வண்ணார்பண்ணை, யாழ்ப்பாணம்)

**க. முருகானந்தம்**

(காளிகோவிலடி, மல்லாகம்)

**த. சொக்கலிங்கம்**

(இணுவில் தென்மேற்கு)

**பா. சியாமளநாயகி**

(சுண்ணாகம் கிழக்கு)

**கிட்டிணன் ஜெயக்குமார்**

(சிவன்வீதி, சிறுப்பிட்டி மேற்கு)

**கு. ஜெகதீஸ்வரன்**

(இராசவீதி, கோப்பாய் வடக்கு)

**கி. ஜெயக்குமரபதி**

(இடைக்காடு, அச்சுவேலி)

**க. துரைராசா**

(சுதுமலை தெற்கு)

**அருச்சுனன் சுனோஜா**

(தும்பளை தெற்கு)

**சி. புஸ்பரதி**

(கரணவாய் மத்தி)

**இ. சிவபாதம்**

(நீலமயில் வாசா, அல்வாய்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நவராத்திரிகாலச் சிந்தனைத் துளிகள்

– **திரு குமாரசாமி சோமசுந்தரம்** அவர்கள் –

"சக்தி பின்னமிலான் எங்கள் பிரான்" எனச் சிவசக்தி சங்கமம் ஆகவும், பாதி ஆண், பாதி பெண் பொருந்திய அர்த்த நாரீஸ்வர வடிவத்திலும்; ஆண் பெண் சமத் துவத்தை உலகத்தவர்க்கு எடுத்துக்காட்டும் வகையிலும் இறைவனை நோக்குகின்ற மரபு நமது சைவ மரபு ஆகும்.

திருமூலர் திருமந்திர முதல் பாட லில், "ஒன்றவன்தானே இரண்டவன் இன் னருள்" என்கிறார். "ஒன்று", "அவன்" ஆகவே உள்ளது. அது பரம்பொருள், மெய்ப்பொருள், பரமபதி ஆகும். மற்றையது அவன் அருள் ஆக விளங்குகின்றது. அப்பரம்பொருளின் அருட் கருணையாக வெளிப்பட்டு, திருவருட் சக்தியாகத் தொழிற்படுகின்றது. இறைவனின் இன்னருள்தான் சக்தி. ஒன்றிலிருந்து மற்றை யதைப் பிரிக்க முடியாது. "விறகில் தீயினன்; பாலில் படுநெய்போல்; மறைய நின்றுளன் மாமணிச் சோதியன்" என்கிறார் திருநாவுக் கரசு நாயனார்.

விறகில் உள்ள தீ போலவும்; பாலில் உள்ள நெய் போலவும், "சிவத்துடன் சக்தி யானது; ஒன்றாயும், கலந்தும், மறைந்தும் உள்ளமையை, நாவுக்கரசர் சுட்டிக் காட்டி உள்ளார். எனவே, சிவம் வேறு; சக்தி வேறு அல்ல என்பதை நமது அருளாளர்கள் சுட்டி விளக்கியுள்ளனர். இவ்வுண்மையை விளக் கவே, அர்த்தநாரீஸ்வரர் மூர்த்தம் சைவத் தில் தோன்றியது.

"சர்வம் சிவமயம்"; "சர்வம் சக்தி மயம்" என்னும் நிலைப்பாட்டினின்று விலகி; "சர்வம் சிவ சக்திமயம்" என்று இணக்கம் கண்டு; அதற்கு ஏற்றமும், வடிவமும், விளக்கமும் தருவது சைவம். இது ஒரு மாபெரும் தத்துவம். சைவ மக்கள் பெருமைப் படக்கூடிய அளவிற்கு, பெண்மைக்குச் சமத் துவம் வழங்கிப் பெருமை கொண்டது, சைவ ஆன்மீகப் பண்பாடு என்றால் அது மிகை யாகாது. இத் தத்துவத்தைச் செவ்வையாகப் புரிந்து கொண்டவர்கள் ஆண், பெண் சமத் துவத்தை மதிப்பவர்கள் ஆகின்றனர்.

சக்தி என்றாலே ஆற்றல், வலு, வல் லமை, விசை எனப் பொருள் கொள்ளப்படு கிறது. அந்த வகையில் நோக்கும்போது, மனிதர்களின் எல்லாவித இயக்கங்களுக்கும் தொழிற்பாடுகளுக்கும் சக்தி ஓர் இன்றியமை யாத தேவையாக உள்ளது. அதனாலேயே, சக்தியின்றேல் சிவம் இல்லை என்று கூறப் படுகிறது. கண்ணுக்குப் புலப்படாத இந்தச் சக்திக்குத் தெய்வ வடிவம் கொடுத்து, அதைத் தெய்வீகம் ஆக்கி, அதனால் ஆக் கச் சக்தி நிலையிலேயே கொண்டுள்ளமை யுடன் அதனை வழிபாட்டிற்கு உரியதாக்கி அதன் வழியாக ஒரு கலாசாரத்தையே ஆன் மீக அடிப்படையில் உருவாக்கிய நம் முன் னோர்களை எண்ணும்போது நாம் பூரிப்பும் பெருமிதமும் அடைகிறோம். எமது ஆன்மீகப் பண்பாடு நலிவடையாமல்; அதனைப் பேணி நலம் காத்து; அடுத்துவரும் தலைமுறை யினருக்குக் கையளிக்க வேண்டிய பொறுப் பும் கடமையும் நம்மிடம் உள்ளமையை நாம் உணர்ந்துகொள்ள வேண்டும். அந்த வகை யிலேயேதான், ஆதி சக்தியின் தெய்வீக வடி வங்களாக விளங்குகின்ற துர்க்கை, இலக்குமி, சரஸ்வதி ஆகியோருக்கு ஒன்பது நாட்கள் நவராத்திரி விழா கொண்டாடுகிறோம்.

*உண்மை உள்ளத் தூய்மையை உண்டாக்கும். உள்ளத் தூய்மையே ஒழுக்கத்தின் உயிர்நாடி.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆண்டுதோறும், புரட்டாதி மாதத்தில் வருகின்ற அமாவாசையை அடுத்து வரும் பிரதமை தொடக்கம் நவமி ஈறாகவுள்ள ஒன்பது நாட்கள், நவராத்திரி காலம் ஆகும். பத்தாம் நாள், வரும் தசமித்திதி; விஜயதசமி எனப்படும்.

## நவராத்திரி விரதம்:

விரதம் அநுஷ்டிப்பவர்கள், நவராத்திரி தொடங்குவதற்கு முதல்நாள், அமாவாசை யன்று, ஒருநேர உணவு மட்டும் உண்டு; அடுத்தநாள் அதாவது பிரதமை தொடக்கம் அட்டமி வரையிலான எட்டு நாட்களும் இரவில் பால், பழம் அல்லது இளநீர் மட்டும் அருந்தி; ஒன்பதாம் நாள் மகா நவமியன்று முழுநாளும் உண்ணா நோன்பு மேற்கொண்டு; பத்தாம் நாள் விஜயதசமியன்று உணவு உட்கொண்டு பாரணை செய்து; விரதத்தை நிறைவு செய்துகொள்வது விரத அநுட்டான முறையாகும். இந்த விரத அநுட்டான முறையை அநுட்டிக்க இயலாதவர்கள் முதல் எட்டு நாட்களும் ஒரே நேர உணவுண்டு; ஒன்பதாம் நாள், முழுநேர உபவாசம் இருந்து, பத்தாம் நாள் பாரணை செய்து விரதத்தைப் பூர்த்தி செய்வர். உண்ணா நோன்பு என்பதை, உபவாசம் என்றும் அழைப்பர்.

உபவாசம் என்பதன் உட்பொருள்; உடன் இருத்தல், உடன் வசித்தல் ஆகும். இறைவனைத் தமது உள்ளத்தில் அமர்த்தி, சதாநேரமும் அவன் நினைவில் உடன் வாசம் செய்தல் உபவாசம். எனவே விரத தினங்களில் இடைவிடாது இறை தியானத்திலும்;



பட்டம் பதவிக்கு பறக்காதே, அவை தாமே பறந்து உன் மடியில் விழவேண்டும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இறைவியின் புகழ் பாடுவதிலும் பேசுவதிலும் பிரார்த்தனைகள், மற்றும் பூசை ஆராதனைகளில் ஈடுபாடு கொள்வதிலும் நேரத்தைச் செலவு செய்தல் வேண்டும். "நின்றும் இருந்தும் நடந்தும் கிடந்தும் என்றும் அவன் தாள் நினை" என்ற ஆன்றோர் ஆணைக்கிணங்க நடந்து கொள்ளுதல் ஆன்மீகச் செயற்பாடாக அமையும். அவ்வாறு, இறை நிலையுடன் சதா நேரமும் வாசம் செய்யும் போது; அழுக்காறு, அவா, சினம், கடும்பற்று, முறையற்ற பால் கவர்ச்சி, உயர்வு - தாழ்வு மனப்பான்மை, வன்செயல் உணர்ச்சி, பகைமை போன்ற தீயவை, தீய உணர்வுகள், தீய குணங்கள் நம்மை அணுகமாட்டா. வன் சொல்கள் வாயில் நுழையமாட்டா. வன்செயல்கள், வன்முறைகளில் நமது உடல் ஈடுபடமாட்டா என்பது உறுதி.

எல்லா மனிதர்களும் வாழ்வில் அடையவேண்டிய உறுதிப் பொருள்கள்; வீரம், செல்வம், கல்வி ஆகிய மூன்றும் ஆகும். இவை மூன்றையும் தம் வாழ்நாட்களில் அடைவது மனித வாழ்க்கையின் குறிக்கோள்கள் எனக் கொள்ளப்படுகிறது. இம்மூன்றின் மிகை வளர்ச்சியும், குறை வளர்ச்சியும்; ஆபத்துக்களை விளைவிக்கக்கூடியவை. இம் மூன்றினதும் ஒருங்கிணைந்த வளர்ச்சி, மனிதனில் நிகழும்போதுதான்; மனிதன் பூரண வளர்ச்சிபெற்று, நிறை மனிதனாக ஆளுமை நிறைந்த மனிதனாக உருவாக்கம் பெறுகிறான்.

வீரம், செல்வம், கல்வி ஆகியவற்றின் முழுவளர்ச்சி; விலங்கு இயல்புகள் கொண்ட மனிதனில் ஏற்படுமாக இருந்தால் விளைவு நன்மையாக இருக்கமாட்டாது. மாறாக மனிதகுல நாசத்திற்கே வழிவகுக்கும் என்பது வரலாறு கற்பிக்கும் பாடம். எனவே தான், இந்துசமயம் அதன் வழிவந்த இந்துப் பண்பாடு, வீரம், செல்வம், கல்வி மூன்றையும்; தெய்வங்களோடும், ஆன்மீகத்தோடும்; அறநெறி முறைமையோடும் பொருத்தியும்; இணைத்தும் காட்டுகின்றன. உலகியலுடன், ஆன்மீகம் கலக்கும்போதுதான்; மனித வாழ்வு செழிப்படைகிறது; வளம் பெறுகிறது; அமைதி காண்கிறது. நவராத்திரிகாலச் சக்தி வழிபாட்டின் சத்தும் சாரமும் இதுவேயாகும்.

"பொல்லார்க்குக் கல்விவரில் கர்வம் உண்டாம்
அதனோடு பொருளும் சேர்ந்தால்
சொல்லாததுஞ் சொல்லவைக்கும் சொற் சென்றால்
குடி கெடுக்கத் துணிவர் கண்டாய்
நல்லோர்க்கும் மூன்று குணமுண்டாகில்
அருள் அதிக ஞானம் உண்டாம்
எல்லோர்க்கும் உபகாரராயிருந்து
பரகதியை யெய்து வாரே"

பொல்லாத துர்க்குணங்கள் நிரம்ப உடையவர்களுக்குக், கல்வியுண்டாகில்; அவர்களுக்குக் கர்வம், செருக்கு, தன் முனைப்பு என்பன அதிகப்படுகின்றன. அக் கல்வியோடு, பொருள், செல்வம் ஆகியவையும் சேர்ந்தால்; மற்றையவர்களுடன் பேசத் தகாத வார்த்தைகளையும் சொல்லும்படி தூண்டும். தற்பெருமை தலை தூக்கும். குடிகளைக் கெடுக்கவும் துணிவர். நற்குணம், நற்பண்புடையார்க்குக் கல்வி, செல்வம், வீரம் ஆகிய இம்மூன்றும் உண்டாகில்; அன்பு, கருணை, அருள், ஞானம் பெற்று; யாவர்க்கும் உபகாரிகளாக வாழ்ந்து இம்மையில் இன்பமும் மறுமையில் பேரின்பமும் பெறுவர்.

வீரம், செல்வம், கல்வி இம்மூன்றும் ஆக்கச் சக்தியாகவும் அழித்தல் சக்தியாகவும் உள்ளமை உணர்தற்பாலது. அவற்றை ஆக்கத்திற்கோ, அழிப்பிற்கோ பயன்படுத்துவது என்பது அவரவர் மனத்திலேயே தங்கியுள்ளது. "ஆக்கமும் கேடும்" ஒருவரின் மனநிலையையும் நோக்கத்தையும் பொறுத்த விடயம் என்பதால், மனத்தைக் காத்து ஓம்புதல், மனிதனின் பிரதான கடமையாகும்.

*எந்த ஊசியும் இரு பக்கங்களிலும் கூர்மையாய் இராது. அறிவும் அதுபோலத்தான்.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சத்திரசிகிச்சை மருத்துவரின் கையிலுள்ள கத்தி, ஒரு நோயாளியின் உயிரைக் காப்பாற்றுகிறது. அதேவேளை, ஒரு துட்டனின் கையிலுள்ள, கொடுவாள்; மனிதனின் உயிரையே எடுத்துவிடுகிறது. சக்தி ஒன்றுதான்; அதனைப் பயன்படுத்தும் நோக்கத்தில்தான்; ஆக்கச்சக்தியோ, அழிப்புச் சக்தியோ என்பது தீர்மானிக்கப்படுகிறது. இவ்வுண்மை நிலையைக் கருத்தில் கொண்டு நவராத்திரி காலத்தில், முத் தேவியர்களையும் வழிபட்டு, நாமும் மற்றையோரும் நல்வாழ்வு வாழ்வோமாக.

வாழ்க வளமுடன்; வாழ்க வையகம்.

## அன்பின் மகிமை

ஒரு குழந்தை நன்றாக வளர்வதற்குத் தாயின் அன்பு மிகவும் முக்கியமானது. தாயினால் கைவிடப்பட்ட குழந்தைகளும் தாயிடமிருந்து பிரிக்கப்பட்ட குழந்தைகளும் சந்தோசமில்லாதவர்களாக மனச்சோர்வு அடைந்தவர்களாக காணப்படுவது இயற்கை. அவர்கள் எதற்கெடுத்தாலும் பயந்து நடுங்குபவர்களாகவும் எதற்கும் தயங்குபவர்களாகவும் இருப்பதனைக் காணலாம். பெற்றோரின் அன்பையும் அரவணைப்பையும் பெறாத பிள்ளைகளைக் காட்டிலும் அவற்றைப் பெறும் பிள்ளைகள் புத்திசாலிகளாகவும் மன உறுதிமிக்கவர்களாகவும் எதையும் முன்வந்து செய்பவர்களாகவும் தலைமை தாங்கும் ஆற்றல் உள்ளவர்களாகவும் காணப்படுகின்றனர்.

ஒரு குழந்தைக்கு முதன்முதலில் ஏற்படும் பந்தம் அம்மாவின் அரவணைப்பும் பாசமும். இதுவே அந்தக் குழந்தைக்கு மற்றவர்களோடு பழக அதற்குத் திறமையையும் ஆற்றலையும் அனுபவத்தையும் கொடுக்கின்றது. ஒரு குழந்தையிடம் அன்புகாட்டும்படி தாய்க்கு யாரும் சொல்லிக்கொடுப்பதில்லை. தாயிடம் அன்பு தானாகவே ஊற்றெடுக்கின்றது. தாயின் உடலில் சுரக்கும் அக்சிடொக்சின் என்ற ஓமோன் தாயினை ஏனையவர்களுடனும் தனது குழந்தையுடனும் அன்பாக இருக்க உதவுகின்றது. இது அவர்களை அன்புடன் மட்டுமல்ல தன்னலமின்றியும் இருக்கச் செய்கின்றதென ஆய்வுகள் கூறுகின்றன.

தாய்க்கும் குழந்தைக்குமிடையே பரிணமித்த சுயநலமற்ற அன்பு தற்செயலாக தோன்றியதல்ல. மனிதன் தோன்றியபோது அந்தக்குணம் அவனுக்குச் சாதகமானதாகவும் பயனுள்ளதாகவும் இருந்ததால் அது அவனிடம் நிலைத்து நீடித்து நிற்கின்றது.

மனிதனானவன் கடவுளினுடைய தோற்றத்துடன் படைக்கப்பட்டுள்ளான். மனிதனிடம் கடவுளினுடைய குணங்கள் பிரதிபலிக்கின்றன. கடவுள் உயிர்களிடத்து மிகுந்த அன்புடையவர். கடவுளின் தலைசிறந்த பண்பு அன்பு ஆகும். அன்பே சிவம் என்றார் திருமூலர். அன்பின் மகிமைபற்றி திருவள்ளுவர் தனது திருக்குறளில் நன்கு விபரித்துள்ளார். அன்பிற்காக பலர் ஏங்குவதை நம் கண்முன்னே கண்டிருக்கிறோம். நாம் மனிதர்களிடத்து மட்டுமன்றி சகல உயிரினங்களிடத்தும் அன்பு செலுத்துவோம்.

ஒரு தாயானவள் தனது குழந்தைமீது வைத்திருக்கும் அன்பைக் காட்டிலும் கடவுள்மீது வைத்திருக்கும் அன்பு ஆழமானது. இறை அன்புக்கு எல்லையில்லை. எல்லா மதங்களும் அன்பின் மகிமையைப் போதிக்கின்றன.

"அன்பகத்து இல்லா உயிர்வாழ்க்கை
வன்பாற்கண் வற்ற மரம்தளிர்த் தற்று"

-செல்வி சோபிதா முகுந்தன்-

*பயன்கருதி அன்பு காட்டுவதைவிட அன்பு காட்டாமலிருப்பதுமேல்.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# திருச்சதகம்

(தொடர்ச்சி...

## பத்திவைராக்கிய விசித்திரம்

(திருப்பெருந்துறையிலருளிச் செய்யப்பட்டது)

மறைந்த
– சங்கநூற் செல்வர் பண்டிதர் சு. அருளம்பலவனார் அவர்கள் –
(யாழ்ப்பாணம் – காரைநகர்)

## 07. காருணியத்திரங்கல்

69. சங்கரா போற்றி மற்றோர் சரணிலேன் போற்றி கோலப்
பொங்கரா வல்குற் செவ்வாய் வெண்ணகைக் கரிய வாட்கண்
மங்கையோர் பங்க போற்றி மால்விடை யூர்தி போற்றி
இங்கிவ்வாழ் வாற்ற கில்லேன் எம்பிரான் இழித்திட் டேனே.

**ப-ரை:**

சங்கரா போற்றி- சுகத்தைச் செய்பவனே நினக்கு வணக்கம்; மற்று ஓர் சரண் இலேன் போற்றி- பிறிதொரு புகலிடம் இல்லேன்; ஆதலாற் காத்தருள்க; பொங்கு அரா அல்குல்- சீற்றங் கொண்ட பாம்பின் படம்போன்ற அல்குலினையும், செவ்வாய்- செய்ய வாயினையும், வெள் நகை- வெள்ளிய நகையினையும், கரிய வாள் கண்- கரிய வாள் போன்ற கண்ணினையுமுடைய, கோல மங்கை ஓர் பங்க போற்றி- அழகிய உமையம்மையை ஒரு கூற்றிலுடையவனே நினக்கு வணக்கம். மால் விடை ஊர்தி போற்றி- பெரிய விடையை வாகனமாகக் கொண்டவனே நினக்கு வணக்கம். எம்பிரான்- எங்கள் தலைவனே, இங்கு இவ்வாழ்வு ஆற்ற கில்லேன் இழித்திட்டேன்- இவ்வுலகத்தில் இவ்வுடலோடு கூடி வாழும் வாழ்க்கையைப் பொறுக்க மாட்டுகிலேன்; அதனை வெறுத்து விட்டேன்.

சங்கரா நினக்கு வணக்கம்; பிறிதொரு புகலிடம் இல்லேன் ஆதலாற் காத்தருள்க. மங்கையை இடப்பாகத்திற் கொண்டவனே நினக்கு வணக்கம்; பெரிய விடையை ஊர்தியாகக் கொண்டவனே நினக்கு வணக்கம்; எங்கள் தலைவனே இவ்வுலகத்தில் இவ்வுடலோடு கூடி வாழும் வாழ்க்கையைப் பொறுக்கமாட்டேன்; இதனை வெறுத்து விட்டேன்; ஆதலால் இவ்வுடலை நீக்கி உம்பர் தந்தருள வேண்டும் என்பதாம்.

சரண்- புகலிடம். நின்னையொழிய வேறு புகலிடம் இல்லேன் என்பார். "மற்றோர் சரணிலேன்" என்றார். "போற்றியோ நமச்சிவாய புகலிடம் பிறிதொன் றில்லை" (சத62) என அடிகள் அருளியமையுங் காண்க. கோல மங்கை என இயையும். "கோலமா மங்கை தன்னைக் கொண்டொரு கோல மாய, சீலமே" (நாவு 57:8)எனத் தேவாரத்தும் வருதல் காண்க. இனி "கோல" என்னும் அடையை அல்குல்வாய் நகை கண் என்பவற்றோடு கூட்டினுமையும். பொங்குதல்- வெகுளல். வெகுண்ட காலையே பாம்பு படமெடுத்தலின், "பொங்கரா" என்றார். அரா ஆகுபெயராய் நின்று படத்தையுணர்த்தியது. அரவின் படம் போன்ற அல்குல் என்க, "பைந்நாப்பட அரவேரல்குல் உமை" (உயிருண்ணி 1) என

*ஒருவன் செய்த குற்றத்தையே மறந்து விடுவதுதான் உண்மையான முழு மன்னிப்பாகும்.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வருதலுங் காண்க. "அரவுக்கிளர்ந்தன்ன.... அல்குல்" (நற் 336:1-3) என்றார் பிறரும். கரியகண், வாட்கண் எனத் தனித்தனி இயைக்க. கருமை கண்ணிற்கு இலக்கணமாதல். "ஈசற் கியான் வைத்த வன்பி னகன்றவன் வாங்கிய வென்பாசத்திற் காரென்று. பெருநீளம் பெரும் கண்களே" (109) என திருக்கோவையாரினும் வருதல் காண்க. வாட்கண்- வாள்போலும் கண். திருக்கோவை 48 பேர். மங்கை என்றது உமையம்மையை. ஓர் பங்க என்றது இடப்பங்கை. "மாதிடங் கொண் டம்பலத்து நின்றோர்" (திருக்கோவை 138) என அருளியமையுங் காண்க.

மால்விடை- பெரியவிடை, "வெள்ளிமலை யன்ன மால்விடை யோன்" (திருக்கோவை 128) என்புழி மால்விடை என்பதற்குப் பெரிய விடை எனப் பேராசிரியர் பொருளுரைத்தமையுங் காண்க.

"கயிலை நடந்தனைய உயர்நிலை நோன்றாட்
பிறைசெறிந் தன்ன இருகோட் டொருதிமிற்
பால்நிறச் செங்கண் மால்விடைப் பாக"

திருவிடைமரு 16:4:6

எனப் பதினொராந் திருமுறையினும் வருதல் காண்க. இனி இறைவன் தடமதில்க ளவை மூன்றுந் தழலெரித்த அந்நாளில் திருமால் இடபமதாய்த் தாங்கினனாதலின் மால்விடை என்பதற்குத் திருமாலாகிய விடை எனினுமமையும். ஊர்தி- ஏறப்படுவது வாகனம். "ஊர்தி வால் வெள்ளேறே" புற கடவுள் 3. மங்கையோர் பங்கனாகிய இறைவன் மால்விடையை ஊர்தியாகக் கொண்டமையின் மங்கையோர் பங்க; மால்விடை யூர்தி என்றார். "செங்கண்மால் விடையார் செழும்பொன் மலைவல்லி பங்கினனார்" என்றார் பெரியபுராணத்தும். (உருத்திரபதி3)

இங்கு- இவ்வுலகத்து. இவ்வாழ்வு- உடலோடு கூடிவாழும் இழிந்த வாழ்வு. ஆற்ற கில்லேன்- பொறுக்க மாட்டுகிலேன். "ஒன்றா மிவட்கு மொழில் கில்லேன்" (திருக்கோவை 288) என்புழி மொழிதல் கில்லேன்- மொழிய மாட்டுகிலேன், எனப் பேராசிரியர் பொருளுரைத் தமையுங் காண்க. கில்- ஆற்றலுணர்த்தும் இடைநிலை, இழித்தல்- வெறுத்தல். ஆதலால் இவ்வுடலை நீக்கி உம்பர் தந்தருள வேண்டும் என்பது குறிப்பெச்சம். "உடலிது களைந்திட் டொல்லை யும்பர்தந் தருளு" (சத64) என அடிகள் அருளியமையுங் காண்க.

இதன்கண் இவ்வுலக வாழ்க்கையைப் பொறுக்கமாட்டேன்; இழித்திட்டேன். ஆதலால் இவ்வுடலை நீக்கி உம்பர் தந்தருள வேண்டும் என்பதனால், காருணியத்திரங்கல் என்னும் ஏழாம் பத்து நுதலிய பொருள் போதருதல் காண்க. 65.

**70. இழித்தனன் என்னை யானே எம்பிரான் போற்றி போற்றி**
**பழித்திலேன் உன்னை என்னை ஆளுடைப் பாதம் போற்றி**
**பிழைத்தவை பொறுக்கை யெல்லாம் பெரியவர் கடமை போற்றி**
**ஒழித்திடிவ் வாழ்வு போற்றி உம்பர்நாட் டெம்பி ரானே.**

**ப-ரை:**

யானே என்னை இழித்தனன்- யானே என்னை இழிவுபடுத்தினேன்; எம்பிரான் போற்றி போற்றி- எங்கள் தலைவனே வணக்கம் வணக்கம்; உன்னைப் பழித்திலேன்- ஆண்டவனாகிய நின்னை இகழ்ந்திலேன்; என்னை ஆளுடைய பாதம் போற்றி- அடியேனை ஆளாகவுடைய

*பாராட்டுவதற்கு கை குலுக்கியவரை மறந்தாலும் பாராட்டுதலுக்கு கை கொடுப்பவரை மறக்காதே.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நின் திருவடிகளுக்கு வணக்கம் பிழைத்தவை எல்லாம் பொறுக்கை பெரியவர் கடமை போற்றி. பிழையாகச் செய்த குற்றங்களையெல்லாம் பொறுத்துக் கொள்ளுதல் பெரியோராகிய நின்போல்வார்க்குக் கடமையாகும்; நினக்கு வணக்கம். உம்பர் நாட்டு எம்பிரானே- மேலாகிய சிவலோகத்துள்ள எங்கள்- தலைவனே; இவ்வாழ்வு ஒழித்திடு போற்றி- இவ்வுடலோடு கூடி வாழும் இவ்வாழ்க்கையை ஒழித்தருள்க நினக்கு வணக்கம்.

யானே என்னை இழித்தனன்; எங்கள் தலைவனே நினக்கு வணக்கம் வணக்கம்; ஆண்டவனாகிய நின்னைப் பழித்திலேன்; என்னை ஆளாகவுடைய நின் திருவடிகளுக்கு வணக்கம்; பிழையாகச் செய்த குற்றங்களையெல்லாம் பொறுத்தல் பெரியவர் கடமையாகும்; நினக்கு வணக்கம்; உம்பர் நாட்டு எம்பிரானே; இவ்வுடலோடு கூடிவாழும் இவ்வாழ்க்கையை ஒழித்தருள்க; நினக்கு வணக்கம் என்பதாம்.

இழித்தனன் என்னை யானே என்றது, நின்னால் ஆட்கொள்ளப்பட்டு ஆன்மாவாகிய என்னியல்பை அறிந்த பின் என்னை யானே இழிவுபடுத்தினேன் என்பதாம். உன்னைப் பழித்திலேன் என்றது இழிவுடைய என்னை ஆட்கொண்டருளிய நின் பேரருளைப் பழித்திலேன் என்பதாம்.

ஆளுடைப்பாதம் என்பதற்கு ஆட்கொண்டருளிய பாதம் எனினுமாம். இறைவன் திருவடியைக் காட்டி அடிகள் ஆட்கொண்டருளியமையின் இங்ஙனம் கூறினார். "பெருந்துறை யிற் கண்ணார்கழல் காட்டி நாயேனை யாட்கொண்ட, அண்ணாமலையானை" (அம்10) என அடிகள் அருளியமையுங் காண்க.

பிழைத்தவை என்றது நின் அடிமையாகிய யான், என்னை இழிவுபடுத்தியது நின் அடிமைத் தொண்டினையும் இழிவுபடுத்தியதாகும். அங்ஙனம் இழிவுபடுத்தியதாகிய அப்பிழை என்றவாறு. பிழைத்தவை யெல்லாம் எனக் கூட்டுக பொறுக்கை பெரியவர் கடமை என்றது அப்பிழைகளைப் பொறுத்துக் கொள்ளுதல் பெரியார் கடமையாதலின் பெரியவனாகிய நீயும் அடியேன் செய்த பிழைகளைப் பொறுத்தருள வேண்டும் என்பதாம். "பொறுப்பரன்றே பெரியோர் சிறு நாய்கள் தம் பொய்யினையே" (நீத்6) என அடிகள் பிறாண்டு அருளியமையுங் காண்க.

"பிழைத்ததெலாம் பொறுத்தருள் செய் பெரியோ னென்னும்"
நாவு 245:5.

"உன்பாலன்பர் பிழைபொறுத்தி யென்பதும்
பெரியோர் நின்றன் கடனன்றே" நாவு 261-7.

எனத் தேவாரத்தும்,

"சிறியவர் ஒரு பிழை செய்யின் மேலவர்
பொறையொடு பின்னரும் போற்ற லல்லதை
இறையதும் வெகுள்வரோ" சூரனமைச் (170)

எனக் கந்தபுராணத்தும்,

"பெரியவ சிறியேன் செய்த பிழை பொறுத் தருளென் றன்பிற்
றிருவடி பரவி" 12:11.

என நம்பி திருவிளையாடற் புராணத்தும் வருவனவும் ஈண்டு அறியற்பாலன. பிழைத்தவை பொறுக்கை பெரியவர் கடமை என்றதனால் பிழை செய்தவர் சிறியவர் என்பது பெறப்படும். பெரியோர் பொறுப்பரன்றே சிறியோர்கள் பிழைத்தனவே" எனத் தஞ்சை வாணன் கோவையினும் (397) வருதல் காண்க.

*வீரம் என்பது உடலின் தன்மையன்று, ஆன்மாவின் தன்மையே ஆகும்.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒழித்திடு இவ்வாழ்வு என்றார் இவ்வுடலோடு கூடிவாழும் வாழ்க்கை திருவடியை எய்துதற்குத் தடையாக இருத்தலினால் உம்பர் நாடு என்றது எல்லாவுலகங்களுக்கும் மேலாகிய சிவலோகத்துள்ள இறைவனே எமக்குத் தலைவன் என்பார் "உம்பர் நாட்டெம்பிரானே" என்றார்.

இதன்கண், "ஒழித்திடிவ் வாழ்வு" என வேண்டிக்கொள்ளுதலால் காருணியத்திரங்கல் என்னும் ஏழாம்பத்து நுதலிய பொருள் போதருதல் காண்க. 66. (தொடரும்..

## கீழே இறங்கு

பாரதப் போர் முடிவில் கிருஷ்ணர் தேரில் அமர்ந்தபடி, "அர்ஜுனா! போர்தான் முடிந்துவிட்டதே! இனியும் ஏன் நின்று கொண்டிருக்கிறாய். தேரை விட்டு இறங்கு!" என்றார்.

"மைத்துனா! நீ என்னை போரில் வெற்றிபெறச் செய்தாய். மகிழ்ச்சி! ஆனால் வெற்றி பெற்றவனை, தேரோட்டிதான் கையைப் பிடித்து இறக்கிவிட வேண்டும் என்ற சம்பிரதாயம் உண்டே! அதை மறந்துவிட்டாயோ! அப்படிச் செய்வது எனக்கு பெருமை அல்லவா! நீயோ என்னைக் கீழே இறங்கு என்று ஆணையிடுகிறாய். இது என்ன நியாயம்!"

அர்ஜுனனின் வார்த்தைகளை கிருஷ்ணர், காதில் வாங்கிக்கொண்டதாகவே தெரியவில்லை. "தேரை விட்டு இறங்கு!" என்றார் கண்டிப்புடன். வருத்தத்துடன் அர்ஜுனன் கீழே இறங்கினான். அப்போது அவர், "தேரின் பக்கத்தில் நிற்காதே! சற்று தள்ளி நில்!" என்றார் அதட்டலுடன்! அர்ஜுனனால் கிருஷ்ணரின் அதட்டலைப் பொறுத்துக்கொள்ளவே முடியவில்லை. வெற்றிபெற்ற மகிழ்ச்சிகூட மனதை விட்டு அகன்றுவிட்டது. ஒன்றும் புரியாதவனாய் தள்ளி நின்றான்.

வாடிய முகத்துடன் நின்ற அவனைக் கண்டு புன்னகைத்த கிருஷ்ணர், தேரிலிருந்து குதித்து ஓடிச் சென்று, அர்ஜுனனை இறுகக் கட்டியணைத்துக் கொண்டார். அந்தக் கணமே தேர் தீப்பற்றி எரிந்தது. "பார்த்தாயா? தேர் எரிகிறது! அதனால் தான் உன்னை இறங்கச் சொன்னேன்!" என்றார் புன்முறுவலுடன். "தேர் ஏன் எரிந்தது?" அர்ஜுனன் ஏதும் புரியாமல் கேட்டான்.

"அர்ஜுனா! போர் புரியும்போது கௌரவர்கள் உன்மீது பல அஸ்திரங்களை ஏவினர். அவற்றின் சக்தி அளவிட முடியாதது. தேரில் நானும், தேர்க்கொடியில் அனுமனும் இவ்வளவு நேரம் அதை தடுத்துக்கொண்டிருந்தோம். அதனால், அவை வலிமையற்றுக் கிடந்தன. தேரை விட்டு நான் குதித்ததும் தேர்க்கொடியில் இருந்து அனுமனும் புறப்பட்டுவிட்டான். அஸ்திரங்களின் சக்தி தலைதூக்கியது. தேர் பற்றி எரியத் தொடங்கிவிட்டது.

உண்மை இப்படி இருக்க, நீயோ போரில் வெற்றிபெற்ற உன்னைக் கௌரவிக்கவில்லை என்று வருத்தப்படுகிறாய். வெற்றி பெற்றதும் "நான்" என்னும் ஆணவம் உனக்கு வந்துவிட்டது. ஆணவம் அழிவுக்கு வழிவகுக்கும் என்பதை மறந்துவிடாதே" என்று அறிவுரை கூறினார். தேர் பற்றி எரிந்ததுபோல, அர்ஜுனனிடம் இருந்த ஆணவமும் பற்றி எரிந்து சாம்பலானது.

இறைவன் காரணமில்லாமல் நமக்கு கஷ்டம் எதையும் தருவதில்லை. ஒவ்வொரு கஷ்டத்திலும் நமக்கான நன்மை ஒளிந்துகொண்டு இருக்கிறது என்பதைப் புரிந்துகொண்டால் எந்தத் துன்பமும் நம்மைப் பாதிக்காது.

*கடவுளுக்கு அடுத்தபடியாக நேரத்தை மதித்தல் ஒழுக்கமுறையில் உயர்ந்த விதியாகும்.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நல்லது தீயது என்ற மர்மத்தை விளக்குவது எப்படி?

– **திரு பூ.க. இராசரத்தினம்** அவர்கள் –

ஒரு நாணயத்துக்கு இரண்டு பக்கங்கள் இருப்பது போன்று உலகில் நல்ல செயல், தீய செயல் இருப்பதாகப் பலரும் நம்புகிறார்கள். ஏன் மனிதன் நல்ல, கெட்ட குணங்கள் உடையவனாகக் காணப்படுகின்றான். இந்தக் கேள்விக்கு ஞாபகத்துக்கு எட்டாக் காலம் தொடக்கம் விடைகாண முயன்று வருகிறார்கள். உதாரணத்தை நாடலாம். மகாபாரதத்தில் - துரோணாச்சாரியார், தர்மனை, " ஒரு கெட்டவனை அழைத்துவா" என்றார். தருமன் தேடியபொழுது ஒரு கெட்டவனையும் காணமுடியவில்லை. ஆசிரியரிடம் சென்று "எல்லோரும் நல்லவரே" எனக் கூறினார். துரியோதனை, ஒரு நல்லவனை அழைத்து வருமாறு கேட்டார். துரியோதனன் தேடியபொழுது ஒரு நல்லவரையும் அவனால் காணமுடியவில்லை. அவன் ஆசிரியரிடம் "எல்லோரும் கெட்டவரே" என்றான்.

மனிதன் மற்றவர்களைப் பார்ப்பதிலும் பார்க்கத் தன்னை நன்கு அறியவேண்டும். மற்றவர்களின் தீய எண்ணங்களைப் பார்வையிட மனிதனைப் பார்க்கும்போது தனக்கு பொருத்தமானவற்றை நீக்கி நல்லவற்றைப் பார்க்க முடியும். இதனால் மனம் தெளிவடைகிறது. சுருங்கக் கூறின் நமது எண்ணங்கள் தான் நம்மை உருவாக்கி இன்றைய நிலைக்கு கொண்டு வந்திருக்கின்றன.

மனிதனின் கட்டுப்பாட்டுக்கு அப்பாற்பட்ட இயற்கைக் காரணிகளால் ஒன்றும் அறியாத அப்பாவிகள் துன்பப்பட வேண்டும். ஏன் பிள்ளைகள் மாற்றுத்திறனாளிகளாகப் பிறக்கின்றார்கள். இயற்கை அழிவுகள், பஞ்சம், கற்பழிப்பு, கொலை, போர், போதைவஸ்து உபயோகம் ஆட்கொல்லி வைரஸ்சுகள் போன்றவை தோன்றுகின்றன. இதற்கு நீண்ட காலமாக விடையளிக்க முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. ஆய்வு தொடர் கதையாகவுள்ளது.

தீயவற்றை இரண்டாகப் பிரிக்கலாம். ஒன்று பண்பற்றது மனித கட்டுப்பாட்டுக்கு அப்பாற்பட்ட காரணியாகும். இரண்டாவது மனிதப் பண்பு நல்லது தீயது - மனிதாபிமானத்தைக் கொண்டு அளவிடலாம் என்பது சான்றோர் வாக்கு.

பண்பற்ற செயல் - மனிதன், மனிதனுக்கு புரிகின்ற மனிதாபிமானமற்ற செயலாகும். கெட்டவையின் மூலங்கள் என்னவாகயிருப்பினும் வேதனை ஏற்படுத்துபவை. நாம் வேதனை, துன்பம் பற்றி அதிகம் கூறலாம். இவையெல்லாம் நன்மைக்கே. தவிர்க்க முடியாதவை. எப்படியிருந்த பொழுதிலும் விடை சரியென வாதாட முடியாது. "மனித மனத்தை இயங்கச் செய்வதற்கு இரண்டு சக்திகள் உண்டு. நல்லதை விரும்புதல் தீயதைக் கண்டு அஞ்சுதல்" என ஆங்கில அறிஞன் சாமுவேல் யோன்சன் கூறியுள்ளார். "ஒவ்வொருவரும் தன் உள்ளத்தில் என்னத்தை காவுகிறானோ அதைத்தான் காண முடியும்" என அறிஞர் காதே கூறியுள்ளார். தீயதை ஒழிக்க ஆண்டவன் சக்தியற்றவனா?

*வலிமை, துணிவு, உண்மை, மரியாதை, தன்னடக்கம் கொண்டவனே உண்மையான வீரன்.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அப்பாவிகள் அனுபவிக்கும் துயரத்தை ஆண்டவன் அறிவானா? என்ற கேள்விகள் எழத்தான் செய்கின்றன. இன்றுவரை தீங்கின் யதார்த்தத் தன்மையை விளக்குவதற்கு ஒருவரும் தெளிவான விளக்கத்தைக் கொடுக்கவில்லை எனலாம். ஆனால் தீய செயல்களில் இருந்து விடுதலை பெற முயற்சிக்க வேண்டும். உதாரணமாக இவ்வுலகில் பிரார்த்தனையால் பெறமுடியாதது ஒன்றும் இல்லை என ஓர் ஆங்கிலக் கவிஞன் பிரார்த்தனையின் மகிமை பற்றி நன்கு விளக்கியுள்ளார்.

"உள்ளம் என்ற பெட்டி திறந்து விட்டால் உயர்ந்த கடவுள் நம்மை நாடி வருவார்- திருமூலர்

நம்பிக்கை உள்ளவனுக்கு எல்லா வாயில்களும் திறந்து வரவேற்பளிக்கும். ஒரு தந்தை தன் மகனுக்கு உபதேசம் செய்தார். "மகனே தும்பிக்கையில் நம்பிக்கை வை" ஆனால் அவன் தந்தையின் சட்டைப் பைக்குள் நம்பிக்கையை வைக்கத் தவறவில்லை. தந்தை தன் மகனை நன்கு நெறிப்படுத்தி வளர்க்கவில்லை என்பதை உணர்ந்தார்.

ஒருவனாவது நல்ல அறிகுறிகளை, வாய்ப்புக்களை மாயை எனக் கூறமாட்டான். நாம் ஆக்கபூர்வமாக எல்லாம் நன்மைக்கே என்று சிந்திக்கப் பழக வேண்டும். உலகப் புகழ்பெற்ற சேக்ஸ்பியரின் கருத்தை ஆதாரமாகக் கருதலாம். "தீயது நல்லது என்று ஒன்றில்லை. உமது சிந்தனை அப்படிக் கூற வைக்கின்றது" எனவே நல்லது தீயது என்பது யதார்த்தத்தின் ஒரு பகுதியே.

உதாரண வாயிலாக விளக்குவது பொருத்தமாகும். ஒருவனுக்கு வலி ஏற்படுகின்றது. இது தீங்கானது அல்லது தீயது எனக் கூறலாம். ஆனால் இதன் செயற்பாட்டை அவதானித்தால் இதன் நன்மைகள் உணரலாம். சிறுநீரகத்தில் வலி ஏற்பட்டால் சிறுநீரகம் சரியாகத் தொழிற்படவில்லை என்பதை அறியலாம். இது பயனுடைய அறிகுறியே தவிர தீயதல்ல. இது ஒரு எச்சரிக்கை. சிறுநீரகம் சீராகத் தொழிற்படுவதற்கு நாம் நடவடிக்கைகளை எடுக்கத் தூண்டப்படுகின்றோம். கடவுள் உதவி புரிவார் என்ற நம்பிக்கையோடு மாத்திரம் இருக்காமல் சிகிச்சை பெறுவதற்குரிய ஒழுங்குகளை மேற்கொள்ளவேண்டும். இந்த நோய் ஏற்பட்டமைக்குரிய காரணங்கள் அறிய வேண்டும். தடுப்பு முறைகளைக் கையாள வேண்டும். குணமடைந்த பின் நல்ல பாடத்தைக் கற்றுக் கொண்டதாக மகிழ்ச்சி அடைய வேண்டும்.

துன்புறுத்தல் கருத்துடையது. விளையாட்டில் ஆரோக்கியமான போட்டி தேவை. கிரிக்கெற் விளையாட்டில் பந்து வீசுபவன் துடுப்பால் அடிப்பவனை வெளியேற்ற வேண்டும். இது வேதனையைக் கொடுக்கும் என்று கருதினால் விளையாட்டில் ஏற்படும் இன்பத்தைப் பெறமுடியாது. வெற்றியும் தோல்வியும் தவிர்க்க முடியாதவை. வாழ்வில் வெற்றி பெறுவது மட்டும் நமது வேலையல்ல தொடர்ந்து வரும் தோல்விகளையும் உற்சாகம் குன்றாமல் ஏற்றுக்கொள்வதும் நமது வேலைதான்.

உலக செயற்பாடுகள் எமக்கு நல்ல பாடங்கள் கற்பித்த வண்ணம் உள்ளன. வாழ்க்கை ஒரு பஞ்சு மெத்தையல்ல. இன்ப துன்பங்களை அனுபவித்தால்த்தான் வாழ்க்கை சுவையாக அமையும். ஒரு சமூகமாக நாம் வாழும்பொழுது, அன்பின் சேவையின் மகிமையை உணர வாய்ப்புண்டு. உதாரணமாக ஆலயத்தில் பலர் தொண்டு புரியும்பொழுது ஐக்கிய வாழ்வின் சிறப்பை உணரலாம். சேவையின் மகிமையை உணரலாம் வாழ்வு வரட்சியடையாது குளிர்ச்சி பொருந்தியதாக அமையும். அதிக அனுபவங்களைப் பெற்று நல்வாழ்வு வாழ வழிவகுக்கப்படும். வாழ்வின்

*அதிகாரத்தினால் சாதிப்பதைவிட அன்பினால் எளிதில் சாதித்து விடலாம்.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அர்த்தம் புரியும். தனிநபர் குடும்பமாகவும் குடும்பம் சமூகமாகவும் விசாலமடைந்து மனிதப் பண்புகள் சீரும் சிறப்பும் அடைய, நல்லதைப் புரிய, தீய எண்ணங்களை வெறுக்க வழிவகுக்கும் என்பதை பல அறிஞர்கள் தமது படைப்புக்கள் மூலம் விளக்கியுள்ளனர். மாற்றுத்திறனாளிகள் நல்வாழ்வு வாழ அரசாங்கமும் சமூகமும் ஆக்கபூர்வமான திட்டங்களை வகுத்து பாரிய முன்னேற்றங்கள் ஏற்பட்டவண்ணமுள்ளன.

சிலர் முற்பிறவியின் பயனால் இந்தப் பிறவியில் நல்ல வாழ்வை மேற்கொள்ள முடியவில்லை என வேதனைப்படுகிறார்கள். இதற்குத் தெளிவான விளக்கம் கிடைக்கவில்லை என்று கருதினாலும் பரவாயில்லை. ஆனால் நாம் ஒரு நல்ல பாடத்தைக் கற்க வாய்ப்புண்டு. ஒவ்வொரு செயலுக்கும் சமமாக மறுசெயல் உண்டு என்ற கோட்பாட்டுக்கு அமைய, தீய செயல்களைப் புரியாமல் விடுவதற்கு ஒரு கட்டுப்பாடாகிறது. எனவே நாம் மேலே குறிப்பிட்ட தீய ஒவ்வாத பாவச் செயல்களைப் புரியாது வாழ்வோமேயானால் எல்லாம் நன்றாகவே அமையும். அழிவுகரமான ஆயுத உற்பத்தி வல்லரசாக வேண்டும் என்ற ஆதிக்க வெறி, சுயநலப் போக்கு போன்ற தீய செயற்பாடுகள் பூண்டோடு அழிக்கப்படவேண்டும். "யாதும் ஊரே யாவரும் கேளிர்" என்ற கனியன்பூங்குன்றனாரின் வார்த்தைகள் யாவருக்கும் நல்ல பாடத்தைக் கற்பித்த வண்ணமிருக்க வேண்டும். "வறுமை எமது எதிரி." என இந்திரா காந்தி கூறியுள்ளார். வறுமைக்கு உரிய காரணங்களை இனங்கண்டு ஆவன செய்ய வேண்டும். இது மனித வர்க்கத்தால் தீர்க்க முடியும். மனிதனால் படைக்கப்பட்ட பிரச்சினைகள் மனிதனால் தீர்க்க முடியும். ஏன் கடவுளை இழுக்க வேண்டும். இயற்கை விதிகளை நாம் பின்பற்ற வேண்டும். நாம் ஒவ்வொருவரும் திருந்த உலகம் தானாகவே திருந்தும் ஒரு சிறு சம்பவம் ஊடாக நன்கு விளக்கலாம். ஒரு தந்தை தீய பழக்கத்துக்கு அடிமையானார். பல வகையான பானங்கள் இருந்தபோதும் மதுபானத்தை விரும்பினார். தினமும் மாலையில் தனது அறைக்குள் சென்று தாழ்ப்பாளிட்டு மது அருந்தி வந்தார். அவருடைய ஏழு வயது உடைய மகனுக்கு இது மர்மமாகக் காணப்பட்டது. ஒருநாள் அறைக்குள் சென்று ஒழிந்திருந்தான். தந்தை ஒரு பாத்திரத்தில் மதுவை ஊற்றியபொழுது மகன் அதை குளிர்பானம் என நினைத்து எனக்கும் வேண்டும் என்றான். கோபம் அடைந்த தந்தை மேசையின் மேலிருந்த ஒரு சிறிய உலகப் படத்தை நான்கு துண்டுகளாக்கி அவற்றை சரிப்படுத்தி ஒட்டி வரும்படி கட்டளையிட்டார். மகன் வெளியே சென்று மூன்று நிமிடங்களுக்குள் அவற்றைச் சீர்ப்படுத்திக் கொடுத்தான். உலகக் கண்டங்களை எப்படி ஒழுங்குபடுத்தக் கூடியதாக இருந்தது என ஆச்சரியப்பட்டார். மறுபக்கத்தில் மனிதனின் படம் இருந்தது. மனிதனின் பாகங்களை முறைப்படி ஒழுங்கு செய்தான். மனிதனின் தோற்றம் சரியாக அமைந்ததனால் உலகப் படம் சரியாக அமைந்தது. மனிதன் திருந்த, உலகம் திருந்தும் என்ற பாடத்தைக் கற்றார். அன்று தொடக்கம் அத்தீய பழக்கத்தைக் கைவிட்டார்.

எனவே நாம் ஒவ்வொருவரும் நல்லதை எண்ணி மனச்சாட்சியின்படி நல்லவற்றைப் புரிந்தால் தீயவை அற்றுப்போவதற்கு வாய்ப்புக்கள் அதிகமாகும். நல்லவை, தீயவை என்ற மர்மத்தை விளக்கி கடவுளில் பழிபோடுவதை நிறுத்தி தீயசெயற்பாடுகளில் இருந்து விடுதலை பெற்று "நிறைந்த மனம், நெடிய வாழ்வு" என்ற மகுடவாக்கியத்துக்கு அமைய நலமுடன் வாழ முயல்வோமாக.

*தூய்மை, பொறுமை, விடாமுயற்சி, அன்பு இவையே வெற்றிக்கு வழி.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

(தொடர்ச்சி...

# உமாபதி சிவம் அருளிய திருவருட்பயன்

(விரிவான பொருளுரையும் தெளிவுரையும்)

முனைவர் ஆ. ஆனந்தராசன்



## 83. இரு வகை நடனம்

ஊன நடனம் ஒருபால்; ஒரு பாலா
ஞான நடம்; தான் நடுவே நாடு.

### பொருள்:

சிவாய நம என்னும் திருவைந்தெழுத்தில் ஊன நடனத்தைக் குறிக்கும் பொருள்கள் ஒரு பக்கம் சேர்ந்திருக்க, ஞான நடனத்தைச் செய்யும் பொருள்கள் மற்றொரு பக்கம் சேர்ந்திருக்க, அந்நடனங்களால் பயன் அடைகின்ற உயிர் அவ்விரு பொருள்களுக்கும் இடையே நிற்கும். மாணவனே, இதனை ஆராய்ந்து உணர்வாயாக.

### சொற்பொருள்:

ஊன நடனம்- உயிருக்கு அறியாமையைச் செய்யும் பொருள், ஒருபால்- ஒரு பக்கம் சேர்ந்திருக்க, ஞான நடம்- அறிவைத் தரும் பொருள்கள், ஒரு பாலா- மற்றொரு பக்கம் சேர்ந்திருக்க, தான்- அந் நடனங்களால் பயன் அடைகின்ற உயிர், நடுவே- அவ்விரு வகைக்கும் இடையே நிற்கும், நாடு- மாணவனே, இதனை ஆராய்ந்து உணர்வாயாக.

### விளக்கம்:

**நடனம்:**

இறைவனது செயலை நடனம் என்றும், கூத்து என்றும் குறிப்பிடுவர். அனைத்துப் பொருள்களும் தத்தம் நிலைக்கேற்பச் செயற்படுமாறு இறைவனே அவற்றை இயக்கி வருகின்றான். உலகை இயக்குகிற செயல் அவனுக்கு விளையாட்டுப்போல அத்துணை எளிதாய் இருத்தலின் அதனைக் குறிக்கும் வகையில் அவனது செயலை நடனம் என்றனர். நடனம் என்பதற்கு விளையாட்டு என்பது பொருள்.

பெத்தமும், முத்தியும் இறைவன் செய்யும் செயலேயாதலின் அவையிரண்டும் நடனம் எனப்படும். பெத்தத்தில், ஆணவ மலத்தோடு மாயை கன்மம் என்னும் இரு மலங்களையும் சேர்த்து உயிர்கள் இம் மும் மலங்களிற் பட்டுச் சுழலுமாறு செலுத்துகின்றான். மும்மலப் பிணிப்பினால் உயிர்கள் அறிவு மயங்கித் தம்மையும், தலைவனாகிய இறைவனையும் அறியாது ஞானத்தில் வேட்கையின்றி உலக வாழ்வில் அழுந்தி நிற்கும். இத்தகைய

*பொறுமை என்பது தன்நிலையில் தாழ்வு வராது பாதுகாத்துக்கொள்வதே ஆகும்.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பெத்தம் ஊன நடனம் எனப்படுகிறது. ஊனம் என்பதற்கு ஞானம் இல்லாமை என்பது பொருளாகும்.

ஊன நடனத்திற்பட்ட உயிர்கள் படிப்படியே அறிவு முதிர்ச்சி பெற்றுத் தம்மையும் தலைவனையும் உணரும் பக்குவத்தை எய்தும். அப்படிப்பட்ட உயிர்களுக்கு ஞானத்தைத் தந்து, மலம் மாயை கன்மங்களை நீக்கி இன்பப்பேற்றை வழங்குவான். இச் செயல் ஞான நடனம் எனப்படுகிறது. இதன் பொருள் வெளிப்படை.

சிவனது சத்தி ஊன நடனத்தில் திரோதான சத்தியாயும், ஞான நடனத்தில் அருட்சத்தியாயும் செயற்படும். சிவசத்தி ஒன்றேயாயினும் செயல் பற்றி இவ்வாறு இரண்டாக வகுத்துக் கூறப்படுகிறது. திரோதான சத்தி மறைத்தலையும், அருட்சத்தி அருளலையும் செய்யும்.

**ஊன நடனம்:**

திருவைந்தெழுத்தில் ஊன நடனத்தைக் குறிப்பவை நம என்னும் எழுத்துக்களாகும். அவற்றால் குறிக்கப்படுபவை திரோதான சத்தியும், ஆணவ மலமும் ஆகும். ம என்பது ஆணவ மலத்தால் நிகழும் அறியாமையைக் குறிக்கும். அறியாமை நிலை கேவலம் எனப்படும். ந என்பது திரோதான சத்தி மாயை கன்மங்களைக் கூட்டி உயிரினது அறிவை விளக்கி வரும் நிலையைக் குறிக்கும். இதனால் உண்டாவது சிற்றறிவாகும். இவ்வாறு சிற்றறிவு விளங்கும் நிலை சகலம் எனப்படும்.

உயிர் அறிவு அறியாமைகளாகிய சகல கேவலங்களை மாறி மாறி அடைந்து வருகிறது. நமது உணர்வில் அவ்வவ்போது நிகழ்கின்ற நினைப்பும், மறப்பும் சகல கேவலங்களேயாகும். புறவுலகில் வருகின்ற பகல் இரவுபோல நமது உணர்வில் மாறி மாறி வருகின்ற பகலும் இரவுமாக இந்த அறிவு அறியாமைகளைக் குறிப்பிடுவர்.

இவ்வாறு உயிர் ஆணவத்தில் அழுந்தி அறியாமையுடையதாயும், மாயை கன்மங்களில் அழுந்திச் சிற்றறிவுடையதாயும் உலக வாழ்வில் உழன்று வரும். இங்ஙனம் உழலும்படியாகச் செய்வது இறைவனது திரோதானசத்தி. இங்ஙனம் செய்யும் செயலை ஊன நடனம் என ஆசிரியர் குறிக்கின்றார். பெத்த நிலையில் உள்ள உயிர்களெல்லாம் இந்த ஊன நடனத்திற் பட்டுச் செல்வனவேயாம்.

**ஞான நடனம்:**

திருவைந்தெழுத்தில் ஞான நடனத்தைக் குறிப்பவை சி, வா என்னும் எழுத்துக் களாகும். அவற்றால் குறிக்கப்படுபவை சிவமும் அருட்சத்தியுமாகும். சி என்பது சிவத்தில் அழுந்தி நிற்கும் இன்புறு நிலையைக் குறிக்கும். வா என்பது அதற்கு முன்னே அருளை உணர்ந்து அதில் அழுந்தி நிற்கும் அருள் நிலையைக் குறிக்கும்.

முத்தி நிலையில் உயிர் சகல கேவலங்களிற் செல்லாமல், அ∴தாவது அறிவு அறியாமைகளை மாறி மாறி அடையாமல், ஒரு நிலைப்பட்ட மெய்யுணர்வினை உடையதாய், சிகார வகாரங்களால் குறிக்கப்படும் ஆனந்தநிலை, அருள் நிலை என்பவற்றில் நிற்கும்.

இவ்வாறு கேவல சகலங்களாகிய இரவு பகலை நீக்கி உயிரை இரவு பகலற்ற இடமாகிய திருவருளில் உய்த்து, அருள் நிலை ஆனந்தநிலை என்பவற்றில் நிலை பெறுத்தும் இறைவனது செயலை ஞான நடனம் என ஆசிரியர் குறிக்கின்றார்.

*பழி வாங்கினால் எதிரியும் நாமும் சமம், மன்னித்தால் எதிரியைவிட உயர்வோம்.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**தான் நடுவே நாடு:**

மேற்கூறியவற்றால், உயிர்களாகிய நமக்கு இரண்டு வகையான சார்புகள் உள்ளன என்பது புலனாகும். ஒன்று ஞான நடனத்தால் குறிக்கப்படுகின்ற இறைவன் என்ற சார்பு. பிறிதொன்று, ஊன நடனத்தால் குறிக்கப்படும் உலகம் என்ற சார்பு.

இவற்றுள் இறைவனாகிய சார்பே நமக்கு நிலையானது; அன்று தொட்டு இன்று வரையிலும், இனிமேலும் என்றென்றும் இருப்பது. நம்மைவிட்டு நீங்காதது. உலகச் சார்போ நிலையில்லாதது; இடையில் வந்தது ஆகலின் நம்மை விட்டு இடையிலேயே நீங்கக் கூடியது.

அறியாமை காரணமாக நாம் இவ்வுலகச் சார்பையே நமக்குரிய உண்மையான சார்பு என்று தவறாக எண்ணுகிறோம். உலகியல்மீது மேலும் மேலும் பற்றுக்கொள்கிறோம்; உலகச் சார்பினால் விளையும் துன்ப நிலையை உணராதிருக்கிறோம்.

இறைவன் நடுவு நிலைமையன்; நல்லார்க்கும் பொல்லார்க்கும் நடுநின்ற நடுவே என்று பாடினார் ஓர் அருளாளர். உயிர்களாகிய நாமும் ஒருவகையில் நடுநிலைமை உடையவர்களே! எவ்வாறெனில், ஒரு பால் அறிவே வடிவான இறைவன். மற்றொருபால் அறிவில்லாத சடவுலகம். இவ்விரண்டிற்கும் நடுப்பட்டவர்கள் நாம். அவ்வகையில் நாம் நடுநிலைமையாளர்தாமே! "தான் நடுவே நாடு" என்று ஆசிரியர் குறிப்பிட்டது இதனையேயாம். தான்- சீவன்; அல்லது ஆன்மா.

"திருவெழுத்து அஞ்சில் ஆன்மா
திரோ தம் மாசு அருள் சிவம் சூழ்
தர, நடு நின்றது"

எனச் சிவப்பிரகாசச் செய்யுளிலும் ஆன்மா நடுநின்றமையை ஆசிரியர் குறித்திருத்தல் காணலாம்.

**ஒரு குறிப்பு:**

இறைவனது செயலை நாதன் நடம் எனப்பெயரிட்டு முதன் முதல் விளக்கிய பெருமை மனவாசகங் கடந்தார் என்ற ஆசிரியரைச் சாரும். உண்மை விளக்கம் என்ற அவரது நூலில் இறைவனது நடனத்தை அழகிய முறையில் விளக்கிக் காட்டும் செய்யுட்கள் பல உள்ளன. ஆயின் அவர் ஊன நடனம், ஞான நடனம் என்ற குறியீடுகளை எடுத்துப் பயன்படுத்தியதாகத் தெரியவில்லை.

அவருக்குப் பின் வந்த உமாபதி சிவமே இறைவனது செயலை ஊன நடனம் என்றும் ஞான நடனம் முதன் முறையாகக் குறிப்பிட்டவராவர். அவர் இக்குறியீடுகளை அமைத்துக் கொள்வதற்குப் பின்வரும் திருவாசகப் பாடலே அடி நிலையாய் அமைந்ததோ என்று எண்ண வேண்டியுள்ளது.

ஊனை நாடகம் ஆடுவித்தவா உருகி நான்
உனைப் பருக வைத்தவா
ஞான நாடகம் ஆடுவித்தவா நைய வையகத்
துடைய விச்சையே

(திருச்சதகம் 95)

*இறைவனுக்குச் சொந்தமான எதையும் பணம்கொடுத்துப் பெற முடியாது.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 84. இரு வகை நடனத்தாலும் விளைவன

விரிய ம ந மேவி யவ்வை மீளவிடா; சித்தம்
பெரிய வினை தீரின் பெறும்.

**பொருள்:**

ஆணவ மலமும், அது காரணமாகத் திரோதான சத்தி, மாயை, கன்மம் ஆகியனவும் உயிரை அழுத்தமாகப் பற்றியுள்ளன. அவை தம்மினின்றும் உயிரை மீண்டு போக விடுவதில்லை. உயிரினது பழவினை முழுதும் கெடுமாயின் உயிர் ஞானம் பெற்று அவற்றினின்றும் மீண்டு சிவத்தை அடையும்.

**சொற்பொருள்:**

ம,ந- முன்னர் ஆணவ மலமும் பின்னர் அது காரணமாக வந்து சேர்ந்த திரோதாயி, மாயை, கன்மம் என்பனவும், விரிய மேவி- அழுத்தமாகப் பற்றி நின்று, யவ்வை- உயிரை, மீளவிடா- தம்மினின்றும் மீண்டு போக விடமாட்டா, தம் பெரிய வினை தீரின்- உயிரினது பழவினையாகிய சஞ்சிதம் முழுதும் கெடுமாயின், சி பெறும்- உயிர் ஞானம் பெற்று அவற்றினின்றும் மீண்டு சிவத்தை அடையும்.

**விளக்கம்:**

மவும், நவும் மேவி யவ்வை மீளவிடா எனவும், சியைப் பெறும் எனவும் எழுத்துக் களாகக் கூறினாராயினும், அவை குறிக்கும் பொருள்களையே நாம் கொள்ளுதல் வேண்டும். இனி வரும் செய்யுட்களிலும் இவ்வாறே கூறிச் செல்வார் ஆசிரியர்.

"யவ்வை ம ந விரிய மேவி மீளவிடா; தம் பெரிய வினை தீரின் சி (யைப்) பெறும்" எனக் கொண்டு கூட்டிப் பொருள் கொள்ளுதல் வேண்டும்.

சிவாய நம என்னும் திருவைந்தெழுத்தைப் பின்னிருந்து நோக்கி 'ம ந மேவி யவ்வை மீளவிடா' எனக் கூறியிருப்பது நோக்குதற்குரியது.

**யவ்வை மீள விடாமை:**

ஆணவம், கன்மம், மாயை என்னும் மும்மலங்கள் நாமறிந்தவை. அவற்றோடு மற்றும் இரு மலங்களைச் சேர்த்து மலங்கள் ஐந்து என்பதும் உண்டு. அ∴து எவ்வாறு எனின், மாயை என்பது புலப்படாதது; அது காரண நிலையில் இருப்பது. அதிலிருந்து தோன்றிய காரியங்களே தனு, கரண, புவன போகங்கள் என்னும் நான்குமாகும். காரிய நிலையில் உள்ள இந்நான்கையும் மாயேயம் என வேறொரு பெயரால் குறிப்பர். மாயேயம் ஆகிய உடம்பும், இந்திரியங்களும், நிலமும் நிலத்திற் காணப்படும் பிற நுகர்ச்சிப் பொருள்களும் ஆகிய இவையெல்லாம் உயிரறிவை மயக்கி வருதல் கண்கூடாகத் தெரிந்த உண்மை. ஆகவே, இம் மாயேயங்களையும் ஒரு மலமாகக் கூறுகிற வழக்கு ஏற்பட்டது.

இனி, ஐந்தாவதாகச் சொல்லப்படுகிற மலம் ஒன்று உண்டு. அ∴து இறைவனது சத்தியேயாகும். அதனைத் திரோதம், திரோதானம், திரோதாயி, திரோதானசத்தி என்றெல்லாம் குறிப்பர். இ∴து உண்மையில் மலம் அன்று. இதுவே மேற்கூறிய மலங்கள் தம் தொழிலைச்

*அன்பு ஒரு முதலீடு, எவ்வளவு போடுகின்றாயோ அதற்கேற்ப நலம் பெறுவாய்.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செய்யுமாறு அவற்றை ஏவி நடத்தி வருகிறது. இவ்வாறு மலங்களைச் செயற்படுத்தி, அம்மலங்கள் உயிரறிவை மறைத்து மயக்குவதற்குச் சார்பாய் இருப்பது பற்றியே திரோதான சத்தியும் ஒரு மலமாகச் சொல்லப்படுகிறது. திரோதான சத்தி உண்மையில் அருளே ஆயினும் அஃது உயிர்களை மலங்களின் வழியாகச் செலுத்திப் பிறவித் துன்பத்திற் படுத்தலின் அதுவும் மலம் எனப்படுவதாயிற்று.

எனவே, ஆணவம், கன்மம், மாயை, மாயேயம், திரோதானம் ஆகிய ஐந்தும் மலங்களாதல் இனிது விளங்கும். இம்மலங்கள் ஐந்தினையும் ஆசிரியர் உமாபதிசிவம் தமது சிவப்பிரகாச நூலில் பின்வருமாறு ஒருங்கே தொகுத்துக் கூறியுள்ளார்.

மோகம் மிக உயிர்கள் தொறும் உடனாய் நிற்கும்
மூல ஆணவம் ஒன்று; முயங்கி நின்று
பாகம் மிக உதவு திரோதாயி ஒன்று;
பகர்மாயை ஒன்று; படர்கன்மம் ஒன்று
தேகமுறு கரணமொடு புவன போகச்
செயலாரும் மாயேயத் திரட்சி ஒன்று
ஆகமலம் ஐந்தென்பர்; ஐந்தும் மாறாது
அருள் என்பது அரிதென்பர் அறிந்துளோரே.

இச் செய்யுளில், மலங்களுள் முதலாவதாகிய ஆணவத்தை முதலிற் குறிப்பிட்டார். அம்மலத்தைப் பாகப்படுத்தி உதவும் திரோதான சத்தியை இரண்டாவதாகக் குறிப்பிட்டார். பின்னர் திரோதான சத்தியின் வழிப்பட்டனவாகிய மாயை கன்மம் மாயேயங்களைக் குறிப்பிட்டார். இவ்வைந்தும் உயிரைவிட்டு நீங்காத வரையில் இறைவனது அருளைப் பெறுதல் இயலாது என்றும் கூறினார்.

இக் கருத்தையே இந்தத் திருவருட்பயன் செய்யுளிலும் சுருக்கமாக அமைத்துள்ளார். மலங்கள் உயிரைத் தம்மினின்றும் போகவிடாமையை எடுத்துக்காட்டி, அம்மலங்கள் தீருமாயின் உயிர் சிவத்தையடையும் என்று கூறியுள்ளார். சிவப்பிரகாசச் செய்யுளில் "ஐந்தும் மாறாது அருள் என்பது அரிது" என எதிர்மறையாகச் சொன்னவர் இங்கு "தீரின் சிவத்தைப் பெறும்" என உடன்பாடாகக் கூறினார் என்பதே வேறுபாடு.

**பெரிய வினை தீர்தல்:**

இங்கு ஓர் ஐயம் எழலாம். எல்லாத் தீமைகளுக்கும் அடி நிலைக் காரணமாக இருப்பது ஆணவமலம். அது நீங்கினாலன்றோ உயிர் சிவத்தைப் பெறுதல் கூடும். அந்த ஆணவ மல நீக்கம் பற்றி ஏதும் கூறாமல் வினை தீருமாயின் சிவத்தை அடையலாம் என்று வினை நீக்கமே இச்செய்யுளில் கூறப்பட்டுள்ளது. இஃது எவ்வாறு பொருந்தும் என்பதே அவ் ஐயம்.

ஆணவத்திற்கும் வினைக்கும் உள்ள தொடர்பு நாம் அறிந்தது. ஆணவமலம் உயிரை உள்முகமாக நோக்கவிடாமல் புறப்பொருள்களையே நோக்கும்படி செய்யும். அவ்வாறு நோக்கி அப்பொருள்களின்மீது விருப்பு வெறுப்புக் கொள்ளும்படி செய்யும். அவ்விருப்பு வெறுப்புக் காரணமாக உயிர் மனம் மொழி மெய்களால் நல்லதும் தீயதுமான செயல்களைச் செய்யும். அச்செயல்களே வினைகள் ஆகின்றன. எனவே ஆணவ மலத்தின்

*செல்வம் அடக்கமான பண்பைச் சிதைக்கும், ஏழ்மை அறிவைச் சிதைக்கும்.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வழிப்பட்டதே வினை என்பது விளங்கும். ஆணவ மலம் உள்ளவரையில் வினையும் உயிரை விடாது பற்றியிருக்கும். ஆணவ மலம் நீங்குதற்குரிய நிலையை அடையு மாயின், அஃதாவது மலபரிபாகம் ஏற்படும் காலத்தில், வினையும் நீங்குவதாகும்.

ஆன்மாவிடத்தில் மலபரிபாகம் முற்ற நிகழ்ந்து, சத்தி நிபாதமும் அதி தீவிரமாய் நிகழும் காலமே ஞானம் பெறுதற்குரிய கால மாகும். அந்நிலையில் ஞானாசிரியர் சஞ்சித கன்மத்தை முற்றிலுமாக எரித்தொழித்து ஆன்மாவை வினைக்கட்டினின்றும் விடுவிப் பார். முத்தி பஞ்சாக்கரத்தை உபதேசித்து, சிவாகமங்களின் ஞானபாதப் பொருளை உணர்த்தி முப்பொருள் இயல்பையும் நன்கு உணரச் செய்வார். இதுவே நிருவாணதீக்கை யாகும்.

வினையானது அறிவை வேறுபடுத் தித் தன் வழியிற் செலுத்துவது ஆகலின், வினை உள்ளவரையில் அறிவு நன்கு விளங் காது. எனவே வினை ஞானத்திற்குத் தடை யாகும். அது பற்றியே ஆசிரியர் சஞ்சித கன்மத்தை முற்றாக நீக்கிப் பின் ஞானத்தை உணர்த்துகிறார். இவ்வாறு ஞானத்திற்குத் தடையாய் இருந்த வினைக்கட்டு ஆணவ மல பரிபாகம் காரணமாக மெலிவடைந்து நிருவாண தீக்கையில் அடியோடு அழியும். அப்பொழுது பொருள்களின் இயல்பு உள்ள வாறு விளங்கும். அவ்வான்மா பொய்யைப் பொய்யென்று கண்டு கழித்து மெய்யாகிய சிவத்தை உணர்ந்து பற்றும். இக் கருத்துப் படவே "பெரியவினை தீரின் சிவத்தைப் பெறும்" என்றார் ஆசிரியர். பெரிய வினை என்றது சஞ்சித வினையாகும்.

ஆணவ மலம் பரிபாகம் அடைந்த வழியே வினை நீங்குவதாகும். எனவே, வினை நீங்குதல் கூறவே, ஆணவமலம் நீங்கு தலையும் கொள்ளுதல் வேண்டும். மேலும் வினை நீங்கவே, அதற்குச் சார்பாகிய மாயை யும் உடன் நீங்குவதாகும். இதுபற்றியே இச் செய்யுளில் வினை தீர்தலையே சிறப் பாக எடுத்துக்கூறி, ஆணவம், மாயை ஆகிய வற்றின் நீக்கத்தையும் பெற வைத்தார் ஆசிரியர் எனலாம்.

ம, ந வால் குறிக்கப்படும் ஊன நடனத்தால் உயிர் உலகியலில் அழுந்தி நிற்கும் என்பதும் பின் பக்குவம் வந்த காலத் தில் ஞான நடனத்தால் அது பயனடையும் என்பதும் கூறப்பட்டன.

(தொடரும்...

**சந்நிதியில் அமர்ந்த பெருமானே**

அழகு மயில்மீது பவனி வருகின்ற
இன்பத் தமிழ் ஞானக் குமரேசா
மழலை முதியோர்கள் மனதில் தினம் நாட
நினைவில் நின்றாடும் வடிவேலா
குலவும் அடியார்கள் குறைகள் தினம் தீர
குன்றில் அமர்ந்தாளும் முருகோனே
வலமு இடமாக தெய்வானை வள்ளியோடு
அமர்ந்திட்ட சந்நிதிப் பெருமானே.

-சின்னப்பு தனபாலசிங்கம்-

*எதிர்காலத்தைத் திட்டமிடுங்கள். ஏனெனில் அதுதான் உங்கள் வாழ்க்கையில் மீதமுள்ள காலம்.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நாம் எங்கே...

– **செல்வி அ. கந்தையா** அவர்கள் –

"மானிடராகப் பிறப்பதற்கே நல்ல மாதவம் செய்திட வேண்டும்" பாடி வைத்தார் பாரதியார். இவ்வுலகில் விலங்குகள், பறவைகள், ஊர்வன இப்படிப் பல உயிர்கள் வாழ்கின்றன. இவைகளையெல்லாம் விட மனிதர் சிறப்பு வாய்ந்தவர்கள் என்பதற்கு ஆறறிவு படைத்தவர்கள் என்பது மனிதப் பிறப்புக்கு ஒரு மதிப்பு - சிறப்பு.

"தீதும் நன்றும் பிறர் தர வாரா" மனிதரது சகல செயற்பாடுகளும் அவர்களா லேயே தேடப்படுகிறது. இதற்கு அடிப்படை யாக அமைவது அறிவு. அறிவு சூரியனைப் போன்றது. உலகனைத்துக்கும் ஒளி கொடுப் பது சூரியன். மனிதருக்குள்ள சிறப்பு பகுத் தறிவு. அந்த அறிவுதான் விலங்குகளிலிருந்து எம்மை வேறுபடுத்துகின்றது. அதுதான்- பகுத்தறிவு. மனிதன் எது நல்லது? எது கெட்டது? என ஆராய்ந்து பார்த்து மனிதன் மனிதனாக வாழத் துணை செய்கிறது.

"மகிழ்ச்சியாக வாழ்வது எப்படி" இந் தப் புதிரை அறிந்துகொள்ள அதிக முயற்சி தேவை இல்லை. உண்மையைப் பேசு. அன்பு ஒன்றே உன் தவமாக இருக்கட்டும். தன்னலத்தை விட்டொழியுங்கள். நேர்மையும், எளிமையும் உன் வாழ்க்கைத் தேரின் சக் கரங்கள் ஆகட்டும். அமைதி உன் உள்ளத் தில் இயல்பாக ஏற்பட்டுவிடும். ரஸ்கின். இவற்றை உணர்ந்து- புரிந்துகொண்டு செயற் பட நல்ல அறிவு வேண்டும். அந்த அறிவை நாம் கல்வியின்மூலம் பெற்றுக்கொள்ள முடியும். நல்லது எது? கெட்டது எது? என்று பகுத்தறிந்து பார்த்துச் செயற்பட எமக்குத் துணைபோவது கல்வி அறிவு. அந்தக் கல் விக்கு ஒருவன் சிறுவனாக இருக்கும்போதே பெற்றோராலும், உற்றாராலும் நல்ல வழிகாட் டலைப் பெற்றுக்கொள்ள வேண்டும். ஒவ் வொரு குடும்பமும் அவர்கள் வாழும் வாழ்க் கை முறைகளைப் பார்த்துத்தான் அவர் தம் பிள்ளைகள் பழகிக் கொள்வர். அன்பு, அரவணைப்பு, பெரியோரை மதித்தல், விட்டுக்கொடுப்பு, பிறர்க்குதவுதல் இன்னோ ரன்ன அனைத்து நல்ல குணங்களும் சிறு வயதில் இருந்தே பிள்ளைகள் மனதில் வேரூன்றக்கூடிய செயற்பாடுகள் ஒவ்வொரு வீட்டிலும் இருக்குமானால் அதைப் பார்த்து வளரும் பிஞ்சு மனங்களில் அவை வேரூன்றி விடும்.

இத்தகைய குணநலன்களோடு பாட சாலையில் அடி எடுத்து வைக்கும் குழந்தை களுக்கு பாடசாலைகள் வழிகாட்டிகளாக விளங்கவேண்டும். பெற்றோருக்கு அடுத்த தாகப் பிள்ளைகள் காண்பது ஆசிரியர்களை. ஆசிரியர்களது அன்பு கலந்த வழி நடத்தலும், கற்பித்தலும் மாணவரை வலிமையுறச் செய்யும். நல்ல அறிவு வளர நல்ல ஆசான் வேண்டும். முன்பு- இப்போ என்ற பேதமின்றிச் செய்யும் தொழிலே தெய்வம் என்பதற்கிணங்க ஆசிரி யர்களின் பணி, மிகச் சிறந்த பணியாகும். நல்ல பாடங்களைக் கேட்டு, நாளைய பொழு துக்குத் தம்மைத் தயார் செய்துகொள்ள வேண்டிய வயது பள்ளி வயதுதான். பாட சாலைகள் சிற்பக்கூடங்கள் எனலாம். கல்வி யோடு சேர்த்து எமது பண்பாட்டு விழுமியங் களும் மாணவப் பருவத்தில் பதியப்பட

*உன் எண்ணம்தான் உனது வாழ்க்கை, உன் வாழ்க்கைதான் உனது எண்ணம்.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வேண்டும். ஒன்றோடொன்று சேர்ந்து வளர்ந்து வந்தால் எமது சமூகத்தில் எவ்வித சரிவை யும் வேண்டத் தகாத செயற்பாடுகளையும் எம்மால் காணமுடியாது.

வேஷத்தில் ஒருபோதும் வாசம் இல்லை. தம்மை நல்லவர்போல் காட்டிக் கொண்டு வேண்டத்தகாத செயற்பாடுகளில் ஈடுபட்டுக் கொண்டிருப்பதால்தான் சமூகம் தன் பெருமையை இழக்கிறது. "சுயநலம்" இல்லாமல் பணிபுரியும் இலட்சிய வாழ்க் கையே கர்மயோகம் என்றார் சுவாமி விவே கானந்தர். நான் எனது இதைவிட்டு விலகாது நிற்பதால் புரிந்துணர்வு ஒற்றுமை, விட்டுக் கொடுப்பு எதுவுமே இன்றி குறுகிய ஒரு வட்டத்துக்குள் மட்டும் வாழும் வாழ்வாக உள்ளது. எம் சமூக வாழ்வு, கூட்டுக் குடும்ப மாக வாழ்ந்து மகிழ்வோடு சிறுபிள்ளைகள் அம்மம்மா, அப்பம்மா- தாத்தா, பாட்டி- மாமா, மாமி- சித்தப்பா, பெரியப்பா- சித்தி, பெரியம்மா- அக்கா, அண்ணா என்று ஒருவ ரோடொருவர் அன்பாகவும் பாசமாகவும் பரி ணமித்த எம் சமுதாயம் இன்று தானுண்டு, தன் குடும்பமுண்டு என்று மாறியதால்தான் நல்லது எது? கெட்டது எது? என்று தெரி யாமல் நம் சிறிசுகள் தடம்புரள்கின்றனர் எனலாம்.

தென்னிந்திய சினிமாவும், சின்னத் திரையும் வீட்டில் பெரியோர் தொட்டு சிறி யோர் வரை நேரத்தை விழுங்குகிறது. பிள்ளை களை நெறிப்படுத்த பெற்றோருக்கு நேர மில்லை. பிள்ளைகளுக்கோ நாம் இப்படி வாழ்ந்தால் என்ன? என்ற எண்ணம் அவர் களைத் தடம்புரளச் செய்கிறது எனலாம். இந்த நேரத்தை வாசிப்பதில் பயன்படுத் தினால் மனிதன் பூரணமடைவது மட்டுமன்றி மற்றவரையும் வழிப்படுத்தலாம். பெருமள வான நூல்கள் நன்கொடையாக வழங்கப்படு கிறது என்று செய்திகள் சொல்கின்றன. ஒவ்வொருவரும் தம்மை வளம்படுத்த எம் மொழியில் இல்லாத புத்தகங்களா? வாசிப் பதால் மனிதன் பூரணத்துவமடைகிறான் என்ற வாக்கு எவ்வளவு சிறப்பானது.

தொடர்ச்சியாக ஒருவர்மேல் ஒருவர் குறை சொல்லிக்கொண்டு வீணே காலத்தைக் கழிக்காமல் எல்லோரும் ஒன்று சேர்ந்து பண் பாட்டு விழுமியங்களையும் எம் எதிர்காலச் சமுதாயத்தையும் பேணிக்காக்க உழைத் தால் நிச்சயம் மீட்சி உண்டு. "அடிமேல் அடி அடித்தால் அம்மியும் நகரும்" அல்லவா? அன்பான, பண்பான, நேர்மையான, விட்டுக் கொடுப்பு மிக்க, சுயநலமற்ற ஒரு சமுதாயத்தை நாம் சந்திக்க அனைவரும் முயற்சி செய் வோமாக.

பிறக்கும்போதே எழுதப்பட்டது இறப்பு. உறவினர் இறப்பதற்கே கதறும் நாம் நாளை நமக்கும்தானே இறப்பு. அந்த இறப்பு நியதி மாறாத இறப்பாக வேண்டும் என்ற நீதியை நெஞ்சில் பதித்தால் இறப்பும் நமக்கு இனிமை யாய்த் தெரியும். வையத்துள் வாழ்வாங்கு வாழ்ந்தால் அனைவரும் மகிழ்வோடு வாழ லாம்.

சிந்திப்போம், செயற்படுவோம்.

**குளத்தில் நீர் கலங்கி இருந்தால் அதில் நாம் நமது பிரதி பிம்பத்தைப் பார்க்க முடியாது. அதுபோல் நமது மனம், காமம், கோபம், மற்றும் ஏராளமான உலக ஆசைகள் போன்றவற்றால் சஞ்சலப்பட்டுக்கொண்டே இருந்தால், நமக்குள் இருக்கும் இறைவனைக் காணமுடியாமல் இருக்கும்.**

*பிறருக்கு அள்ளி அள்ளிக் கொடுக்கின்ற கையே தன் சேமிப்பிலும் அக்கறை காட்டும்.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆனந்தக் கிருஷ்ணனின் அற்புத லீலைகள்

(தொடர்ச்சி...)

– திருமதி சிவனேஸ்வரி பாலகிருஷ்ணன் அவர்கள் –

## மண்ணை உண்ட மாயன்

"நாவற்பழம் வாங்கலையோ" எனக் கூவிய வண்ணம் வந்த நாவற்பழம் விற்கும் கிழவியை, "அம்மா! எனக்கு நாவற்பழம் தருவீங்களா?" எனக் கையேந்தி நின்றான் மாயக் கிருஷ்ணன். "நான் தருகிறேன். நீ போய் தானியம் கொண்டு வா" எனக் கிழவி கூற, கிருஷ்ணன் வீட்டிற்குள்ளே போய் தானியம் எடுத்துக் கொண்டு வந்தான். வரும்போது கிருஷ்ணா எங்கே போகிறாய் என யசோதை கேட்க, கையைப் பின்னே ஒளித்துக்கொண்டு போகிறான். பின் நந்தகோபரும் கிருஷ்ணா எங்கே போகிறாய் எனக் கேட்க, கையைப் பின்னால் ஒளித்துக்கொண்டு போகும்போது கையை முன்னும் பின்னும் ஆட்டியதில் தானியம் எல்லாம் சிதறுண்டு போய்விட்டது. கிழவியிடம் போய் தானியம் இந்தா எனக் கையைக் காட்ட, கிழவி தானியம் எங்கே எனக் கேட்டு, கையிலிருந்த சங்கு சக்கரத்தைக் கண்டு பரவசமடைந்து, "மைத்தடங்கண்ணி யசோதை வளர்க்கின்ற" இந்தப் பிள்ளையைப் பெறுவதற்கு என்ன தவம் செய்தாளோ எனப் பிரமித்து உருகி நின்றாள். பழங்களை எடுத்து கைநிறையக் கொடுத்தாள். கண்ணன் வாங்கி வாங்கிப் பின்னால் போட கூடை காலியாகி விட்டது. வெறுங்கூடையை கிருஷ்ணா தூக்கி விடு எனக் கிழவி சொல்ல, வெறுங் கூடையைத் தூக்க என்னை அழைக்கிறாயே என்று கூறி கூடையைத் தூக்குவதுபோல பாசாங்கு செய்தான். என்ன ஆச்சரியம்! நாவற் பழங்கள் எல்லாம் முடிந்துவிட்டதேயெனப் பார்க்க கூடை நிறைய தங்கம், மாணிக்கம், இரத்தினங்கள் இருந்தது. பகவானுக்கு நாம் ஒன்று கொடுத்தால், அவன் ஆயிரம் மடங்கு தருவான். நாவற்பழம் கொடுத்த ஏழைக் கிழவியின் வறுமையைப் போக்கி திருவருள் புரிந்து கோடீஸ்வரி ஆக்கிவிட்டான் மாயக் கண்ணன்.



ஒருநாள் இரவு கண்ணனைத் தூங்க வைப்பது யசோதைக்குப் பெரும்பாடாகி விட்டது. அவனோ மாலையில் பசுக்களின் மடியிலே வாயை வைத்து கன்றுக்குப் பதிலாக அந்தப் பசுக்களின் தவத்திற்குப் பயனளிப்பதற்காக வயிறுமுட்டப் பால் குடித்திருக்கிறான். இப்போது தாயாரைத் திருப்திப்படுத்த வேண்டும். யசோதை பிள்ளை பட்டினி கிடக்கக்கூடாது

*பிறர்மீது கருணைகாட்டும் குணம், கடவுள் உங்களுக்கு அளித்திருக்கும் மிகப்பெரிய பரிசு.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்பதற்காக, "ராதா தினமும் பால்குடிப்பதால் தலைமுடி அழகாக நீளமாக இருக்கிறது. நீயும் குடி" என்றாள். அப்படியா! என்று கூறி அவசரமாகப் பாலை வாங்கிக் குடித்துவிட்டு தன் தலைமுடியைத் தொட்டுப் பார்க்கிறான் கண்ணன். அது வளர்ந்துவிட்டதா என்று, அத்தனை வெகுளியான குழந்தை! பாவம்.

யசோதையும் கண்ணனைத் தூங்க வைத்துவிட்டு தானும் தூங்கிவிட்டாள். நடு இரவில் கண்ணன், "சம்போ மகாதேவா" உங்கள் வரவு நல்வரவாகட்டும். வாருங்கள் இங்கு அமருங்கள். அடடா! பிரம்மாவா! வாருங்கள். இங்கு இடது புறத்தில் உட்காருங்கள். கார்த்திகேயா! சௌக்கியமாக உள்ளாயா? எப்படி இருக்கிறாய்? வா, உட்கார்ந்து கொள். "யார் தேவேந்திரனா!" பார்த்து வெகு நாட்களாகி விட்டனவே. ஏன் கண்ணில் காணப்படுவதேயில்லை" என்று தூங்கியவாறு பேசிக்கொண்டிருப்பதைக் கேட்ட யசோதை, "என் மகனுக்கு திருஷ்டி பட்டுவிட்டது. கண்ட நேரத்தில் கண்ட கண்ட இடங்களில் இந்தப் பிள்ளை சுற்றுகிறதே. எதைக் கண்டு பயந்ததோ இப்படிப் பிதற்றுகிறதே" என்று கவலைப்படத் தொடங்கினாள். அவளுக்குத்தானே அந்தப் பிள்ளையின் அருமை தெரியும். அவள் தீயசக்திகளை விரட்ட "தூ,தூ" என்று அதட்டல் போட்டு கண்ணனை மடியில் படுக்கவைத்து அணைத்துக் கொள்கிறாள். இந்த மாயக் குழந்தையை வெகுளி என்று கருதும் அவளல்லவா வெகுளி. அவனது மாயையை அவளால் புரிந்துகொள்ள முடியுமா? பாலகோபாலன் அற்புத லீலைகள் செய்வான்.

ஒருநாள் கண்ணனைத் தூங்க வைக்க முடியாது கடைசியில், "நான் ஒரு கதை சொல்கிறேன். நீ தூங்கு" என்றாள். கண்ணனும் கதை கேட்கும் ஆர்வத்தில் ஒப்புக்கொண்டான். யசோதை கதை கூறத் தொடங்கினாள்.

அயோத்தி என்ற ஊரிலே தசரதன் என்ற அரசன் இருந்தான். கண்ணனும் 'உம்' என்று சுவாரஷ்யமாகக் கதை கேட்கத் தொடங்கினான். அந்த ராஜாவிற்கு ராமன் என்றொரு மகன் இருந்தான். ஒரே ஒரு பிள்ளைதானாம்மா? அவனுக்குத் தெரிந்த கதை அல்லவா! பரதன், லட்சுமணன், சத்ருக்னன் என நான்கு பிள்ளைகள். "உம்". ராமனின் மனைவி பெயர் சீதை. கண்ணன் சிரித்தபடி வெட்கத்தோடு "உம்". தந்தையின் சத்தியத்தைக் காப்பாற்றுவதற்காக ராமன் காட்டிற்குச் செல்ல வேண்டியிருந்தது. கண்ணன் தனியாகவா அம்மா, ராமனுக்குப் பயமில்லையா? ராமனுக்குப் பயமில்லை. ஆனாலும் சீதையும், லட்சுமணனும் உடன் சென்றனர். பல இடங்களில் சுற்றி, "பஞ்சவடி" என்ற இடத்தில் தங்கியிருந்தனர். "உம்". அங்கு இலங்கையின் ராட்சத மன்னன் இராவணன் சீதையைத் தூக்கிக் கொண்டு போய்விட்டான். இதுவரை கதையைக் கேட்டுக்கொண்டிருந்த கண்ணன், சீதையை இராவணன் தூக்கிச் சென்றான் என்பதைக் கேட்டதும், லட்சுமணா! எங்கே என்வில்? எங்கே என்வில்? என்று பதட்டத்தோடு கூறவே யசோதைக்குப் பயமுண்டாகிவிட்டது. அவன் தன் முன் அவதாரக் கதையில் லயித்து, அதனால் ராவணனுடன் போரிட வில் கேட்டான்! எனும் லீலையை அவள் எவ்வாறு அறிவாள்! அந்த நீலமேக ஸ்யாமளவண்ணன், மாயன், மணிவண்ணன், மாயாவதாரக் கிருஷ்ணன், கருங்குழற் குட்டன், கள்ளக் குறும்பன் செய்த மாயா விநோதங்கள் கணக்கிலடங்குமோ!

ஒருநாள் கிருஷ்ணனுடன் விளையாடச் சென்ற சிறுவர்கள் எல்லோரும் யசோதையிடம் ஒரு புகார் கூறினார்கள்.

*மனிதரைப்போல் நடந்துகொள்ளுங்கள். அதுவே மனிதநேயம் நீடிக்க வழி.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பலராமனும் சொன்னான். கிருஷ்ணன் மண்ணைத் தின்றான் என்பது புகார். மண்ணைத் தின்றால் வயிறு என்னத்துக்கு ஆகும். அதட்டி வைப்போம் என்று யசோதை கண்ணனைப் பிடித்துக்கொண்டாள். மிரண்டுபோய் பார்க்கும் குழந்தையை அனுதாபம் காட்டாமல் "ஏன் மண்ணைத் தின்றாய்?" என்று அதட்டினாள். "நான் சாப்பிடவே இல்லை" என்றான் கிருஷ்ணன். "பொய்யா சொல்கிறாய்?" எல்லோரும் சொல்கிறார்கள். பலராமனும் சொல்கிறான் "என்றாள் யசோதை" அம்மா நான் சாப்பிடவே இல்லை. வேண்டுமானால் என் வாயைப் பார் என்றான் அப்பாவியாக. "எங்கே காட்டு பார்ப்போம்". அந்த அப்பாவி செய்யப்போகும் லீலையைப்பற்றி பாவம் அவளுக்கென்ன தெரியும்? கண்ணன் வாயைத் திறந்தான். அண்ட சராசரங்களும் தெரிந்தன. உலகம், ஆகாயம், கடல், மலை, தீவுகள், வாயு, அக்கினி, சந்திரன், நட்சத்திரங்களுடன் ஜோதி சக்கரம் தெரிந்தது. அதோடு கோகுலத்தையும் தன்னையும் பார்த்தாள். அவள் கனவா? தேவ மாயையா? எனக்குப் புத்தி பேதலித்துவிட்டதா என்று பகவானே சரணம் என்ற ஞான தத்துவம் அவளுக்குப் புலப்பட்டது. அடுத்த கணமே பகவான் மாயையை அவள்மீது ஏவ, அவள் அனைத்தையும் மறந்து குழந்தையைப் பாசம் பொங்க மடியில் இருத்தி அரவணைத்தாள்.

கையும் காலும் நிமிர்த்துக் கடாரநீர்
பைய வாட்டிப் பசுஞ்சிறு மஞ்சளால்
ஐய நாவழித் தாளுக்கங் காந்திட
வைய மேழுங் கண்டாள் பிள்ளை வாயுளே.

-பெரியாழ்வார்.

ஆயர்பாடி மாளிகையில் தாய் மடியில் கன்றினைப்போல்
மாயக் கண்ணன் தூங்குகின்றான் தாலேலோ.
அவன் வாய் நிறைய மண்ணை உண்டு மண்டலத்தைக் காட்டியபின்
ஓய்வெடுத்து தூங்குகின்றான் ஆரீரோ
ஓய்வெடுத்துத் தூங்குகின்றான் ஆரீரோ.

(தொடரும்...

## எல்லாம் அவனே சிவனே

பாரொடு பற்பல தெய்வம் - எங்கும்
பரந்து வடிவம் காண்பீர்
சீரொடு உணர்ந்து பார்த்தால் - எல்லாம்
செல்வது ஓரிடம் ஆகும்
வாழ்வொடு பிணைந்த சமயம் - தெய்வ
வழக்கொடு இணைந்து கொண்டது
யாதொரு தெய்வம் கண்டீர் - அங்கே
மாதொரு பாகனே வருவான்.

-வ. யோகானந்தசிவம்-

*துணிந்தவனுக்கு வாழ்க்கை ஒரு கரும்பு. பயந்தவனுக்கு வாழ்க்கை ஒரு வளைக்கமுடியாத இரும்பு.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மனிதப் பதர் ஏழு

– **திரு கே.எஸ். சிவஞானராஜா** அவர்கள் –

அதிவீரராம பாண்டியன் இயற்றிய வெற்றி வேற்கை என்ற நறுந்தொகையில் ஏழு விதமான மனிதர்களைக் குறிப்பாகச் சுட்டிக்காட்டியுள்ளார். இந்த ஏழு வகையானவர்களும் தத்தம் கடமையை மேற்கொள்ளும்போது உன்னதமானவர்களாகவும், அதனைச் செய்யாத விடத்து வெறும் பதராகவே கணிக்கப்படுவார்கள் என்றும் நிரூபிக்கின்றது. பதர் என்பது நெல்லுக்குள் இருக்கும் உதவாத சப்பி என்பது பொருள். அந்த ஏழுபேரும் யாவரெனப் பார்ப்போமே.

1) கொடுங்கோலாட்சியாளன்,
2) நான்மறை ஓதாத அந்தணன்,
3) கொண்ட முதலையே உண்ணும் வியாபாரி,
4) சோம்பியிருக்கும் உழவன்,
5) மனைவியை மறந்தவன்,
6) பிறன்மனை செல்வோன்,
7) அறிவிலியின்கண் ஆயுதமுடையவன்.

இன்னும் பலர் இப்பதரில் அடக்கமுடியுமானாலும் அவற்றைப் பின்னால் பார்க்கலாம்.

முதலாவதாக,

"குடியலைத் திருத்து வெங்கோலோடு நின்ற
முடியுடை இறைவனாம் முர்க்கனும் பதரே"

மக்களைத் துன்பப்படுத்தி, அதிக வரிச்சுமையைச் சுமத்தி, அநீதிகளுக்குப் பொறுப் பாக இருந்து ஆட்சி செய்கின்ற "அரசனாகிய மூர்க்கனும்" நெல்லிற் பதர் போலாவார். வெறும் சப்பிகளே. ஆம்! நம்முலக நாட்டில் யார் யார் என்று நமக்கு நன்றாகத் தெரிகிறது.

இரண்டாவதாக, "நான்மறை ஓதாத அந்தணர்"

"காலையும் மாலையும் நான்மறை ஓதா(த)
அந்தணர் என்போர் அனைவரும் பதரே'

அந்தணர் என்பவர்கள் அறவோர் என்பதனால், காலையும் மாலையும் நான்மறை வேதங்களை ஓதியே தீர வேண்டும். அவ்வாறு ஓதும்போதுதான் நாடும் தழைக்கும். வீடும் தழைக்கும். அறமும் ஓங்கும். எனவே நான்மறை ஓதாத அந்தணர்களும் பதரேயாவர். (எப்படியோ பூசை செய்யும் அனைவருமே நாள்தோறும் வேதமோதி வெண்ணூல் பூண்டு பாதம் தொழுவோர் ஆகையால் நம் நாட்டில் ஓரளவு மண்ணில் நல்ல வண்ணம் வாழ முடிகிறது.)

*செலவுகள் எல்லாவற்றிலும் முதன்மையானது காலத்தை வீணாக்குவது.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மூன்றாவதாக,

வணிகர்களின் செயற்பாடு தொடர்பாக, ஒரு புதிய பார்வையை முன்வைக்கின்றார்.

**"முதலுள பண்டங் கொண்டு வாணிபஞ் செய்து**
**அதன் பயன் உண்ணா வணிகரும் பதரே"**

இது எவ்வாறெனில், முதலாயுள்ள பொருளினைக் கொண்டு, வாணிபஞ் செய்து அதன்மூலம் வரும் இலாபத்தைக் கொண்டு உண்ணாமல், போட்ட முதலையே நாள்தோறும் உண்டு, வாணிபத்துக்கே முற்றுப் புள்ளி வைக்கின்ற வியாபார வணிகரும் பதரேயாவர்.

முன்னைய காலங்களில் வியாபாரம் நடந்ததோ இல்லையோ அற்ப சொற்ப இலாபத்தைக் கொண்டு சிக்கனமாக வாழ்ந்தார்கள். தற்பொழுது சிக்கனம், அறவேயில்லாமல், இலாபமும் அறவேயில்லாமல் போட்ட முதலிலேயே எடுத்து உண்டு சீவிக்கின்ற வணிகர்களும் பதரேயாவர்.

நான்காவதாக,

**"வித்தும் ஏரும் உளவா யிருப்ப**
**எய்த்தங் கிருக்கும் ஏழையும் பதரே!"**

வித்துக்களும், உழவுகின்ற கலப்பையும் தன்னிடம் இருக்கத்தக்கவாறு, அவற்றைப் பயன்படுத்தாது, விதைக்காமல் சோம்பலாய் இருக்கும் உழவனும் பதரேயாவான். எனவே முயற்சி திருவினையாக்கும். முயன்றால் மணிகளே!

ஐந்தாவதாக,

மனைவியை மறந்தவன். எப்படி?

**"தன்மனை யாளத் தாய்மனைக்கு அகற்றிப்**
**பின்பவள் பாராப் பேதையும் பதரே"**

தன் மனைவியை அவளின் தாய்வீட்டுக்கு அனுப்பிவிட்டுப் பின்பு அவளைப் பாராதிருக்கும் அறிவிலியும் நெல்லிற் பதரேயாவான். மனைவி சீர் கொண்டுவரவில்லை என்பதற்காகச் சீக்கிரமே தாய்வீட்டுக்கு அனுப்பிவிடும் சில கணவன்மார்களை நாம் பார்க்கின்றோம். இவர்களும் வெறும் சப்பிகளே! சமூகம் காறித் துப்புகின்ற இந்த நிலையானது இன்று நேற்றல்ல அன்றும் இருந்துள்ளது.

ஆறாவதாக,

"பிறன்மனை செல்வோன்"

**"தன் மனையாளைத் தனிமனை இருத்திப்**
**பிறன் மனைக்கு ஏகும் பேதையும் பதரே!"**

தன் மனைவியைத் தன்வீட்டில் தனித்துத் தவிக்க இருக்கச் செய்துவிட்டு, வேறொருவனது மனைவியை நாடிச் செல்லும் அறிவிலியும் நெல்லிற் பதரைப்போல்வான். உலகத்தில் இதுபோன்ற சப்பிகள் இருப்பதனாலே விளைச்சலும் குறைவடைந்து, வேடதாரிகள் உற்பத்தியாகின்றனர். ஆண்டவன் உடனே ஒன்றுமே பேசமாட்டார். பையப் பையச் சித்திர புத்திரனாரிடம் கலந்துரையாடுவர்.

*இடைவிடாத முயற்சியும் எப்போதும் மலர்ந்த முகமும் அறிவின் அறிகுறிகள்.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஏழாவதாக,

"அறிவிலியும் ஆயுதமும்"

"தன் ஆயுதமும் தன்கையிற் பொருளும்
பிறன் கையிற் கொடுக்கும் பேதையும் பதரே"

தன் தனக்குரிய பாதுகாப்பு ஆயுதங்களையும், தன் வாழ்வுக்குரிய முக்கிய பொருட் களையும் தனது பரம எதிரிக்கே கொடுக்கின்ற அந்த அறிவிலிகளும் நெல்லில் பதர்களே ஆவர்.

இங்கே கூறப்பட்ட ஏழு பதர்களைவிட, இன்னும் பல பதர்கள் ஏராளம் உண்டு. அரசியலிலும் உண்டு. ஆன்மீகத்திலும் உண்டு. பதர்களைப் பிரித்து எடுக்கக்கூடிய படிப்புகள் வரவேண்டும். நெல்லு எது பதர் எது இரண்டுமே ஒன்றாய்த் தெரிகிற கண்கள் இருக்கின்றவரை கட்டிடங்களே நாட்டில் அரசாளும். போரின் காயங்களை ஆற்றாத வரையில், இழந்தவைகளை மீளப் பெறாத வரையில், தலைவனையிழந்த குடும்பங்கள் தவிக்கும் வரையில், பதர்களும் புதர்களுமே நாட்டில் போட்டி போடுவர்.

பொய் சொல்லாதவர் வீட்டில் மட்டுமே உணவருந்துவதைத் தனது விரதமாகக் கொண்டிருந்த துறவி ஒருவர் ஒருநாள் ஒரு கிராமத்துக்கு வந்தார். வந்தவர் உணவருந்துவதற்காக பொய்யே சொல்லாதவர் வீடுதேடி அலைந்தபோது எல்லோரும் ஒரு வீட்டைச் சுட்டிக்காட்டி "அந்த வீட்டில் ஒரு செல்வந்தர் வசிக்கிறார். அறுபது வயதான அவருக்கு நான்கு புதல்வர்கள் உண்டு. ஒரு இலட்சம் வராகம் பொன்னுக்கும் சொந்தக்காரர். வாழ்வில் பொய்யே சொல்லாதவர், ஏழைகளுக்கு உதவக்கூடிய அன்பர்" என்றனர்.

வீட்டுக்குள் நுழைந்த துறவியும் அவர் பொய்யே சொல்லாதவர்தானா என்று சோதிப்பதற்காக "அன்பரே! இன்று உமது வீட்டில் உணவருந்தலாம் என்று நினைக்கிறேன். உம்மைப் பற்றிக்கூறும்" என்றார். சுவாமி "எனக்கு வயசு இப்போ மூன்று வருஷம் ஐந்து மாதம் சொச்சம், எனக்கு ஒரு புதல்வன் இருக்கிறான். 22000 வராகன் பொன் என்னிடமுள்ளது" என்று அந்த செல்வந்தர் தன்னைப்பற்றிக் கூறினார். "பொய்யா சொல்கிறீர்? அயலவர்கள் வேறு விதமாக கூறினார்களே" என்று கோபப்பட்டார் துறவி. அதற்கு செல்வந்தரும் "சுவாமி என்னிடம் எவ்வளவு பொன் இருந்தாலும் நான் ஏழைகளுக்கு அறவழியில் செலவு செய்தது 22000 வராகம்தான், எனக்கு 60 வயதானாலும் நான் நாளொன்றுக்கு ஒன்றரை மணிநேரம் மட்டுமே அவர்களுக்கு உபகாரம் செய்ய முடிகிறது. எனவே அந்த மணிநேரத்தைக் கூட்டிப் பார்த்தால் வருவதே என்னுடைய வயது" என்று கூறி அடுத்து தனது நான்கு பிள்ளைகளையும் அழைத்தார். மூன்று பிள்ளைகள் தந்தையின் அழைப்பைக் காதில் வாங்கவே இல்லை. ஒருவன் மட்டும் ஓடிவந்து தந்தையையும் துறவியையும் வணங்கி நின்றான். துறவிக்கு செல்வந்தரின் உண்மையான நிலை புரிந்து உணவருந்தி மகிழ்ந்தார்.

நமது வாழ்வில் எத்தனை மணித்துளி நேரம் ஏழைகளைப்பற்றி சிந்திக்கிறோமோ அந்த மணித்துளி நேரம்மட்டும்தான் நம்முடைய நேரம். நமது பணத்தில் எவ்வளவு பணத்தை ஏழைகளுக்காக அறவழியில் செலவு செய்கின்றோமோ அதுமட்டுமே நம்முடைய பணமாகும்.

*எளிமையும் கட்டுப்பாடும் நற்பண்பும் சேர்ந்தால் அவற்றை யாராலும் வெல்ல முடியாது.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நித்திய அன்னப்பணிக்கு உதவிபுரிந்தோர் விபரம் (தொடர்ச்சி...)

| | | |
|---|---|---|
| J. சந்திரப்பிரகாசம் ஆசிரியர் | பருத்தித்துறை | 10000. 00 |
| திருமதி அரியமணி ரிச்சாட் நினைவாக | கொழும்பு | 10000. 00 |
| வே. சரவணபவன் | கனடா | 2000. 00 |
| குமாரவேலு சிவக்கொழுந்து | கனடா | 10000. 00 |
| T.R. கனகலிங்கம் குடும்பம் | கொழும்பு-6 | 5000. 00 |
| ந. மனோன்மணி | புங்குடுதீவு | 5000. 00 |
| ந. பவிலாஸ் | மல்லாவி | 10k அரிசி |
| ம. தனுரா | சாவகச்சேரி | 5000. 00 |
| திருமதி K. சிவராஜா | கொழும்பு | 5000. 00 |
| திருமதி பா. அருளாம்பிகை | யாழ்ப்பாணம் | 1000. 00 |
| சி. ஞானாம்பிகை | திருகோணமலை | 500. 00 |
| திரு பாக்கியநாதன் | திருநெல்வேலி | 1புட்டி பருப்பு, 3புட்டி அரிசி |
| வீ. புஸ்பநாதன் | உரும்பராய் | 2000. 00 |
| கஜந்தன் இந்திரா | புலோலி | 5000. 00 |
| ஆ. ஜெயகாந்தன் | கரவெட்டி | 2000. 00 |
| கு. தகீஷன் | வல்வெட்டித்துறை | 5000. 00 |
| சி. ராமசுந்தரி குடும்பம் | இடைக்காடு | 2000. 00 |
| திருமதி புவனேந்திரன் | கொழும்பு | 1000. 00 |
| க. அருந்தவராசா | அளவெட்டி | 500. 00 |
| சி. ராஜேஸ்வரி | நல்லூர் | 1000. 00 |
| பு. தர்ஷன் | கரவெட்டி | 2000. 00 |
| K. அனுசாந்தி | குப்பிளான் | 2000. 00 |
| உமா சுரேந்திரன் | கொழும்பு | 10000. 00 |
| இ. துஷாந்தன் | அச்சுவேலி | 1000. 00 |
| திலகவதி ஜெகராசா | பருத்தித்துறை | 5000. 00 |
| கா. தயாபரன் | கொழும்பு | 6மூடை அரிசி |
| ச. சசியந்தி | கண்டி | 2000. 00 |
| திரு ஞானச்சந்திரன் | கொக்குவில் | 2000. 00 |
| அ. அதீகன் | லண்டன் | 5000. 00 |
| வி. ராஜன் | வதிரி | 6000. 00 |
| A.I. துரைராஜா | மீசாலை | 2000. 00 |
| ச. சரணியா | கரவெட்டி மத்தி | 10000. 00 |
| சின்னத்தங்கம் நினைவாக | கெருடாவில் | 35000. 00 |

*கல்வி என்பது முக்கியமானது மட்டுமல்ல வியத்தகு மாற்றங்களையும் ஏற்படுத்துவது.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| | | |
|---|---|---|
| நே. ஆதித்தன் | நீர்வேலி | 500. 00 |
| தி. மங்கையற்கரசி | உடுவில் | 1000. 00 |
| யோ. நந்தகுமார்மூலம் த. அருளம்மா நினைவாக | கோண்டாவில் | 50000. 00 |
| பே. கிருஷா | கொக்குவில் | 1000. 00 |
| க. ராசதுரை | நீர்வேலி தெற்கு | 1000. 00 |
| ப. திருவேகம்பன் | வட்டுக்கோட்டை | 5000. 00 |
| அ. பஞ்சாட்சரம் | சுன்னாகம் | 500. 00 |
| க. சிவமணி நினைவாக, சி. கந்தையாமூலம் | சுன்னாகம் | 5000. 00 |
| வே. சிவஞானசோதி குடும்பம், பொ. சிவசுப்பிரமணியம் குடும்பம் | சித்தங்கேணி | 1000. 00 |
| சுசீலா நகை மாடம் | பருத்தித்துறை | 100 தேங்காய், 1மூடை அரிசி |
| அ. வைகுந்தன் | புத்தூர் | 1000. 00 |
| திரு குகனேஸ் குடும்பம் | அவுஸ்திரேலியா | 5000. 00 |
| திரு கந்தகுமார் குடும்பம் | அவுஸ்திரேலியா | 5000. 00 |
| S. கஜன் | கனடா | 2000. 00 |
| திருமதி குகநாதன் | நெல்லியடி | 1000. 00 |
| திரு குமாரசாமி குடும்பம் | பத்தமேனி | 1000. 00 |
| S. ஞானம் | சங்கானை | 6000. 00 |
| N. ஜெயக்குமார் | லண்டன் | 5000. 00 |
| திருமதி மனோகரன் | லண்டன் | 2000. 00 |
| மோ. குமார் | லண்டன் | 1000. 00 |
| S. வசந்தகுமாரி | மீசாலை | 1000. 00 |
| சிவசோதிராசா சறோஜினிமூலம் பொ. நல்லையா | கோண்டாவில் (கனடா) | 20000. 00 |
| க. தேவதாசன் | உடுப்பிட்டி | 2500. 00 |
| த. விஜயலெட்சுமி | உடுப்பிட்டி | 1000. 00 |
| மு. யோகராசா | நீர்வேலி | 1000. 00 |
| மா. கருணாநிதி | அச்சுவேலி | 1000. 00 |
| செல்வி பா. ரதிவதனி | தம்பசிட்டி | 5000. 00 |
| S. நாகராஜா | இணுவில் | 5000. 00 |
| பா. பாலச்சந்திரன் மயிலணி | சுன்னாகம் | 1000. 00 |
| S. ராஜநாதன் | உடுவில் | 7000. 00 |
| மு. கௌரிகாந்தன் | கோப்பாய் | 10000. 00 |
| ந. விக்னேஸ்வரன் குடும்பம் | கனடா | 5000. 00 |
| சாவித்திரியம்மா அருணாசலம் | பருத்தித்துறை | 5000. 00 |
| திரு மகேஸ்வரன் (வேல்சாமி) | காரைதீவு | 1000. 00 |
| திரு மகாலிங்கம் | கொழும்பு | 10000. 00 |
| ச. யதுகுலன் ஆத்தியடி | பருத்தித்துறை (மலையக கல்விப்பணி) | 5000. 00 |
| Dr குகனானந்தன் | கோண்டாவில் | மருந்து வகைகள் |

(தொடரும்...

*வாழ்க்கையில் முன்னேற நம்பிக்கையும் திறமையும்தான் தேவை.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மொழியும் வழியும்

– திரு இராமலிங்கம் ஜெயபாலன் அவர்கள் –

இறைவனின் படைப்பில் மனிதனை வேறுபடுத்தியும், உயர்வாகவும் காட்டுவது மொழியறிவு. மேலும் மொழியறிவு மனிதனின் ஆறாவது அறிவாகவும் போற்றப்படுகின்றது. ஐந்து புலன்கள் வழியாக ஐந்து அறிவு முறையே சுவைத்தல், நுகர்தல், (மணத்தல்) பார்த்தல், கேட்டல் மற்றும் உணர்தல் ஆகும். இந்த புலனறிவின் தொடர்ச்சிதான் மொழி யறிவும், ஆனாலும் இவை விசேட விருத்தி அடைந்து உயிரின பரிணாமத்தில், மனிதனுக் குக் கிடைத்த சிறப்பான கொடையென்பதால், ஆறாவது அறிவாகப் போற்றப்படுகின்றது.

இந்த வகையில் இறைவனின் படைப் புக்கள் அனைத்துமே, ஒரே மூலத்திலிருந்து (அணுக்கள்) இருந்து உருவாகிப் பல்வேறு வடிவில் படைப்புக்களை பரிணாமமடையச் செய்தாலும், உயிரினங்கள் பொதுப்பண்பியல்பு காரணமாக தனித்துவப்படுத்தப்படுகின்றன. அடுத்து மொழியறிவு காரணமாக மனிதனும் தனித்துவப்படுத்தப்பட்டாலும் பல்வேறு மொழி களை அவன் பேசுவதால் மொழிகளை அடிப் படையாகக் கொண்டு அவன் பல பிரிவினராக தனித்துவப்படுத்தப்படுகிறான். இந்த மொழிப் பிரிவினைகள், மனிதரிடையே பிணக்குகள் ஏற்படவும், காரணமாய் அமைந்தது. ஆனால் மொழியறிவு மனிதனை இணைந்து செயற்பட வைக்கும் ஒரு கருவியாகவே உருவானது. இவ்வாறு மொழியறிவு மனிதனை இணைக்க வும் பிரிக்கவும் செய்வதால் பரிணாமத்தில் (வரலாற்றில்) இறைவனின் நோக்கத்தை ஆராய்வதே இக்கட்டுரையின் நோக்கம் ஆகும்.

## இயல் இசை நாடகம்:

மனிதனின் அறிவியல் வளர்ச்சி இன்று மிகப்பெரிய பாச்சலாக இருக்கின்றபோதும் மனிதனின் ஆரம்பகாலம் மிக மெதுவான, ஒரு குழந்தைபோல் ஒவ்வொரு அடிகளாக எடுத்து வைக்கப்பட்ட முயற்சியேயாகும். இந்த வகையில் ஓசைகளே சொற்களாக உரு வாகி பின் கோர்வைகளாகி பேச்சு மொழி யானது. இது தனியொருவனுடைய முயற்சி யல்ல, கூட்டு முயற்சி, அதாவது கூட்டாக ஒரு சொல்லுக்குப் பொருள் கண்டு நினை வில் நிறுத்தி, சொல்லோடு சொல் சேர்த்தல் என்பது மிக இலகுவான காரியமாக இருந் திருக்க முடியாது. இதற்குப் பல்வேறு துணை செயல்கள் உதவி புரிந்து இருக்க வேண்டும். இவை முறையே இயல் இசை நாடக மாகும். தவிர இந்தப் பரிணாமத்துக்கு ஆதார மாக இன்றும் முழுமையாக நாகரீகமடை யாத மனித இனக் குழுக்கள் ஆதாரமாகும்.

அதாவது விலங்கு பறவைகளுடன் மனிதன் வாழ்ந்த காலத்தில் வேட்டையாடு தலே பிரதான தொழிலாக இருந்தமையால், விலங்குகள்போல் வேசமிட்டு வேட்டையாடி உண்ணும் தொழில்முறையின் கலைகளை அடுத்த சந்ததிக்கு கற்பிக்க முயன்றமையே மொழிகளின் தோற்றுவாயாக அமைந்தாலும் மனிதன் குழுக்குழுவாக பரந்துபட்ட பூமியில் இடைவெளி காரணமாக பிளவுபட்டு இருந் தமையால் பல்வேறு பேச்சு மொழிகள் உரு வாகக் காரணமாக அமைந்துவிட்டது.

*பரந்த மனப்பான்மை உள்ளவர்களுக்கு உலகம் முழுவதுமே தன் குடும்பம்.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**சித்திரம் ஓவியம் சிற்பம்:**

பேச்சு மொழிபோல் எழுத்து மொழியும் தனி மனித முயற்சியல்ல. கூட்டு முயற்சியின் விளைவு. எழுத்தையும், சொல்லையும், வசனத்தையும் இணைத்து புரிந்து கொள்ள முதலில் தனது மனதில் பட்டதை சித்திரமாக வரைந்து காட்டியும், கைவிரல்களின் சைகைகளை மொழியாக்கிப் பின் ஓவியமாகவும் சிற்பமாகவும் திடமாக உருவாக்கி, சைகைகளைப் புரிந்துகொள்ள வடிவத்தைச் சுருக்கி எழுத்தாக்கி படத்துடன் கூடிய பாடம்போல் படிப்படியாக முன்னேறி, மொழியையும் மொழிமூலமான அறிவையும் பெருக்கிக் கொண்டான்.

**எண்ணும் எழுத்தும்:**

எண்ணைக் கண்டுபிடித்து நாட்காட்டியைக் கண்டு பிடிக்குமுன் ஒரு மனிதன் இன்னொரு மனிதனுக்கு நாட்களை இனம் காட்டி ஒன்றுபட்டு செயற்படவும், சந்திரனின் வளர்பிறை தேய்பிறைகளை நாட்காட்டும் நாட்காட்டியாகவும் நாட்களைத் தொடர்ந்து நினைவில் வைத்துக்கொள்ள சைகை மொழிகளுடன் கூடிய உருவங்களை அமைத்து தலையில் பிறைகளைச்சூடி, சந்திரனின் வளர்பிறை தேய்பிறைகளை எண்ணாகவும் சைகை மொழியுடன்கூடிய உருவத்தை எழுத்தாகவும் கொண்டு பல்வேறு உருவங்களை அமைத்துக் கொண்டாலும், ஆரம்ப காலத்தில் ஒரு வருடத்தை முன்னூற்று அறுபது நாட்களாகக் கொண்டு முன்னோர்களின் நினைவு நாட்களையும் மற்றும் காலநிலை மாற்றங்களின் முக்கிய நாட்களையும் எல்லோருக்கும் அறிவிக்கும் பொருட்டு அந்தந்த உருவங்களுக்கு விழா எடுத்துக் கொண்டாடினார்கள்.

இவ்வாறு மனிதனின் அறிவு பரிணாமமடைய எண்களையும் கிழமை, மாதங்களையும் கண்டுபிடிக்க அவன் உருவங்களின் எண்ணிக்கையை குறைத்துக் கொண்டான்.

**நாளும் கோளும்:**

சந்திரனின் வளர்பிறை தேய்பிறைகளைக் கொண்டு நாட்களை கண்டுபிடித்தது போல் நட்சத்திரங்களைக் கொண்டும் சூரியனின் நிறங்களில் இருந்தும் நேரத்தைக் கணிப்பிட்டுக் கொண்டான். இது காலத்தை இன்னும் குறுகிய வடிவில் கண்டுகொள்ள மனிதனுக்கு உதவியது. இதுவே நாள் கோள் பார்க்கும் முறைக்கும் வித்திட்டது. இதனால் பயிர்களை எந்தெந்த காலநேரத்தில் நடுவதால் அதன் பலன்களை உரிய முறையில் பெறமுடியும் என்பதையும், காலநிலை மாறிப் பயிரிடப்படும் பயிர்கள் பலன் தராததையும் கண்டுகொண்டான். மேலும் மனித இன விருத்தியில் குழந்தைகள் பிறக்கும் காலம் குளிர் மற்றும் வெப்பம் கூடுதலாக இருந்தால் குழந்தையும் தாயும் பல்வேறு நோய்த் தாக்கங்களால் தொல்லைப் படுவதைத் தவிர்க்க நாள் பார்த்து திருமணம் முடிக்கும் முறையையும் உருவாக்கிக் கொண்டான்.

இதுவே நாள்கோள் பார்க்கும் முறைக்கும், வானவியல் ஆராய்ச்சி கண்டுபிடிப்புக்களுக்கும் வித்திட்டது. தவிர இந்த அறிவுபூர்வமான கண்டுபிடிப்புக்களை கற்பனைக்குள் கலந்து அறியும் ஆவலைத் தூண்டி மனிதன் புராண இதிகாசங்களையும் அமைத்துக் கொண்டான்.

**மொழியும் முரண்களும்:**

இறைவன் மனிதனை படைக்கும் போதே மொழியாலும் அறிவாலும் மனிதனை பூரணப்படுத்திப் படைக்கவில்லை. மாறாக பரிணாமத்தின் வழியாக மனிதனின் குரல் வளையையும் மூளையையும், மொழியறிவை

*நம் மனம்தான் வெற்றி, தோல்விகளை நிர்ணயிக்கிறது.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மனிதன் தானே உருவாக்கும் ஆற்றலைக் கொடுத்தது மட்டுமே அதனால்தான் உலகில் பல்வேறு மொழிகள் உருவானது. ஆனால் இறைவன் நினைத்திருந்தால் மனிதரை ஒரே மொழிபேசும் கூட்டமாகப் படைத்திருக்க முடியும். அத்துடன் ஒரே அறிவுள்ள மக்கள் கூட்டமாகவும் படைத்திருக்க முடியும். அவ்வாறே படைத்திருந்தால் மனிதனுக்கு எந்த சுயமுன்னேற்றமும் இருந்திருக்காது. உதாரணமாக மனிதனைவிட சிறந்த ஆற்றலுடன் கண்டம் விட்டு கண்டம் பறக்கும் பறவைகள் தமக்குள் ஒன்றுபட்டுச் செயற்பட அவற்றிடமும் ஏதோ ஒரு மொழியும் அறிவும் இருக்க வேண்டும்.

## ஒரே மொழிக்கொள்கை:

உலகில் மனிதன் பல்வேறு பேச்சு மொழிகளும் எழுத்து மொழிகளும் கொண்டிருந்த மனித நாகரீக ஆரம்ப காலத்தில், ஒரு மொழிக் குழுக்களின் எண்ணங்களை மற்ற மொழிக் குழுமங்கள் புரிந்துகொள்ளாமையால் ஒவ்வொரு மனித இனக்குழுவும் மற்ற மனித இனக் குழுக்களை எதிரிகளாகப் பார்க்கின்ற நிலையும் நர மாமிசங்களும் உண்ணும் காலத்தில் மனித இனக் குழுக்களை இணைத்து அமைதியான சூழ்நிலைகளை ஏற்படுத்த அறிவியல் மற்றும் நம்பிக்கைகளைப் பொதுவாக்கி, ஒரே மொழி பேசும் மனிதக் கூட்டமாக உருவாக்க ஆட்சி அதிகாரத்தின் மூலமே சாத்தியப்படும் என நம்பியமையும்தான் சமஸ்கிருத மொழி உலகெங்கும் பரப்பப்பட்டது. இருந்தாலும் மறைந்திருந்த இயற்கை சார்ந்த வழிபாடுகள் மீள் எழுச்சி பெற்று அறுவகைச் சமயங்களாக உருவானது. இதனால் சமஸ்கிருத மொழி ஆட்சி அதிகாரத்தை இழந்து வழிபாட்டுக்கு மட்டும் உரிய மறை மொழியானது.

## பன்முகத்தன்மையும் புரிந்துணர்வும்:

உலகில் உள்ள முரண்பாடுகள் ஒரு காலத்தில் அச்சுறுத்தலாக இருந்தாலும் பரிணாம வளர்ச்சிக்கு அவை வித்திட்டது தவிர இன்று இருக்கும் முரண் நிலைகள்தான் பன்முகத் தன்மையைப் பேணி மனித சுய அறிவு வளர்ச்சிகளுக்கும் கண்டுபிடிப்புக்களுக்கும் ஒரு சாதகமான சூழ்நிலையை ஏற்படுத்தி இருக்கின்றது. எந்த ஒரே ஒரு கொள்கை ஆட்சியும் முழு உலகத்தையும் ஆக்கிரமிக்க முடியுமாக இருந்தால் மனித சுதந்திரமும் சுய முன்னேற்றங்களும் முழுமையாக முடக்கப்படும் ஆபத்துக்கள் இருக்கின்றது.

## இறைவனும் மொழியும்:

மொழியென்பது பரிணாமத்தால் உருவானது தவிர மனிதன் சுய முயற்சியின் கண்டுபிடிப்பும்கூட. இறைவன் பிறப்பு இறப்பு இல்லாதவன். அவனுக்கு எந்த மொழியும் தேவையுமில்லை. அனைத்தையும் அறிந்தவன் இறைவன். அவனின் உண்மையான மொழி மௌனமும் ஞானமும் மட்டுமே. ஆனாலும் மொழியென்பது சித்தர்களாலும் ஞானிகளாலும் வரலாற்று ஆசிரியர்களாலும் மட்டும் புனிதமாகப் போற்றப்பட காரணமாகவில்லை. மாறாக அரசியலும் ஆட்சி அதிகாரங்களும் கூட மொழிகள் ஒரு சில மட்டும் புனித மொழிகளாகப் போற்றப்பட காரணமாகும். எவ்வாறாயினும் ஒருவரை ஒருவர் உயர்த்தும் தாழ்த்தும் செயலை மொழி செய்யாது இருக்குமானால் எல்லோருக்கும் பொதுவான மொழியில் இறைவனை வழிபடுவது தவறு இல்லை. அல்லது மௌன மொழியே மேல். காரணம் தமிழில் முருகனைத் தமிழர்கள் வழிபடுவது தவறில்லை. ஆனால் தமிழரல்லாதவருக்கு அது கௌரவக் குறைச்சலைத் தரக்கூடாது என்பதை முக்கிய காரணமாகக்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கொண்டு முருகன் வாய்கட்டி மௌனமாகத் தன்னை பூசை செய்யும்படி பணித்துள்ளான். தவிர முருகனை தமிழரல்லாதவர்களும் வழி படுகின்றனர் என்பதும் குறிப்பிடத்தக்கது.

இந்தவகையில் மொழியென்பது உலகில் உள்ள எல்லா அடையாளங்களி லும் மிக முக்கியமான அடையாளம். தவிர மனிதரை ஒருங்கிணைக்கவும் தனித்துவப் படுத்தவும் கூடியதால் வேறுபடுத்தவும் செய் கின்றது. அதாவது ஒரு மொழிக்குழுவின ருடைய பேச்சு மொழி வேற்றுமொழிக் குழு வினருக்கு வெறும் சத்தம் மட்டுமே. அது போல் எழுத்துக்கள் வெறும் கோடுகள் மட்டுமே, ஆனால் சித்திரம் ஓவியம் சிற்பம் எல்லோர் அறிவுக்கும் பொதுவான அடை யாளம். அதுபோல்தான் இயல் இசை நாடக மும், தெரியாத இரு மொழி பேசுகின்றவர் கள் தமது எண்ணத்தை வெளிப்படுத்த சைகைகளையே பயன்படுத்துவர். ஆகவே மொழியென்பது எங்கள் எண்ணத்தை வெளிப் படுத்தும் முக்கிய அறிவியல் கருவியாக இருந்தபோதும் ஆண்டவன் அனைவரது எண் ணத்தையும் அறிவான் என்பதற்கும் மிக முக்கிய அடையாளமே மௌன பூசை யாகும்.

**காமம், வெகுளி, மயக்கம் இவற்றை முக்குற்றங்கள் என்கிறார் திருமூலர். காமம் என்றால் அளவுகடந்த விருப்பம். ஒரு பொருளையோ பதவியையோ எப்படியாவது அடைந்துவிட வேண்டுமென்ற அடக்க முடியாத ஆசைதான் காமம். அந்த ஆசை நிறைவேறவில்லை என்றால் வருவது வெகுளி. அதாவது கோபம். அது ஏமாற்றத்தினால் விளைகிறது. கோபம் வரும்போது நாம் என்ன பேசுகிறோம் என்பது தெரியாமல், அறிவு இழந்து நடந்து கொள்கிறோம். அந்த அறியாமையே மயக்கம் ஆகும். நாம் எதையும் சரியாகவே செய்துகொண்டிருக்கிறோம் என்ற தவறான கருத்தை நம் மனதில் சதா புகுத்திக்கொண்டு இருப்பதுதான் மயக்கம். இம்மூன்று அசுர சக்திகளும் நமது உள்ளங்களில் தங்கி, நம்மைப் படாதபாடு படுத்திக்கொண்டிருக்கின்றன. பெரும்பாலும் அவற்றை நீக்க நாம் முயலுவதில்லை. காமம் இல்லாவிட்டால் இந்த உலகம் ஓர் அடிகூட நகராது என்று இளைஞர்கள் கருதலாம். கோபத்தை வெளியிட வேண்டிய சூழ்நிலை வந்தால், தவறாமல் கோபத்தை வெளியிடு என்கிறார்கள் மனோதத்துவ நிபுணர்கள். "இந்த உலகம் உண்மை. இதில் என்ன மயக்கம் இருக்கிறது. மனிதன் பிறப்பது ஒருமுறைதானே! உலகத்தில் நன்றாக வாழவேண்டும் என்று விரும்பினால், விருப்பப்படி அனுபவித்து வாழ்வதில் என்ன தவறு இருக்கிறது" என்று கேட்கிறது இன்றைய மனித சமுதாயம். ஐம்புலன்களையும் வென்று அதற்கு அப்பாலும் சென்று புகழ்பெற்றவர் திருநீலகண்ட நாயனார்.**

**மரணம் சர்வ நிச்சயம் என்பது தெரிந்திருந்தும் மனிதன் ஆசையாலும், ஆணவத்தாலும் அலைமோதுகிறான். அக்காளை மணந்தவனுக்கு தங்கையும் தேவைப்படுகிறது. ஆயுள் முடியும்போது அரியாசனம் கேட்கிறது. ஆசையின் உச்சம் அழிவுதான் மிச்சம்.**

*புகழை விரும்பாத பொதுநலத்தொண்டன் எவனோ, அவனே உத்தமன்.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

(தொடர்ச்சி...

# மண்டூர்க் கந்தசுவாமி கோயில்

– திரு மூ. சிவலிங்கம் அவர்கள் –

## மண்டூர் கந்தசுவாமி கோயில் கந்தசஷ்டி விழா

தமிழர் வாழும் சைவ உலகில் தெய்வத்தமிழ் முருகனுக்கு அமையும் விழாக்களில் கந்தசஷ்டி விழா சிறப்பானது. முருகன் ஆலயங்களில் நடைபெறும் கந்தசஷ்டி விழாக்காலம் பக்திபூர்வமான வழிபாடுகளும் கந்தபுராணப் படிப்பும் நிறைவு நாளில் சூரன் போரும் நடைபெறுவது இயல்பாகும்.

மண்டூர்க் கந்தசுவாமி கோயிலில் மிகுந்த பக்திபூர்வமான கந்தசஷ்டி விழாக் காலத்தில் (கந்தபுராணம் படிப்பதில்லை. ஆனால்) திருச்செந்தூர்ப் புராணம் படித்துச் சிறப்பான பயன் சொல்லி யாவரையும் முருக பக்தியில் ஆழ்த்தி விடுவர். வள்ளி கதிர்காமச் சூழலில் அவதரித்து மலைக்குகை வீடுகளில் வேடர்களுடன் வசித்த பெண். இதனால் மண்டூரிலும் அயற் கிராமங்களிலும் வாழும் சிங்களப் பெண்கள் இவ்வாலயத்திற்கு வந்து வழிபடுவதுடன் வள்ளி சிங்களப் பெண் என்று கூறியும் பெருமதிப்பளிப்பதையும் காணலாம். இதனால் எம் மக்களிடையே இன உறவு ஏற்படுகிறது.

இதே பக்தி மார்க்கத்தில் இவ்வாலயத்தில் நடைபெறும் கந்தசஷ்டி விழாக் காலத்தையும் அறிவோம். இவ்விழாக்காலம் ஆறு நாட்களும் உபவாசமிருப்போர் முதல் நாளே ஆசாரசீலமாக வந்து இவ்வாலய வீதிகளில் தங்கி உரிய முறைப்படி விரதமிருந்து தமது பக்தியை வெளிப்படுத்துவர். ஒரு வேளைமட்டும் உணவு உண்ணுவோர் காலையில் ஆசாரசீலராக வந்து காலை விழாவில் பங்குபற்றி பிற்பகல் விழாவையும் கண்டு பக்தியை வெளிப்படுத்துவர். இவ் ஆறு நாட்களும் பிற ஊரிலிருந்து வருவோரும் உள்ளூர் அடியார்களும் தமது உபவாச காலத்தில் இவ்வாலய வீதிகளில் இரவு தங்கி வழிபடுவது கண்கொள்ளாக் காட்சியாகும். யாவரையும் பரவசமடையச் செய்யும்.

கந்தசஷ்டி விழா ஆரம்பத் தினத்தன்று சரஸ்வதிக்கென நிறைகுடம் வைத்துப் பூசை முடிந்ததும் புராண படனத் திருவேடு அவிழ்க்கப்பட்டு தவிலடி மண்டபத்தில் புராண படனம் தொடங்கும். புராணம் படிப்போரும் பயன் சொல்வோரும் எதிரெதிரே இருந்து புராண படனஞ் செய்வர்.

மதியவேளைப் பூசைக்காக ஏடு கட்டப்படும். பிற்பகல் மறுபடியும் தொடர்ந்து புராண படனம் நடைபெறும். விரதகாரர் ஆலயம் முழுவதும் அமர்ந்திருந்து செவியாரக் கேட்டின்புறுவர். கோயிலில் தங்கி உபவாசமிருப்போருக்காக புராணபடனம் இரவு 11 மணிவரை தொடரும். முதல் இரு நாட்களும் இவ்வாறு அனுட்டிக்கப்படும்.

மூன்றாம் நாள் ஆலயச் சந்தன மண்டபத்தில் வள்ளி திருமண வைபவத்திற்காக பந்தலிட்டு நன்கு அலங்கரித்து வள்ளிக்காக ஒரு அழகிய பாவை வைக்கப்பட்டிருக்கும். இவ்விழாவை மகிழ்விப்பதற்காக சகல அடியார்களும் இன்சுவைப் பலகார வகைகளைப் பந்தற் கால்கள் முன் குவித்து விடுவர். மேலும் இங்குள்ள சகல சந்நிதிகள் முன்னும்

இறைவழிபாடு இல்லையென்றால் மனதுக்கு அமைதியும் இல்லை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நிறையக் குவித்து விடுவர். இதனைப் பல காரப் பூசை என்பர். பின்பு புராணபடனம் நடைபெறும்.

புராணபடனத்தில் நள்ளிரவுவேளை வள்ளி திருமணப் படலம் வாசிக்கும்வேளை வள்ளியின் திருமணத்திற்கான ஏற்பாடுகள் மிகச் சுறுசுறுப்பாக நடைபெறும். இச்சமயம் இதற்கான குழுவினரால் திருமணத்திற்கான சகல மங்கலப் பொருட்களும் மங்கல வாத்தியத்துடன் மணமேடைக்கு எடுத்து வரப் படும். மங்கலப் பொருட்கள் மங்கல வாத்தியத்துடன் ஆலய உள்வீதி வலம் வந்து சந்தன மண்டபத்தை அடைவது அரிய காட்சி யாகும். தொடர்ந்து கப்புகனாரும் வண்ணக் கரும் சேர்ந்து வள்ளியம்மனுக்கு (பாவைக்கு) தாலி அணிவிப்பர். அப்போது மட்டக்களப் பிற்கே சொந்தமான பெண்களால் ஒலிக்கும் குரவை ஒலியும் மங்கல வாத்தியமும் ஒலிக் கும். அதே வேளையில் பூசைகள் தொடரும்.

கப்புகனாரால் மணப்பந்தலில் வைக் கப்பட்டுள்ள கும்பங்களுக்கு சகல அறு வகைத் தீபங்களாலும் ஆராதிக்கப்பட்டுக் கண்ணூறு சுற்றப்பட்டதும் கூடியுள்ள சக லருக்கும் தாம்பூலம் பலகார வகைகள் வழங்கப்படும். மேலும் இத் திருமண வைப வத்தில் மட்டக்களப்பில் நடைபெறும் திரு மணங்களில் நடைபெறுவதுபோல ஆண் வீட்டார் பெண் வீட்டாரென இரு சார்பாகக் குதூகலத்துடன் தமது பாரம்பரிய முறைப் படி வெகு சிறப்பாக நடாத்துவர். இதன்மூலம் மட்டக்களப்பின் உபசாரப் பண்பாடு நன்கு துலங்கும்.

கந்தசஷ்டி விழாவின் நாலாம் ஐந் தாம் நாட்கள் புராண படனமும் பூசைகளும் சிறப்பாக நடைபெறும். ஆறாம் நாள் காலை புராண படனம் நடைபெறும். பிற்பகலில் விரதமிருப்போர் மட்டுமன்றி ஏனையோரும் நான்கு வீதியும் பொங்கலிட்டு மோதகம் முதலான பலகார வகைகளுஞ் செய்து யாவற்றையும் முருகனுக்குப் படைத்து இன் புறும் வேளை ஆலயத்தில் விடியும் வரை புராண படனம் நீடிக்கும். புராண படனம் முடிந்ததும் ஏடு கட்டப்படும். நிறைவாகப் படைக்கப்பட்ட பொங்கல் பலகாரவகை அவ் விடத்திலேயே யாவருக்கும் வழங்கப்படும்.

விரதகாரர் தமது படையல்களைப் பகிர்ந்தபின் ஆலயத்தின் எதிரிலுள்ள மட்டு வாவியில் கும்பம் சொரிந்து யாவரும் அவ் விடத்திற் தீர்த்தமாடி அதிகாலையிலேயே பாரணை முடித்துத் தமது விரதத்தை நிறைவு செய்வர்.

இவ்வாலயத்தில் முற்கூறிய பெரு விழாக்கள், கந்தசஷ்டி விழாக்கள் வெகு சிறப்புடன் பக்தர்களின் காணிக்கையால் பூரண பொலிவு பெறுவதுமாகும். இவ்வால யத்தில் அடியார்களின் பக்தியால் பிள்ளை யார் விரதம், திருவெம்பாவைத் திருவாதிரை, தைப்பொங்கல், மகா சிவராத்திரி, புதுவருடப் பிறப்பு விழாக்கள் யாவும் வெகு சிறப்பாக நடைபெறும்.

## மண்டூர் கந்தசுவாமி கோயிலின் இதர விழாக்கள்

### 01) திருக்கார்த்திகை விரதம்:

இவ்வாலயத்தில் முருகனுக்குகந்த விழாவான திருக்கார்த்திகை விழா பக்தர்களால் வெகு சிறப்பாகக் கொண்டாடப்படுகிறது. திருக்கார்த்திகையும் பூரணை தினமுமாக அமைந்த அன்று பக்தர்கள் அனைவரும் ஆசாரசீலர்களாக ஆலயத்தை நாடுவர். மாலைவேளைப் பூசை முடிந்ததும் வழமைபோலச் சுவாமியை மறைத்துக்கட்டி மயில்வாகனத்தில் எழுந்தருளச்

*கோபத்தை நயத்தால் வெல்ல வேண்டும், தீமையை நன்மையால் வெல்ல வேண்டும்.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செய்வர். அன்று வள்ளி முருகனை மகிழ்விப்பதன்பேரில் தேனும் தினைமாவும் கலந்து கொடுத்ததைப்போல இவ்விழாவன்று தேனும் தினைமாவும் கலந்து சட்டியில் இட்டு பசுமாட்டின் நறுநெய் விட்டுத் தீபமேற்றுவர். இத்தினத்தில் சுவாமி ஊர்வலம் வரும்போது எண்ணிறைந்த பக்தர்களின் மாவிளக்கின் பேரொளியும் மாவிளக்கின் நறுமணமும் எங்கும் வியாபித்திருக்கும். இறைவனைப்போல எங்கும் நிறைந்த நறுமணத்துடன் தீப ஒளியும் யாவரையும் பார்க்க பரவசமூட்டும் பேறு அற்புதமானதாகும்.

### 02) விநாயகர் விரதம்:

இவ்விரதம் சதயமும் ஆறாம் திதியும் வித்தக விநாயகர் பிறந்த தினத்தில் அமைவது சிறப்பானதாகும். விரதகாரர் தமதில்லத்தில் புனிதமான நிறைகுடம் வைத்து அதனருகே நவதானியம் விதைத்து வழிபட்டபின் இவ்வாலயத்தை நாடுவர். அற்றை நாள் 21 இழை இன்புறக் கட்டி ஒருவேளையுண்டு விரதமிருப்பர். இவ்வாலயத்தில் 21 நாட்களும் விநாயக புராணம் படிக்கப்படும். விரதகாரர் தினமும் பொங்கலிட்டு மோதகமும் அவித்துப் படைப்பர். புராணப்படிப்பும் பூசையும் நிறைவடைந்ததும் படையற்பொருட்கள் யாவும் பிரசாத மாக அனைவருக்கும் வழங்கப்படும். 21ஆம் நாள் நோன்பிருந்து இரவு முழுவதும் விழித்திருந்து வழிபடுவர். அன்றிரவு வாழை மடல்களாலும் தென்னங் குருத்துக்களாலும் அழகிய பூந்தேர் அமைக்கப்படும். அதன் முன் யாவரும் பொங்கிப் படைத்தும் கோயில் கப்புகனாரையும் தமது வீடுகளில் வழிபட்ட பிள்ளையாரையும் வளர்த்த நவதானியப் பயிரையும் வைத்துத் தேரை உருட்டிச் சென்று ஆலய வாயிலிலுள்ள மட்டு வாவியிற் சேர்ப்பர். விரதகாரர்களும் வாவியில் தீர்த்தமாடித் தமது பாரணையை நிறைவு செய்வர்.

### 03) மார்கழித் திருவாதிரை:

திருவாதிரை தினத்தன்று அதிகாலையில் இவ்விழா நடைபெறுவதால் முதல்நாள் பிற்பகல் கோயிலைப் புனிதமாக்கி நன்கு சோடிப்பர். மாலைப் பூசை முடிந்ததும் விழாக் காண வரும் அடியார்கள் யாவரும் தமது வழிபாட்டுடன் அன்றைய விழாவைக் காண ஆவலுடன் இருப்பர். சேந்தனார் இறைவனுக்கு நேரில் களி அமுதை விருந்தளித்து நற்பேறு பெற்றதை உணர்ந்தவர்கள் அன்றைய தினம் தாமும் களியமுது படைக்க விரும்புவார்கள்.

பெருமளவில் தினைமாவும் நறுந்தேனும் பசு நெய்யுடன் கலந்து, களியமுதைத் தயாரிப்பர். ஆலயத்தில் அபிஷேகம் முடிந்து பூசையின்போது நிவேதனமாக அன்று களியமுதைப் படைப்பர். பூசை முடிந்ததும் களியமுது அடியார்களுக்குப் பிரசாதமாகப் பகிர்ந்தளிக்கப்படும். நிறைவில் ஆலய கதவு சாத்தப்படும். கதவு சாத்தப்பட்டால் அன்றைய அதிகாலைப் பூசை நடைபெறாது. (இப்பூசை வேறு நாளில் நிவர்த்தியாகும்.)

### 04) தைப்பொங்கல் பூசை விழா:

இவ்வாலயத்தில் தைப்பொங்கல் விழாவும் பாரம்பரிய முறைப்படி கொண்டாடப் படுகிறது. அன்று சந்தன மண்டப வாயிற்படியில் ஒன்பது இளநீருடன் கோலங்கள் போட்டுக் கும்பங்கள் வைத்து பெரிய பானையில் புத்தரிசியிட்டுப் பொங்கி எடுப்பர். அப்பொங்கலுடன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பல்வேறு பழவகை யாவும் மடைபரவிப் பூசைகள், தீபாராதனை செய்த நிறைவில் கப்புகனார் பூசைப் பிரசாதம் வழங்கியதும் அனைவருக்கும் பொங்கல் பிரசாதமாக வழங்கப்படும்.

**05) மகா சிவராத்திரி விழா:**

இவ்விழாவின் செலவும் ஆலயப் பொறுப்பில் அமையும். விசேடமாக மாலைப் பூசை முடிந்ததும் சிவராத்திரி விரதமிருப்போர் விரதமிருந்து உறங்காது விழிப்பாக இருப்பதன் பேரில் நான்கு சாமப் பூசைக்கும் தாராளமாகப் பத்திரபுஷ்பம் சொரிந்து பூசை நடைபெறும். இடைநேரங்களில் பக்திபூர்வமான புராணங்கள் படித்துப் பயன் சொல்லப்படும். புராண படனஞ் செய்வதற்குப் பேரானது இவ்வாலயமாகும்.

**06) சித்திரைப் புத்தாண்டுப் பூசை:**

இன்றைய முழுச் செலவும் கோயில் கணக்காகும். வருடா வருடம் வழிபடுவோரின் நன்மைகருதி புத்தாண்டின் முதல்நாள் மருத்துநீர் காய்ச்சி வேண்டிய யாவருக்கும் வழங்கப் படுகிறது. வருடப்பிறப்பன்று கோயில் முழுவதும் புனிதமாக்கி மாவிலை, தோரணம் கட்டி அலங்கரிக்கப்படும். பெரிய பானையில் பொங்கலிட்டு பூசைகள் முடிந்ததும் பூசைப் பிரசாதமும் பொங்கல் பிரசாதமும் வழங்கப்படும். வழிபடுவோருக்கு வெற்றிலை பாக்குப் பழத்துடன் கைவிஷேடமும் கப்புகனாரால் வழங்கப்படும். இதே தினத்தில் வண்ணக்கர், பெரிய கப்புகனார், பூசைக் கப்புகனார்மார், கவுடாக்காரர், கங்காணி கோயிலார் என்று ஆறு பிரிவினருக்கும் கைவிஷேடம் வழங்கப்படும். 2001 முதல் 8500/= கைவிஷேடமாக வழங்கப்பட்டது. 2007 முதல் 17000 ரூபாவாக வழங்கப்படுகிறது. இன்றைய கைவிஷேடம் மூலம் வழிபடுவோரும் பணியாளர்களும் முருகப் பெருமானின் அருளால் மனநிறைவடைவர். (தொடரும்...

**சந்நிதியான் ஆச்சிரமம் மேற்கொண்டுவரும் நித்திய அன்னப்பணிக்கும் மற்றும் ஆச்சிரமத்தினால் நடாத்தப்படும் சகல சமுதாயப் பணிகளுக்கும் உதவிபுரிய விரும்புவோர் கீழே உள்ள முகவரியுடன் தொடர்பு கொள்ளவும்.**

**காசுக்கட்டளை**
செ. மோகனதாஸ்
சந்நிதியான் ஆச்சிரமம்,
தொண்டைமானாறு.
தொ.இல – 0213219599, 0212263406

**காசோலை**
செ. மோகனதாஸ்
க.இல – 7342444
இலங்கை வங்கி,
பருத்தித்துறை.

E.mail: suthanm329@gmail.com

*ஏராளமான வாய்ப்புகள் வரும்போது எச்சரிக்கையாக இரு.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வழித்துணை 16

– ஆசுகவி செ. சிவசுப்பிரமணியம் அவர்கள் –

01 நோக்கமின்றி ஒன்றைநாம் தேக்கிவைக்கும் செயலது
தூக்கத்தைக் கெடுக்கின்ற தாக்கத்தைக் கொடுக்கும்
ஆக்கத்திற் கதைநாங்கள் அர்ப்பணிப்புச் செய்திட்டால்
ஏக்கமும் நீங்கிநல்ல ஊக்கமும் பெருகிவிடும்.

02 தாழ்ந்தவர்தான் என்றொருவர் தன்னிலையை எண்ணுதற்கு
வாழ்பவர்கள் வழிவகைகள் வகுத்திடுதல் நன்றன்று
ஊழ்வினை ஒருவர்க்கே சொந்தமான ஒன்றன்று
நாட்பட அதுவேயெமைக் கீழ்நிலைக்குத் தள்ளிவிடும்.

03 வழிபாடு என்பது வியாபாரம் ஆகாது
தெளிவோடு இறைவனைத் தேடிடும் முறையாம்
பழிபாவம் இல்லாத வழிபாட்டில் திளைத்திட்டால்
அழிவில்லாப் பேரின்ப வெள்ளத்தில் நீந்திடலாம்.

04 எங்கே போகின்றீர் என்றொருவர் வினவிவிட்டால்
பங்கம் அப்பயணமென்று பதட்டம்நீர் அடையாதீர்
உங்களுக்கு அதுவேதான் வழித்துணையாய் மாறிடலாம்
மங்கலம் என்றதற்கும் மகிழ்வோடு பதிலளிப்பீர்.

05 பின்னால் நின்றொருவர் உமையழைத்தார் என்பதனால்
இடையிலே இடையூறு வருமென்று எண்ணாதீர்
இடையூற்றைத் தடுப்பதற்கே பின்னின்று அவரழைத்தார்
என்றெண்ணி நடந்துவிடும் இடையூறு விலகிவிடும்.

06 பல்லிசொன்னால் பலித்துவிடும் என்றுமட்டும் நீங்கள்
சொல்லித் திரிவதில் அர்த்தமில்லை அறிந்திடுவீர்
வல்லோனார் ஆத்மாவை வழிநடத்தும் பாதையதே
பல்லியார் சொல்லியதன் பரிணாமம் என்றறிவீர்.

*வாழ்க வளமுடன் என வாழ்த்துவது மிக உயர்ந்த பலன்களை அளிக்கும்.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

07 காகங்கள் கரைந்துவிட்டால் உறவுவரும் என்றுமட்டும்
யூகங்கள் சொல்வதிலே அர்த்தமில்லை அறிந்திடுவீர்
தமக்குணவு இங்குவரும் நாளையென அவைகரைய
எமக்குறவு வருமென்று நாமுணர்வோம் நன்றே.

08 பின்னால் நின்றொருவர் பெருந்தும்மல் தும்மிவிட்டால்
முன்னெடுத்த கருமமது முடங்கிடுமோ என்றிராதீர்
முடங்குகின்ற கருமமதை தொடங்குகின்றீர் கவனமென்றே
ஆத்மீகம் தும்மலாயும் அங்குவரும் அறிந்துயர்வீர்.

09 சிலவற்றைப் பிறர்க்குநாம் ஒளிவின்றிச் சொல்லிவிட்டால்
பலனற்றுப் போய்விடுமோ அக்கருமமென்று எண்ணாதீர்
உலகிலேயே இல்லையென்று நாம்நினைத்த ஒன்றுகூட
நலன்விரும்பி உரைத்துவிட்டால் வலக்கரத்தே வந்துசேரும்.

10) குறைபாட்டை ஒருவர்க்குக் கொடுத்தது இறைவனே
இறைவன் கொடுத்திட்ட அக்குறைபாட்டை பழித்திட்டால்
இறைவனையே பழித்திட்ட பாவத்திற் காளாகி
நிறைவான மாந்தரும் பின் குறைசுமக்க நேர்ந்துவிடும்.

மகான் ஒருவரைத் தரிசிக்க வந்த ஒருவர், "சுவாமி இந்த உலகத்தைப் பற்றிக்கேட்டால் சிலர் நல்லது என்கிறார்கள். சிலர் கெட்டது என்கிறார்கள். உண்மையில் உலகம் நல்லதா? கெட்டதா?" என்று கேட்டார். உடனே மகான் அவரைப் பார்த்து "பூனையின் பல் நல்லதா கெட்டதா?" என்று கேட்க அவரும் பதில் தெரியாமல் திருதிருவென்று விழித்தார். மகான் விளக்கம் கூறினார். பூனையின் குட்டியிடம் போய் தாய்ப்பூனையின் பல் நல்லதா, கெட்டதா என்று கேட்டால், கருணையின் பிறப்பிடம் அது என்று அந்தக் குட்டிப்பூனை பதில் சொல்லும். காரணம் தன் குட்டியை ஓரிடத்திலிருந்து மற்றொரு இடத்திற்குப் பாதுகாப்பிற்காகத் தன் பல்லினாலேதான் பூனை கவ்விக்கொண்டு போகிறது. ஆனால் அதன் கூரிய பற்கள் அதன் குட்டியை ஒன்றும் செய்வதில்லை. அதே பூனையின் பல்லைப்பற்றி ஒரு எலியிடம் கேட்டால், பாழாய்ப்போன பூனைக்கு குத்தூசியைப் போன்ற கூரான பற்களைக் கொடுத்திருக்கிறாரே கடவுள்! என்ன கொடுமை! என்று பதில் சொல்லும். அதுபோலவே உலகம் நல்லதா, கெட்டதா என்பதும் உலகத்தின் தன்மையை அவரவர் எவ்வாறு அறிந்து கொள்கிறார்கள் என்பதைப் பொறுத்ததுதான். உலகிலே கஷ்டத்தைப் பார்த்தவர்கள், "உலகம் கெட்டது" என்கிறார்கள். உலகிலே நல்லதைப் பார்த்தவர்கள் "உலகம் நல்லது" என்கிறார்கள். நல்லதும் கெட்டதும் நாம் செய்த வினைப்பிரகாரம் அமையும்" என்று அந்த மகான் விளக்கம் கொடுத்தார். கேட்டவருக்கும் தெளிவு பிறந்தது.

இந்த உலகம் முழுவதுமே ஒரே குடியிருப்புதான். ஆனால் தனி உயிரின் சுகத்தையும் துக்கத்தையும் பொதுப்பிரச்சினையாக நினைத்து விசால புத்தியுடன் நோக்குபவனுக்கு தென்றல் வீசும் பூங்காவாகத் தெரியும். சுயநலமே பெரிதென்னும் பொறுப்பில்லா ஒருவனுக்கு காய்ந்துபோன பாலைவனமாகவும் இருக்கும்.

*கண்ணியம் இல்லாத அறிவு ஆபத்தானது, அஞ்சத்தக்கது.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இறை தத்துவம்

– **திரு ஆ. விநாயகமூர்த்தி** அவர்கள் –

இறைவன் இருக்கின்றானா? எங்கே இருக்கின்றான்? இறைவனின் வடிவம் என்ன? என்பன போன்ற கேள்விகள் நம்முள் எழுவது இயல்பாகும்.

இவ்வகையில் நம் சமய அருளாளர்களின் சிந்தனையை உள்ளடக்கி ஒருசில வார்த்தைகள் கூற முற்படுகின்றேன்.

நமது சமய மெய்ஞானிகளுள் தலைசிறந்த தேவாரப்பதிக முன்னோடியான திருநாவுக் கரசு சுவாமிகளும், திருவாதவூரடிகள் எனப் போற்றப்படும் மாணிக்கவாசக சுவாமிகளும் அருளிய பதிகங்களின் சில வரிகள் எமது ஞாபகத்திற்கு வருகின்றன.

"விறகிற் தீயினன் பாலிற்படு நெய்போல்
மறைய நின்றுளான் மாமணிச் சோதியான்..."

-திருநாவுக்கரசர் வாக்கு.

இப்பாடலின் உட்பொருள் விறகில் நெருப்பு இருக்கிறது. நெருப்புடன் சேரும்போது எரிகிறது. அது தானாகவே எரிவதில்லை. பாலில் நெய் இருக்கிறது. அதனைத் தயிராக்கி கடையும்போது வெளிவருகிறது. பாலாக இருக்கும்வரை நெய் எமக்குப் புலப்படாது. அதுபோல இறைவனும் சோதி என்னும் ஒளிவடிவாக உள்ளான். மறைந்திருக்கிறான். இறை வனாகிய பாலை உறவு என்னும் மத்தினால் உணர்வு என்னும் கயிற்றினால் கட்டி கடை யும்போது முன்தோன்றுவான் என்பது நாவுக்கரசரின் அனுபவம்.

இதே நாவுக்கரசர் இன்னொரு பதிகத்தில் கூறுகிறார்,

"ஊனாகி உயிராகி அதனுள்நின்ற உணர்வாகி
பிறவனைத்தும் நீயே ஆனாய் நானேதும்
அறியாமே என்னுள் வந்து......"

எனது உடலும் நீதான். அந்த உட லுள் உள்ள உயிரும் நீதான். உணர்வும் நீதான். எல்லாம் நீயேதான் என்கிறார். "காயமே கோயில்" எனது உடல் ஆலயம் என்கிறார். இவ்வாறு எமக்கு முன்னோடியாக இருந்து பல ஆன்மீகக் கருத்துக்களை அப் பெருமக னார் கூறிவைத்துள்ளார்.

திருவாதவூர் அடிகள் இறைவனை வியந்து போற்றும்போது, "இமைப்பொழுதும் என் நெஞ்சில் நீங்காதான் தாள் வாழ்க" என் கிறார். கண் இமைக்கும் நொடிப் பொழுதும் என் நினைவை விட்டு அகலாது என் நெஞ் சில், எம்முள் இருக்கும், அப்பெருமானின் திருவடிகள் எப்போதும் வாழ்வதாகுக. இப் பெரு ஞானிகளின் கூற்றை அடியொற்றி சில ஆன்மீகக் கவிதைகளை எம்பெருமான் அரு ளாசியினாலும் தூண்டுதலினாலும் அடியேன் இங்கு குறிப்பிட்டுள்ளேன். எனது நீண்டநாள் சிந்தனையைக் கவிதையாக்கியபோதும் எண்ணம் முழுதும் இக்கவியில் அடங்காமை யால் சில வார்த்தைகள் இங்கு எழுத்துரு வில் அமைகின்றன.

*வாழ்க்கை அனுபவம் இல்லாத எவரும் கல்வி கற்றவராக முடியாது.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"அணுவுக்கணுவாய் அப்பாலுக்கப் பாலாய்" என்பது ஔவைப்பிராட்டியார் கூற்று. அணுவிற் சிறியதாகவும் உலகிற் பெரியதாக வும் விளங்கும் இறைவனுள் உலகம் அடக் கம். உலகில் இறைவன் அடங்குவான் என்ற வாறு தோற்றம் முடிவு இல்லாத எம்மிறை சக்தி ஒன்றே. அவ்விறைசக்தி நாம் விரும்பிய வாறு விரும்பிய வடிவத்தில் நின்று அருள் புரிகின்றது. "கருதுவார் கருதும் உருவிற் தோன்றி அவ்வுருவில் நின்று அருள் பாலிக் கும் எம்மிறை சக்தி எவ்வாறு செயற்படுகின் றது என்பதை சிறிது விளக்கமாகக் கூறு கிறேன்.

நிலம், நீர், தீ, காற்று, ஆகாயம் என்னும் பஞ்சபூதங்களின் செயற்பாட்டுடன் அண்டவெளியில் காற்றுடன் கலந்து நமது வார்த்தைகள் பரவுகின்றன. அவ்வாறு ஒலி யும் ஒளியும் பரவி உலகம் முழுவதும் வியாபித்திருக்கின்றன. நவீன விஞ்ஞான யுகத்தில் இவ்விஞ்ஞான சாதனையைக் கண் ணாரக் காண்கிறோம். தொலைக்காட்சி, வானொலி, கைத்தொலைபேசி போன்ற நவீன சாதனங்கள் உலக நாடுகள் அனைத்திலும் இருந்து நாம் உரையாடுவதற்கும் அவர் களின் உருவைப் பார்த்துக் கதைப்பதற்கும் உதவுகின்றன. அதுபோல் இறைசக்தியும் எங்கும் பரந்து விரிந்துள்ளது.

வானில் எங்கும் பரந்திருக்கும் இறை சக்தியை நாம் ஓரிடத்தில் ஒரு சிறு பகுதி யைத் தங்கச் செய்து அருள்பாலிப்பதற் காகவே ஆலயங்கள் தோன்றின. எத்தனை ஆலயங்கள் அமைத்து எந்த எந்த ரூபத்தில் ஆதரித்து வணங்கினாலும் அண்டவெளி இறைசக்தி குறைவடையாது. ஒவ்வொரு மனிதனும் ஒவ்வொரு கைத்தொலைபேசி யைப் பயன்படுத்தினாலும் போன் உரை யாடல் தொடர்வதுபோல இறைசக்தியும் குன்றிவிடப் போவதில்லை. ஆதலால் நாமும் எம்முள் இறைவனை வரவழைத்து ஆராதித்து பயன்பெறுவோமாகுக.

அண்டவெளியிலுள்ள இறை சக்தியை நாம் வெவ்வேறு தெய்வங்களாக உருவகித்து பலவகையான ஆலயங்களை உருவாக்கி வழிபடுகின்றோம். மென்மேலும் புதிய புதிய ஆலயங்களை உருவாக்குகின்றோம். ஆயி னும் அவ்வாலயங்கள் சக்திபெற வேண்டு மாயின் அதன் பூசனைமுறை வழுவாதிருப் பின் சக்திபெறும். பக்தி வழிபாடு முறை பூசனையில் ஒழுங்குமுறைகள் கடைப்பிடிக் கத் தவறும்போது அவ்வாலயம் பாவனைப் படுத்தப்படாத தொலைபேசியைப்போல பழு தான தொலைக்காட்சிப் பெட்டியை, வானொலி யைப்போல் சக்தியற்றதாகிவிடும். ஆதலின் காயமே கோயிலாகவும் உயிரே இறைவ னாகவும் ஒவ்வொரு மனிதனும் கருதி வழி படும் நிலையே உகந்ததாகவும் உயர்ந்த தாகவும் கருதப்படும்.

நாம் கண்ணாற் காணும் ஆலயங் களை அமைத்து ஆராதித்து வழிபாடாற்றி வந்தபின், கவனிப்பாரற்று பாழடைந்த ஆலய மாக அது மாறும்போது அவ்வாலயத்தைப் பராமரிப்பவர் பரம்பரையினர் பாதிக்கப்படுவர். தெய்வதோஷம் உண்டாகும். ஆதலால் தொடர்ந்து அவ்வாலயம் இயங்கவைக்க முன்யோசனையுடன் செயற்பட்டு ஆவன செய்யப்பட வேண்டும். நாமே ஆலயமாக உயிரே இறைவனாக வழிபடும் நிலையில் எமக்குப் பரம்பரைதோஷம் ஏற்படாது. இத னால் நாம் நம்முள்ளே இறைவனைக் கண்டு வழிபடுவோம்.

**கொடி மரத்தை நோக்கிப் படர்வதுபோல், ஜீவன் இறைவனை நாடிச் சென்று படர வேண்டும். ஆன்மீகப் பயணம் முடியும் இடம் இறைவனே.**

*தவறு செய்யாதவன் என்று தன்னை எவனும் கூறிக்கொள்ள முடியாது.*




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விநாயகர் வழிபாடும் அறுகம்புல்லின் மகிமையும்

– **திரு ஆ. சிவநாதன்** அவர்கள் –

சிவபெருமானுக்கு இருப்பவைபோல் விஷ்ணுவுக்கு இருப்பவைபோல் (பிள்ளையார் பட்டியைத் தவிர) பிள்ளையாருக்கு பெரிய மண்டபங்களும் பெரிய பிரகாரங்களும் உள்ள பெருங் கோயில்கள் இல்லை என்பது உண்மைதான். ஆனால் அவர் இல்லாத கோயிலே இல்லை எனலாம். சிவன் கோயில்களிலும், சுப்பிரமணியர் கோயில்களிலும் தென்மேற்கு மூலையிலும் விஷ்ணு கோயில்களில் இரண்டாவது பிரகாரத்து வாயிலிலும் அவர் தவறாது வீற்றிருப்பார். சமண சமயத்துடனும் பௌத்த சமயத்துடனும் ஒருவகையில் தொடர்புகொண்ட இப்பிள்ளையார் இந்திய சமயங்கள் எல்லாவற்றிலும் நின்று அவற்றுக்குள் ஒரு பொதுமை யினை ஏற்படுத்துகின்றார். கோயில்களில் அன்றி அவர் குளக்கரையில், நதியோரங்களில், அரசமரத்தடியில், நாற்சந்திகளில், முச்சந்திகளில் அம்பலங்களில் அன்பர்களுக்கு அருள் செய்யும் ஆவலினால், காற்றென்றும் மழையென்றும், வெயிலென்றும் பாராமல் வீற்றிருந்து அருள் செய்வார்.



செதுக்கச் சிற்பியில்லாவிட்டால், கோயில் கட்ட ஸ்தபதி இல்லாவிட்டால் அன்பர்கள் நினைத்தமாத்திரத்தில் மஞ்சள் மாவிலே சந் தனத்திலே, பசுஞ்சாணத்திலே, மண்ணிலே உருப்பெற்று வந்துநின்று அருள்செய்து வந்த முறையே கரைந்து மறைந்து போகின்ற அற் புதமே தனி.

சிவலிங்கப் பெருமானுக்கு அடுத்தபடி யான எளிமையான உருவம். அவர் மகிழ்ந்து உண்பது அப்பமும் அவலும், பொரியும் மோத கமும் எல்லாம் சாதாரண மக்கள் உகந்து உட்கொள்ளும் பட்சண வகைகள்தாம். மக் கள் வாழ்வில் இடம்பெறும் சடங்குகளில், சிறப்பாக மங்களகரமான சடங்குகளில் அவர் இடம்பெறாத சடங்குகள் இல்லை.

விநாயகரின் தோற்றம் குழந்தை வடி வம், பருத்த உடம்பு, குழந்தைகளுக்கு அழகு தருவன விநாயகரின் கொழுத்த உடலும், தொந்தி வயிறும், குட்டைக்காலும் குழந்தை

*உழைப்பே ஓய்வுக்குத் திறவுகோல், சுறுசுறுப்பே செல்வத்துக்குத் திறவுகோல்.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நிலையை எடுத்துக் காட்டுகின்றது. பருத்த வயிறு அண்டங்கள் தோன்றுவதற்குரிய இட மென்பதைக் காட்டுகின்றது. அபரஞானம், பரஞானம் ஆகிய திருவடிகள் எங்கள் அடைக் கலத்திற்குரிய இடமென்பதைத் தெரிவிக்கின் றன. எல்லாவற்றிற்கும் மேலாக நல்லுணர்வை எழுப்புவது அவருடைய வாகனம். ஆன்மாக் கள் எல்லாம் எலியாக நின்று எம்பெருமானைத் தாங்கவேண்டும் என்று கருத்தும் ஞான சொரூபியைத் தாங்குவதால் எவ்விதமான பாரமும் நமக்கு ஏற்படாது என்பதும் முன் பிருந்த பாரமே நீங்கி விடுவதற்கு அதுவே வழி என்பதும் அறிவுறுத்துகின்றன.

விக்கினங்களைத் தீர்ப்பதும் அவரவர் வழிபாட்டை ஏற்றுச் சித்தியையும் புத்தி யையும் வழங்குவதும் விநாயகப் பெருமானின் திருவருட் சிறப்பாகும். எக்கருமத்தைத் தொடங் கினாலும் விநாயகனை முதலில் வழிபட்டு அவ்வக் கருமங்களையாற்றினால் அவை அனைத்தையும் நிறைவுறச் செய்பவன். ஆணவ மலத்தை நீக்கி அறிவை பிரகாசிக் கச் செய்யவேண்டும் என்பதே தேங்காய் உடைப்பதன் கருத்தாகும். குடுமி, கண்கள் ஆகியவற்றை தேங்காய் உடையதாக இருப் பதால் அறிவுணர்ச்சிக்கு இருப்பிடமான எங் கள் தலையை அது குறிக்கிறது. தேங்கா யைச் சுற்றியுள்ள ஓடு அறிவைச் சூழ்ந் துள்ள ஆணவ மலத்தைக் காட்டுகின்றது. வெற்றிலை எங்கள் உடலைக் குறிக்கும். பாக்கு செல்வத்தைக் குறிக்கும். வாழைப் பழங்கள் நல்வினை தீவினைகளைக் குறிக் கும். எனவே ஆரோக்கியம், பாவ புண்ணிய விடுதலை ஆகியவற்றை விரும்பி நிற்கின் றோம் என்பதையே தேங்காய், வெற்றிலை, பாக்கு, பழம் வைத்து அர்ச்சனை செய்தல் குறிக்கிறது. கரும்பு, அவரை, கனிகள், சர்க் கரை, பருப்பு, நெய், எள், பொரி, அவல், துவரை, இளநீர், தேன், பயறு, அப்பம், வடை, பச்சை அரிசி பிட்டு, வெள்ளரிப்பழம், மா, கொழுக்கட்டை, கிழங்கு, கடலை முத லியனவாக அமைந்த நிவேதனப் பொருட் களைச் சிற்றுண்டியாகக் கொண்டருளுபவன் விநாயகன். உலகம் அனைத்தையும் தன் பருத்த தொந்தியில் வைத்துக் காக்கும் பெருமானுக்கு நாங்கள் படைப்பவை அனைத் தும் சிற்றுண்டிகள் போன்றவை. எங்கள் அன்பின் அறிகுறியாக இவற்றைப் படைக் கிறோம். நல்லுணவு படைத்து நல்லாரை மகிழ்விப்பது கணபதி பூசையாகும். முரண் பாட்டை அகற்றி உடன்பாட்டை அது உண் டாக்கிறது. இது விக்கினங்களை அகற்று வதற்கு முதற்படியாகும். விநாயகருக்கு முதல் வணக்கம் செலுத்துவதன் நோக்கம் உள்ளத்தில் இடம்பெற்ற ஆங்காரம் நீங்கி ஓங்காரத்தின் மூலம் ஞானம் உதயமாக வேண்டும் என்பதற்காகவேயாகும்.

சிவன் வேறு விநாயகன் வேறு அன்று. சிவனின் பஞ்சகிருத்தியங்களை விநாயகப் பெருமானின் ஐந்து கரங்களிலும் ஏந்தியிருக்கின்ற பொருட்கள் உணர்த்து கின்றன. மோதகம் படைத்தலையும், தந்தம் காத்தலையும், அங்குசம் அழித்தலையும், பாசம் மறைத்தலையும், கமண்டலம் அருள லையும் விளக்குவன. மேலும் ஐந்து அட் சரங்களையுடைய யானை என்பதை உணரும் பொழுது அவருடைய திருமுகமே திருவைந் தெழுத்தின் அடக்கம். ஓங்காரமாகிய பிரண வத்துள் அடங்காதது எதுவும் இல்லை. இதனை விநாயக வடிவம் உணர்த்துகிறது.

விநாயகருக்கு ஏகதந்தன் என்று ஒரு பெயர் உண்டு. வியாச பகவான் மகாபாரதத் தைச் சொல்லிக்கொண்டு போகையில் இடையில் எழுத்தாணி உடைந்துவிட்டது. எழுதும் வேலையை நிறுத்துவது ஒவ்வாது தனது தந்தங்களில் ஒன்றை ஒடித்து அவ்வேலையை நிறைவேற்றினார் விநாயகர்.

*உன்னால் முடிந்ததையெல்லாம் செய்துவிட்டு இறைவனிடம் உதவிகேள்.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முறிந்த தந்தத்தை தனது வலக்கரத்தில் பிடித்திருக்கிறார். இது தியாகத்தின் அறிகுறி ஆகும். ஓர் உயர்ந்த காரியத்தின் பொருட்டு தனது அவயவங்களில் ஒன்றை இழந்து விட்டதே விநாயகருக்கு அலங்காரமாயிற்று.

ஏனைய தெய்வங்களிடத்தில் காணாத சிறப்பு ஒன்று விநாயகருக்கு உண்டு. பல வடிவங்களுள் அவன் உச்சிஷ்ட கணபதி என்னும் இயல்பைப் பெற்றிருப்பதுவே அச் சிறப்பு. எச்சில் பட்ட கணபதி என்று அது பொருள்படுகிறது. தூய்மையே தெய்வ சொரூபம் என்னும் எண்ணத்தில் ஊறிய வர்கள் நாங்கள். ஒரு நாள் நீராடாவிட்டால் கடவுள் வழிபாட்டிற்கு தகுதியற்றவராய் விட்டோம் என்று எண்ணிக் கொள்கிறோம். அசூசியான பொருள்களைக் குறித்து அரு வருப்பு அடைவது தகாது. சுத்தம், அசுத்தம் ஆகிய இரண்டு நிலைகளையும் கடந்த நிலைக்குப் போவது எங்கள் குறிக்கோள். அழுக்கை அழுக்காகக் கருதாதே என்ற போதனையை உச்சிஷ்ட கணபதியின் உபா சனை புகட்டுகிறது. போசனம் முடிந்த பிறகு எச்சில் இலையை எடுத்துத் தூர எறிகிறோம். அது எறியப்படும் இடத்தில் எழுந்தருளி இருப்பவன் உச்சிஷ்ட கணபதி. எச்சில் இலையை எறிந்துவிட்டு உச்சிஷ்ட கண பதிக்கு முதுகுகாட்டி வணங்குகிறோம். தெய் வத்தின் சந்நிதி பார்த்து வணங்குவது முறை. ஆனால் நீக்கமற எங்கும் நிறைந்துள்ள பொருளுக்கு முன்புறம் பின்புறம் என்பன இல்லை. அத்தகைய உயர்ந்த நிலைக்கு எங்கள் மனதை உயர்த்துவதற்கே உச் சிஷ்ட கணபதிக்கு முதுகுகாட்டி வணங்கு கிறோம். எங்கும் நிறைபொருளாகிய அவன் எங்களுக்கு மலமாகத் தென்படும் பொருளி லும் இருக்கிறான். இத்தகைய புனிதமான மனப்பான்மையை உச்சிஷ்ட கணபதியின் உபாசனையினின்று பெறுகிறோம்.

## அறுகம் புல்லின் மகிமை

தாபரம் என்ற நகரத்தின் தெற்கே ஒரு பனந்தோப்பில் கௌண்டிய முனிவர் தம் ஆசிரமத்தில் விநாயகரை பிரதிஷ்டை செய்து பக்தியோடு பூஜித்து வந்தார். தினந் தோறும் பதினாறாயிரம் அறுகம்புற்களால் அர்ச்சனை செய்து வழிபட்டார்.

அதிக மணம் வீசும் மலர்களைக் கொண்டு பூஜை செய்யாமல் முனிவர் அறுகம்புல்லைப் பூஜைக்குரிய பொருளாகக் கொண்டுள்ளது ஏன் என்று புரியாமல் அவர் மனைவி ஆசிரிபை என்பவள் ஒருநாள் அவ ரைக் கேட்டாள். கௌண்டியர் அறுகம்புல் லின் பெருமையை மனைவிக்கு விளக்கினார்.

ஒரு சமயம் எமதர்மராஜன் சிங்கா சனத்தில் அமர்ந்திருக்க அவன் எதிரே மகிழ்ச்சியூட்டும் ஆடல் பாடல்கள் நடைபெற் றன. பேரழகி திலோத்தமை நாட்டியமாடி னாள். அவள் ஆடியபோது மேலாடை நழுவி யது. அந்த அழகைக் கண்டு தன் உள் ளத்தை அவளிடம் பறிகொடுத்து விட்டான் எமன். ஆசை அவனை வாட்டியது. அதை அடக்கிக்கொள்ள முடியாதவனாகத் தன் மனைவியுடன் கூட அந்தப்புரத்தை நோக்கி விரைந்தான்.

ஆனால் போகும் வழியிலேயே அவ னுக்கு வீரியம் வெளிப்பட்டுத் தரையில் சிந்திவிட்டது. அதிலிருந்து பயங்கரமான ஓர் அரக்கன் தோன்றினான். அவன் பெயர் அனலாசுரன். அவனைக் கண்டு எமனே பயந்துவிட்டுத் தன் அந்தப்புரத்தில் நுழைந்து கதவைத் தாளிட்டுக் கொண்டான்.

அனலாசுரன் பூலோகத்துக்கு வந்து உயிரினங்களை அழித்தான். தேவர்களையும் எடுத்து விழுங்க தேவலோகத்துக்கு விரைந் தான். தேவர்கள் பயந்து நடுங்கி திருமாலிடம் சென்று முறையிட்டார்கள். "அனலனை வெல்ல யாராலும் முடியாது. விநாயகப்

*நாம் கடவுளுக்கு அஞ்சினால் மனிதனுக்கு அஞ்சுவதை நிறுத்திவிடுவோம்.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பெருமான்தான் அவனை அழிக்க வேண்டும்" என்றார் திருமால். யாவரும் கணேசமூர்த்தியைத் தியானித்தார்கள். ஒரு பிராமண பிரம்மச்சாரி வடிவத்தில் விநாயகர் அவர்கள் எதிரே வந்தார். அவர்கள் குறைகளைத் தீர்த்தருளுவதாகக் கூறினார்.

அப்போது தேவலோகத்தில் தேவர்களைத் தேடிச் சென்ற அனலாசுரன் அங்கே ஒருவரையும் காணாமல் பூலோகத்தில் தேடியபடி அவர்கள் சேர்ந்திருந்த இடத்திற்கு வந்தான். தேவர்கள் அவனைக் கண்டு அஞ்சி நடுங்கினார்கள்.

விநாயகர் தம் சுய உருவெடுத்து அனலாசுரனைக் கையில் பிடித்து "அனலாசுரா! இந்த உலகத்தைத் துன்புறுத்தி விட்டாய். என் வயிற்றில் பல உலகங்கள் உள்ளன. அந்த உலகங்களுக்கும் வந்து பார்!" என்று வாயில்போட்டு விழுங்கிவிட்டார்.

விநாயகர் வயிற்றுக்குள் அனலாசுரன் போனதும் அவர் வயிறு மட்டுமல்ல, தேவர்களின் வயிறுகளிலும் தாங்கமுடியாத அளவுக்கு வெப்பம் ஏற்பட்டது. விநாயகர் வயிறு குளிர்ந்துவிட்டால் அவர்களுடைய வயிறும் குளிர்ந்துவிடும் என்று நினைத்தார்கள்.

சந்திரன் தன் குளிர்ச்சிமிகுந்த கிரணங்களை விநாயகர் வயிற்றின்மீது பாய்ச்சினான். சித்தி, புத்தி இருவரும் விநாயகர் அருகில் பக்கத்துக்கு ஒருவராக அமர்ந்து தங்கள் மேனியால் ஒத்தி ஒத்தி குளிர்வித்துப் பார்த்தார்கள். அவருக்குள் அனல் தணியவில்லை. வருணன் மழையைக் கொட்டிப் பார்த்தும் பலன் இல்லை.

இறுதியாக எண்பத்தொண்ணாயிரம் முனிவர்கள் ஒவ்வொருவரும் தத்தமது கரங்களில் இருபத்தோர் அறுகம்புற்களை எடுத்து வந்து கணேச பகவானின் திருமுடியிலிருந்து திருவடிவரை சாத்தினார்கள். அதற்குப் பிறகுதான் அவருக்குள்ளிருந்த அனல் விலகியது. தேவர்களின் வயிறும் குளிர்ந்தன. எல்லா உலகங்களிலும் தொல்லையின்றிக் குளிர்ந்து செழுமை செழித்தோங்கியது.

அன்றிலிருந்து அறுகம்புல் விநாயகருக்கு உகந்த விஷேச அர்ச்சனைப் பொருளானது. குறைந்தது இருபத்தோர் அறுகம் புல்லைக் கொண்டாவது விநாயக பூஜை நடத்துவது நல்ல பலனை அளிக்கும் என்ற உண்மையை உலகம் அறிந்தது.

## ஞானச்சுடர்

ஞானப் பழமே நற்தமிழே
ஞானச் சுடரே வாழி!
நக்கீரனுக்கு தந்தை மூலம்
நற் றமிழ் ஊட்டியோனே
பொற் தாமரை ஊற்றினிலே
நற் றாமரை இலை தனிலே
ஆறு குழந்தை உருவெடுத்து
ஆறு முகன் நாமம் பெற்ற
ஞானச்சுடரே வாழி!

-ம. கணேசலிங்கம்-

*கலங்காத உள்ளம் படைத்தவர்களே இறுதி வெற்றிக்கு உரியவர்கள்.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தமிழர் தேசமெங்கும் தமிழ் தெய்வமாம் முருகன் திருக்கோயில்கள்

– **திரு R. செந்தூரன்** அவர்கள் –

சூரபன்மன் முதலான அசுரர்களின் கொடுமை தாங்காத தேவர்களின் வேண்டுதலின் பேரில் ஈசனால் தோற்றுவிக்கப்பட்டவரே கந்தக் கடவுளாகும். கந்தனின் தனிப்பெருஞ் சிறப்புக்களை காஞ்சிபுரம் குமரகோட்ட முருகனால் "திகட சக்கர" என அடியெடுத்துக் கொடுக்கப்பட்டு கச்சியப்பரால் இயம்பப்பெற்ற கந்தபுராணம் தெளிவாகக் காட்டி நிற்கின்றது. குன்றிருக்கும் இடமெல்லாம் குமரன் இடம் என்பதுபோல தமிழகத்தில் ஆறுபடை வீட்டுப் பதிகள் காணப்படுகின்றன. சிவகுருநாதனாக சுவாமிமலையிலும், ஆண்டிக் கோலத்தில் பழநியிலும், அசுரகுலத்தை வேரறுத்து திருச்சீரலைவாயிலும் (திருச்செந்தூர்), வள்ளியை மணந்து திருப்பரங்குன்றத்திலும், தெய்வயானையை மணந்து திருத்தணிகையிலும் கன்னியர் இருவர் நீங்கா கருணைவாரிதியாக பழமுதிர்ச்சோலையிலும் வீற்றிருக்கின்றார். இதனைவிட அசுரரை அழிக்க உமாதேவியாரிடம் வேல்பெற்று சிக்கல் சிங்கார வேலனாகவும் காட்சி தருகின்றார்.



தமிழகத்தில் ஆறுபடைக் கோயில்கள்போல் கிழக்கிலங்கையிலும் ஆறு திருப்படைக் கோயில்களில் முருகன் வீற்றிருக்கின்றார். மகாவலிகங்கைக் கரையில் வெருகல் சித்திரவேலாயுதராகவும், தாந்தா மலையிலும், மண்டூரிலும், கிழக்குக் கடற்கரையோரம் திருக்கோயிலிலும், சித்தாண்டியிலும் தனக்கு உகந்த இடமான உகந்தையிலும் குடிகொண்டுள்ளார். இதனைவிட ஈழத்துத் திருச்செந்தூர் எனப் போற்றப்படும் கல்லடி திருச்செந்தூர் தலத்திலும் அருள்பாலிக்கின்றார்.

ஆறுமுக நாவலரால் கட்டியெழுப்பப்பட்ட கந்தபுராண கலாசாரம் மிளிரும் இலங்கையின் வடபால் யாழ்ப்பாணத்திலும் ஏராளமான முருகன் பதிகள் காணப்படுகின்றன. இவற்றுள் முறையே அலங்காரக் கந்தன், அன்னதானக் கந்தன், அபிஷேகக் கந்தன் எனப் போற்றப்படும் நல்லூர், செல்வச்சந்நிதி, மாவிட்டபுரம் திருத்தலங்கள் தலையாயவை. இவற்றைவிட பொலிகைக் கந்தவனம், பெரிய சந்நியாசியாரின் அருளாடல் பெற்ற இணுவில் கந்தசுவாமி கோயில், வேல் வந்து அணைந்த வேலணை சிற்பனை முருகமூர்த்தி ஆலயம் போன்றவற்றையும் நுணசை, உசன், சாளம்பை, கைதடி இணுங்கி தோட்டம், நீரவேலி மஞ்சவனப்பதி, சுழிபுரம், பறாளாய், மூளாய் ஆகிய இடங்களில் உள்ள முருகன் தலங்களைக் குறிப்பிடலாம். இங்கு குறிப்பிடாத ஏராளமான முருகன் தலங்கள் காணப்படுகின்றன.

*உண்மையான ஆலயங்கள் இதயத்தில்த்தான் அமைந்துள்ளன.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இதனைவிட கொழும்பு ஜிந்துப்பிட்டி முருகன் ஆலயமும் குறிப்பிட்டுச் சொல்லக்கூடிய ஆலயமாகும். இங்கு முன்னர் தமிழக ஆன்மீக அறிஞர் திருமுருக கிருபானந்த வாரியாரது சொற்பொழிவுகளும் இடம்பெற்றன. மேலும் தென்னிலங்கையில் அமைந்துள்ள கதிரகாமத் திருத்தலம் தொன்மையும், பிரசித்தியும் பெற்றது. இங்கு முருகப்பெருமான் சூரபத்மனுடன் போர் புரிந்த காலப்பகுதியில் பாசறை அமைத்து தங்கியதால் ஏமகூடம் என போற்றப்படுகிறது.

இந்தியா, இலங்கையைவிட தமிழர் பரந்து வாழும் சிங்கப்பூர், மலேசியா, அவுஸ்திரேலியா ஆகிய நாடுகளிலும் பிரசித்திபெற்ற முருகன் ஆலயங்கள் காணப்படுகின்றன. சிங்கப்பூர் செட்டியார் முருகன் கோயில், மலேசியா பத்துமலை முருகன் கோயில், சிட்னி முருகன் கோயில் என்பன குறிப்பிட்டுச் சொல்லக்கூடியவையாகும். இதனைவிட ஐரோப்பாவிலும் தமிழ் பக்தர்களால் பல நாடுகளில் முருகன் ஆலயங்கள் அமைக்கப்பட்டுள்ளன.

## நடப்பதும் நடக்காததும்

எண்ணியது நடக்காதபோது நாம் ஏமாற்றத்துக்கு உள்ளாகிறோம். வாழ்க்கை என்பது ஒரே போக்கில் எப்போதும் அமைவதில்லை. நாம் எதிர்பார்க்கின்ற சில விடயங்கள் நடப்பதும், வேறு சில விடயங்கள் நடக்காமல் போவதும் இயற்கையே.

எண்ணியது நடக்கும்போது மகிழ்ச்சி அடைகிறோம். நடவாதபோது கவலையடைகிறோம். அதுவரையில் சரி அதற்காக நடக்காததைப் பற்றியே எண்ணி வருத்தப்பட்டுக்கொண்டிருப்பதில் அர்த்தமில்லை. ஏனெனில் அது நேரத்தை வீணாக்குமேயன்றி எந்தவிதமான பயனையும் எமக்கு அளிக்கப்போவதில்லை.

சிலருக்கு ஒரு குணமுண்டு. நடந்து போனவற்றை எண்ணியே கவலைப்பட்டுக்கொண்டு இருப்பார்கள். நடக்கப் போவதைப்பற்றிச் சிந்திக்கவேமாட்டார்கள். இது தவறானது.

வாழ்க்கை முன்னேற்றத்தைத் தடைசெய்யும் படிக்கல், கடந்த காலம் மீண்டும் நிகழப்போவதில்லை. எதிர்காலம் மட்டுமே எமக்குச் சொந்தமானது. அதனால் கடந்தகால அனுபவங்களிலிருந்து பாடம் கற்று எதிர்காலத்தைத் திட்டமிடலாமே தவிர, காலத்தைக் கைவிட்டு விடக்கூடாது. ஆராய்ந்து பார்த்தால் எம்முடைய மனதை நாம் பலவீனமாக வைத்துக்கொண்டிருப்பதால் கடந்த கால அனுபவங்கள் எம்மைப் பயமுறுத்தத் தொடங்குகின்றன. எமது எதிர்காலமும் கடந்தகாலம்போல ஆகிவிடுமோ? என்ற அச்சத்தில் நாம் செயலிழந்து போகிறோம். இது தேவைதானா என்று நாம் சிந்தித்துப் பார்ப்பது அவசியம்.

## கந்தசஷ்டிகால விசேட நிகழ்வு
## (08.11.2018 - 12.11.2018)

வருடா வருடம் வழமைபோல் இடம்பெற்றுவரும் கந்தசஷ்டிகால விசேட நிகழ்வுகள் 08.11.2018 தொடக்கம் 12.11.2018வரை "**சேவலும் மயிலும்**" என்னும் தலைப்பில் **செஞ்சொற் செல்வன் இரா. செல்வவடிவேல் ஆசிரியர்** அவர்களின் சொற்பொழிவு முற்பகல் 11.00 மணியளவில் சந்நிதியான் ஆச்சிரம மண்டபத்தில் இடம்பெறும்.

13.11.2018 - செவ்வாய்க்கிழமை மாலை சூரன்போர்
14.11.2018 - புதன்கிழமை அதிகாலை பாரணை

*இளமையில் வறுமையும் முதுமையில் தனிமையும் கொடுமையானது.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சத்தியம்

– திருமதி இராஜேஸ்வரி ஜெகானந்தகுரு அவர்கள் –

உண்மையைச் சொன்னால் உடம்பெல்லாம் எரிச்சல் என்பார், உண்மையா! அது சிலருக்கு கசக்கும் என்பர் ஒரு சிலர். ஆனால் நாம் உண்மையையே எமது உயிர் நிலையாகக் கொண்டு வாழவேண்டும். அது எம்மை வாழ வைக்கும் உயர் நெறியாகும் என்று கூறினர் எமது கற்றறிந்த முன்னோர்கள். அப்படியானால் உண்மை என்றால் என்ன . என நோக்கின் உள்ளதை உள்ளவாறு கூறுதல் உண்மை ஆகும். எனின் அது ஏன் கசக்க வேண்டும்? சொல்கிறேன் உண்மையின் நிலைகள் இரண்டு. உள்ளதை உள்ளவாறு சொல்லுமிடத்து, நாம் செய்யும் நற்காரியங்களை ஒருவர் சுட்டிக் கூறும்போது அது எமக்கும் கசப்பதில்லை, பதிலாக இனிக்கிறது. அதேநேரம் நாம் செய்யும் நியாயத்திற்கு ஒவ்வாத காரியங்கள், தவறுகளை மற்றவர் உள்ளபடி சுட்டிக்காட்டுமிடத்து, அது எம்மால் விரும்பப்படுவதில்லை. இங்கேதான் உண்மை கசக்கிறது. எனவே தவறு எங்கே இருக்கின்றது என்று நோக்குவோமா? தவறு உண்மையிலும் இல்லை, தவறுகளை உள்ளபடி சுட்டிக் காட்டுபவர்களிடமும் இல்லை. தவறுகளைச் செய்யும் எம்மிடமேதான் உள்ளது.

எனவே, உண்மையை யாம் இனிக்க சுவைக்க வேண்டுமானால் நாம் நல்லவற்றைப் பேசவேண்டும், சிந்திக்க வேண்டும். நல்லவற்றைச் செய்யவேண்டும். நாம் மாத்திரமல்ல நம்மைச் சார்ந்தவர்களும்கூட நல்லதை நாடி ஒழுக வேண்டும். அப்போதுதான் உண்மை எல்லோராலும் வரவேற்கப்படும். எந்நேரமும் எச்சந்தர்ப்பத்திலும் உண்மையைக் கடைப்பிடித்தல் மிகக் கடினமான காரியம்தான். இது உண்மையே ஆனால், அதற்காக நாம் உண்மை பேசாமல் இருக்கலாமா? இல்லவே இல்லை! உண்மையின் மறுபெயர் வாய்மை, சத்தியம். சத்தியத்திற்குக் கட்டுப்பட்டு வாழ்ந்தவன் அரிச்சந்திர மன்னன். உண்மையினின்றும் வழுவாத அம் மன்னன் பட்ட அவஸ்தைகள் இன்னல்கள் கொஞ்சநஞ்சமா? மன்னனைக்கொண்டு ஒரு பொய்யைத் தன்னும் பேசவைக்க விசுவாமித்திர முனி பட்டபாடு கொஞ்சமா? ஆனால்! கடைசிவரை மன்னன் சத்தியம் தவறவில்லை. நாடிழந்து, நகரிழந்து, அரச பதவி துறந்து, மனை இழந்து, மனைவியை விலை பேசி, அருமைப் பாலனை இழந்து, ஈற்றில் மனைவியைத் தானே கொல்லவேண்டிய நிர்ப்பந்தம் ஏற்பட்டபோதும் அரிச்சந்திரன் சத்தியம் தவறவில்லை. தன்னுடன் சவால் விட்ட உண்மையை வென்று தனதாக்கிக் கொண்டான் மன்னன். அவன் தேவி சந்திரமதி வாக்கின் அர்த்தத்தைப் பாருங்கள்.

**பதி இழந்தனம், பாலனை இழந்தனம்**
**படைத்த நிதி இழந்தனம்**
**கதி இழக்கினும் கட்டுரை இழக்கிலோம்.**

அரிச்சந்திரன் தன் வாழ்வில் காப்பாற்றி வந்த, போற்றிவந்த, கடைப்பிடித்து வந்த உண்மை, சத்தியம், ஈற்றில் அவனைக் காப்பாற்றியது. தக்க தருணத்தில் அவன் போற்றிக் காத்த சத்தியம் அவனுக்குக்

*நம்பிக்கை எதையும் துணிந்து செய்கிறது. அன்பு எதையும் பொறுத்துக்கொள்கிறது.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கைகொடுத்தது. தேவர்களும், முனிவர்களும், மன்னர்களும், ஏன் உலகம் முழுவதுமே அவனது வாய்மையைப் பாராட்டியது.

அவன் வளர்த்த உண்மை அவனை நற்பண்பாளனாக்கி வாழ வைத்தது. இன்றும் உண்மைக்கு சத்தியத்துக்கு அரிச்சந்திரன் என்ற பெயர் நிலைத்து நிற்கிறது.

உண்மையைச் சிறிதும் வழுவாது கடைப்பிடிக்கும் பாதையில் நாம் கடுமையான சோதனைகளைச் சந்திக்க நேரிடும். அதற்கு உதாரணமாக அமைகின்றது அரிச்சந்திரனது வரலாறு. கடும் சோதனைகளையும் சமாளிக்க நாம் சிறிது சிறிதாக முயன்றால் உண்மையைக் கடைப்பிடித்தல் எமக்கு எளிதாகிவிடும்.

உண்மை பேசுபவரிடம் சுயநலம் இருக்காது. உண்மை, தூய்மை, சுயநலம் இன்மை, எங்கெல்லாம் காணப்படுகின்றதோ அங்கெல்லாம் அசாதாரண ஆற்றல் தென்படும். பிரபஞ்சம் முழுவதுமே எதிர்த்து நின்றாலும் உண்மை பேசுபவனை எதிர்த்து நிற்க முடியாது. ஒருவனுடைய வாழ்வின் உயர் நிலைக்கு அவன் பேசும் உண்மை, கடைப்பிடிக்கும் சத்தியநெறி அளவுகோலாக, உரைகல்லாக அமைகிறது. மரணம் வருவது உறுதியாக இருக்கும்போது நல்ல ஒரு காரியத்துக்காக உண்மைபேசி, உண்மையாக வாழ்ந்து நடந்து உயிரை விடுவதுமேல் என்கிறார் சுவாமி விவேகானந்தர்.

அந்த மட்டத்திற்குத் தன்னும் எம்மால் முயற்சிக்க முடியாவிட்டாலும், நாம் எமது அன்றாட வாழ்வில் பேசும் உண்மைகளைக் கடைப்பிடித்தல் நலம்; பொய்யை மறத்தல் நலம்; செய்வோமா?

## சந்நிதிக் கந்தவேளே!

அமரர் துயர்தீர்க்க வந்தான் இவனென்று
அருகிலே மடியிருத்தி சோபனங் கூறவே
சோமஸ்கந்தனென தூயநற்பெயருங் கொண்டாய்!
அன்னை உமையாளும் அள்ளி அணைத்திடவே
ஆறுமுகம் ஒருருவமானவனே! வீறன தெய்வமே!
வினையறுக்க வல்லோனே! வீரமிகு வீரவாகு
தேவர்கள் யாவரும் விரும்பிடும் சோதராய்
சேரவேகயிலையில் விளையாடி நின்றவா!
சந்நிதிக் கந்தவேளே!

அலைகடல் சூழ்ந்த மகேந்திரபுரியும் அரக்கரும்
அழிந்திடவும் மலையன்னசூரரின் மார்பை கூறாக்கியே
மயில்சேவல் ஆக்கினவா! மாறாத ஆசையால்
வள்ளியைமணம் புரிந்து மறுசக்தி கொண்டவனே!
தீராதஅன்பினால் தேவர்கள் வேண்டவே திருச்செந்தில்
உறைந்தவனே! ஆராதபக்தியுடன் வரும் அடியார்
வினைதீர்க்கும் சந்நிதிக் கந்தவேளே!

ஊமைக்குழந்தைக்கு உன்
கருணைகாட்டியே உன்புகழ் பாடவைத்தாய்!
ஒளவைக்கு அருங்கனி அளித்துமே
அருந்தமிழில் அரியதெல்லாம் பாடவைத்தாய்!
அருணகிரியாருக்கு அருளமுதம் ஊட்டியே
திருப்புகழ் பாட வைத்தாய்!
கச்சியப்பரும் தந்த கந்தபுராணத்தில்
உன் சரிதை காண வைத்தாய்!
ஓங்கார உட்பொருளைத் தந்தைக்குரைத்திட்ட
பரமகுரு சாமிநாதா!
பாங்கான வள்ளிசேனா! சமேதனா!
சந்நிதிக் கந்தவேளே!

-க. சரவணபவன்-

*மனிதர்களுக்கு நல்லது செய்வதுதான் கடவுளுக்குச் செய்யும் சிறந்த தொண்டு.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

(தொடர் -13)

# சமய வாழ்வு

– திரு இரா. செல்வவடிவேல் அவர்கள் –

ஞானி டால்ஸ்டாய் எழுதிய கதை ஒன்று என் நினைவுக்கு வருகிறது.

ஒரு இளைஞன் ஒரு பெண்ணைக் காதலித்தான். சந்தர்ப்பவசத்தால் அவள் வேறு ஒருவனைத் திருமணம் செய்துகொள்கிறாள். விரக்தி அடைந்த அந்த இளைஞன் மத விடயங்களில் தன்னுடைய கவனத்தைச் செலுத்தத் தொடங்குகிறான். பாதிரியார் பயிற்சிக்கான பாடசாலையில் பயின்று பாதிரியார் ஆகிறான்.

ஒரு கிறிஸ்துவ மடத்தில் தன்னுடைய பணிக்கான பயிற்சியைப் பெறுகிறான். அங்கே துறவு வாழ்க்கையினை மேற்கொள்ள இருக்கின்றவர்களிடம் ஏற்படுகின்ற பொறாமையும் பதவிச் சண்டையும் அவனுடைய விரக்தியை மேலும் அதிகமாக்குகின்றன. அங்கே நடைபெறுகின்ற பல ஊழல்களைப் பார்த்து அவன் வேதனை அடைகிறான். இறுதியாக கிறிஸ்துவ மத நிறுவனம் நடத்துகின்ற ஒரு கிளைக்குப் பாதிரியாராக அவன் அனுப்பி வைக்கப் படுகிறான்.

அவனுக்கு முன் அங்கு பொறுப்பில் இருந்த பாதிரியார் காலமாகி விட்டதால் அந்தப் பொறுப்புக்கு அவன் நியமிக்கப்படுகிறான். அந்தப் பாதிரியாரும் அங்கிருந்த மக்களிடம் மிகுந்த செல்வாக்குடன் விளங்கியவர். அவரிடம் ஆசீர்வாதம் பெற்றால் நோய்கள் குணமாகிவிடும் என்கிற நம்பிக்கை அங்குள்ள மக்களுக்கு இருக்கிறது. அப்படிப்பட்ட ஒரு இடத்துக்குப் போய் எப்படிச் சமாளிக்கப்போகிறோம் என்று இவன் தயங்குகிறான். வேறு வழியில்லாமல் அந்தப் பொறுப்பை ஏற்றுக்கொள்கிறான். அதே நம்பிக்கையுடன் மக்கள் இவனைப் பார்க்க வருகிறார்கள். தனக்கு அம்மாதிரி சக்தி எதுவும் இல்லை என்று இவனுக்கு நன்றாகவே தெரியும். ஆனாலும் நம்பிக்கையுடன் வரும் மக்கள் இவனிடமும் அந்த சக்தி இருப்பதாக நம்புகிறார்கள்.

வருகின்ற சில நோயாளிகளும் தற்செயலாக குணமடைகிறார்கள். அவர்களின் நம்பிக்கை உறுதியாகிறது. இவனும் வேறு வழியின்றி அவர்களுக்குக் காட்சி கொடுத்து ஆசீர்வாதம் வழங்கிக்கொண்டே இருக்கிறான். ஆனால் மனச்சாட்சி இவனை உறுத்துகிறது. இந்த மக்களை நாம் ஏமாற்றிக் கொண்டிருக்கிறோமோ என்கிற எண்ணம் தோன்றியது.

இந்தச் சந்தர்ப்பத்தில் ஹஸ்டிரியா நோய் கொண்ட பெண் ஒருத்தி அவனிடம் அழைத்து வரப்படுகிறாள். அவள் இளம் பெண். நல்ல அழகி. அதைக் குணப்படுத்துகின்ற தெய்வீகசக்தி தன்னிடம் எதுவும் இல்லை என்பதை அவன் அறிவான். அதை வந்தவர்களிடம் எடுத்துச் சொல்லவும் முடியவில்லை. அவன் வகித்த பொறுப்பு அப்படி.

பெற்றோர்கள் அந்தப் பெண் அவனுடன் தங்கியிருந்தால் நோய் குணமாகி விடும் என்று நம்புகிறார்கள். அவன் எவ்வளவோ எடுத்துச் சொல்லியும் அவர்கள் கேட்பதாக இல்லை. வேறு வழியின்றி தன்னுடைய இருப்பிடத்திலேயே அந்தப் பெண் தங்கியிருக்க சம்மதிக்கிறான்.

அந்தப் பெண் ஹிஸ்டிரியா நோய்க்கு ஆட்படும் சமயத்தில், அவளைத் தாங்கிப்

*தேவையும் துன்பமும் ஒருபொழுதும் விட்டுப்பிரியாத நண்பர்கள்.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பிடித்து அவளுக்குப் பணிவிடை செய்ய வேண்டிய கட்டாயம் அவனுக்கு ஏற்படுகிறது. ஓரிரு சமயங்களில் அவன் உணர்ச்சிவசப்படுவது தவிர்க்கமுடியாததாகி விடுகிறது. அந்தப் பெண்ணும் அவனுடைய அணைப்புக்காக ஏங்கித் தவிக்க ஆரம்பிக்கிறாள். பெரிய மனப் போராட்டத்திற்குப் பிறகு, அவள் அவனை வெறியுடன் நெருங்கும் போது, சபலத்துக்குப் பலியாகி அவன் அவளுடன் இன்பம் அனுபவிக்கிறான்.

அவளுடைய ஹிஸ்டிரியா நோய்க்கே காரணம் அதுதான். அவளுடைய உடல் ஆசை பூர்த்தியானதுடன் அவளுடைய நோய் நீங்கி விடுகிறது. அதைப் பார்த்த பெற்றோர்கள் அவனுடைய ஆசீர்வாதத்தால்தான் நோய் நீங்கியதாக நம்புகிறார்கள். நம்பிக்கையுடன் வரும் கூட்டத்தின் எண்ணிக்கை அதிகரிக்கத் தொடங்குகிறது.

இவன் மனப் போராட்டத்துக்கு உள்ளாகிறான். இது பெரிய மோசடி என்பதை உணர்கிறான். பதவியை விட்டு விலக அங்குள்ள மக்கள் அனுமதிக்கமாட்டார்கள் என்பதும் அவனுக்குத் தெரிகிறது. ஆகவே ஒருநாள் நள்ளிரவில் யாருக்கும் தெரியாமல் பாதிரியார் அங்கிகளைக் கழற்றி வைத்து விட்டு அங்கிருந்து சாதாரண உடையில் வெளியேறி விடுகிறான். ஊர் ஊராகத் திரிகிறான். ஒருநாள் பசியால் களைத்துப்போய் ஒரு வீட்டின் திண்ணையில் போய் ஒதுங்குகிறான். அந்த வீட்டில் குடியிருக்கும் நடுத்தர வயதுப் பெண்மணி அவனை உள்ளே அழைத்து உணவளிக்கிறாள். ஆனால் திண்ணையில் படுத்திருந்தபோதே சில விடயங்களை அவனால் தெரிந்துகொள்ள முடிகிறது. அவளுடைய கணவன் பெரிய குடிகாரன். குழந்தைகளைப் பராமரிப்பதில் அவள் பல கஷ்டங்களை அனுபவிக்கிறாள். சாப்பிடும் போது அவன் கேட்கிறான், "உங்களுடைய கஷ்டங்களுக்கு மத்தியில் வழிப்போக்கனான என்னை அழைத்து உபசரிப்பதற்கு உங்களுக்குப் பெரிய மனம் இருக்க வேண்டும்.

சோகத்துக்கு மத்தியிலும் புன்முறுவலுடன் அவள் பதில் சொல்லுகிறாள். "என்ன செய்வது, குடும்பம் என்றால் எல்லாம்தான் இருக்கும். எப்படியோ என் கணவரைத் திருத்தவும், இந்தக் குழந்தைகளுக்கு நல்ல எதிர்காலத்தை உருவாக்கவும் நான் இத்தனை ஆண்டுகளாகப் பொறுமையாக என் கடமைகளைச் செய்து வருகிறேன்.

அந்தப் பெண் வேறு யாருமல்ல ஒரு முறை இவன் காதலித்து சூழ்நிலை காரணமாக வேறு ஒருவனைத் திருமணம் செய்துகொண்டாளே, அவளேதான். இவனுக்கு அவளை அடையாளம் தெரிந்துவிட்டது. ஆனால் அவளால் இவனை அடையாளம் கண்டுகொள்ள முடியவில்லை.

யோசித்தபடியே நடக்கிறான். கடவுளின் சேவைக்காக நான் படித்து, பாதிரியாராகி செய்த சேவையைவிட எத்தனையோ கஷ்டங்களுக்கு மத்தியில் குடும்ப பாரத்தைத் தாங்கி, நம்பிக்கையுடன் கணவனுக்கும் குழந்தைகளுக்கும் சேவை செய்துகொண்டிருக்கிறாளே, இவள் செய்வதுதான் உண்மையான கடவுளின் சேவை.

டால்ஸ்டாயின் கதை இத்துடன் முடிந்து போகிறது. இந்தக் கதை உணர்த்துகின்ற வாழ்க்கைத் தத்துவத்தைத்தான், இந்துமதம் முழுமைபெற்ற இல்லற தர்மமாக எடுத்துக் காட்டுகிறது.

குடும்பம் என்பது சோதனைகள் நிரம்பியதுதான். எப்போதுமே அந்த வாழ்க்கை மலர்ப்படுக்கையாக இருக்கும் என்று எதிர்பார்க்க முடியாது. கஷ்டங்கள் வரும். பிரச்சினைகள் தோன்றும். அவற்றைச் சமாளிப்பதிலே சுகம் காண்பதுதான் இல்லற வாழ்க்கை.

*பணிவான சொல் பாதையை எளிமையாக்குகிறது.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கதையில் வருகின்ற பெண் எத்தனையோ கஷ்டங்களின் மத்தியிலும் அந்தச் சுகத்தைக் காண்கிறாள். தவறான கணவனைத் திருத்தமுடியும் என்ற நம்பிக்கையுடன் பாடுபடுகிறாள். குழந்தைகள் கொடுக்கின்ற கஷ்டங்களை பொறுமையுடன் சமாளிக்கிறாள். என்றோ தோற்றுப்போய்விட்ட காதலை எண்ணி அவள் வாழ்க்கையை வீணாக்கிக் கொள்ளவில்லை.

ஆனால் பாதிரியார் கதைவேறு. காதல் தோல்வியால் விரக்தி அடைந்து கர்த்தருடைய சேவைக்காகத் தன்னை ஆட்படுத்திக் கொள்ளுகிறார். கர்த்தருடைய சேவைக்காக தங்களை அர்ப்பணித்துக்கொண்டவர்களுடைய மிக மோசமான போட்டியும் பொறாமையும் நிலவுவதைப் பார்க்கிறார். மூட நம்பிக்கையின் விளைவாக புனித இடங்களில் நிகழ்ந்து விடுகின்ற தீமைகளால் மனப் போராட்டத்திற்கு உள்ளாகிறார். ஒரு பாதிரியாரின் பணியைவிட குடும்பத் தலைவியின் பணி உயர்வானதாக இருக்க முடியும் என்கிற உண்மையை புரிந்து கொள்ளுகிறார்.

இந்து மதம் போலித் துறவியை ஏற்கவில்லை. குடும்ப வாழ்க்கையில் இருந்து கடமைகளை ஆற்றி முடித்தபிறகு சந்நியாசி நிலையினை மேற்கொள்ளச் சொல்லுகிறது. இந்த சந்நியாசம் மன முதிர்ச்சியின் விளைவாக ஏற்படுகின்ற சந்நியாசம். தன் கடமையை முடித்தபிறகு சமுதாயக் கடமைகளை மேற்கொள்ளுவதற்காகப் பூரணப்படுகின்ற சந்நியாசம்.

பிரம்மச்சரியத்தில் கல்வி ஞானம் பெற்று, கிரஹஸ்தத்தில் இன்பங்களை அனுபவித்து கடமையாக்கி, வானப்பிரஸ்தத்தில் விலகிநின்று குடும்பத்தைக் கண்காணித்து, சந்நியாசத்தில் பற்றற்ற நிலைக்கு உயரும் இந்து தர்மம் சொல்லி உள்ள வாழ்க்கை முறைக்கு, ஈடான வாழ்க்கை முறை வேறு எங்காவது உண்டா? சொல்லுங்கள். இந்து மதம் வாழ்க்கையின் ஒவ்வொரு அம்சத்தையும் தனித்தனியாகப் பார்க்கவில்லை. வாழ்க்கையை முழுமையாகப் பார்த்து தேவையான விடயங்கள் அனைத்தையும் சொல்லுகிறது. அதேசமயம் வாழ்க்கையின் ஒவ்வொரு அம்சத்தையும் தனித்தனியாக எடுத்துக் கொண்டு, அதன் நுணுக்கங்கள் அனைத்தையும் ஆராய்ந்து, ஒவ்வொரு அம்சமும் சிறப்பாக அமைய என்ன வழி என்பதையும் சொல்லிக் கொடுக்கிறது.

முதல் அணுகுமுறையை "மேக்ரோ" அணுகுமுறை என்று சொல்லுவார்கள். ஆங்கிலத்தில் "மேக்ரோ" என்றால் ஒட்டுமொத்தமான, முழுமையான என்று அர்த்தம்.

இரண்டாவது சொல்லியுள்ள அணுகுமுறையை "மைக்ரோ" அணுகுமுறை என்று சொல்லுவார்கள். ஆங்கிலத்தில் "மைக்ரோ" என்றால், ஒவ்வொன்று பற்றியும் நுணுக்கமான என்று பொருள். இந்த இரண்டு அணுகுமுறையும் ஒன்றுடன் ஒன்று இணையும்போது முழுமையான கண்ணோட்டமும் கிடைக்கும்; தனித்தனியான கண்ணோட்டமும் கிடைக்கும்.

இந்து மதம் என்பது பலரது சிந்தனைகளின் தொகுப்பாக அமைந்திருப்பதால் கிடைக்கின்ற இலாபம் அதிகமாகும். தவிர பல்லாயிரம் ஆண்டுகளாக இந்து சமுதாயம் பல்வேறு பழக்கவழக்கங்களைக் கையாண்டு, காலத்துக்கு ஒவ்வாத விடயங்களைத் தள்ளி, எல்லாக் காலத்துக்கும் பொருந்துகின்ற விடயங்களை ஏற்று தொடர்ந்து பரிணாம வளர்ச்சி அடைந்து வருகிறது.

ஸ்தாபகர் சொன்னார், ஆகவே அது தான் சரி என்கிற கொள்கை இறுக்கம் இந்து மதத்துக்கு இல்லை. புதிய சிந்தனைகள் எதுவாக இருந்தாலும், அது விழுமியதாக இருக்குமாயின், இந்துமதம் ஏற்றுக்கொண்டுள்ள வாழ்க்கை அடிப்படைகளுக்கு முரண்படாமல்

*வறுமையிலும் தன் நிலையிலிருந்து மாறாதவர்களே மேன்மக்கள்.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இருக்குமாயின் அதை ஏற்றுத் தன்னுடையதாக்கி கொள்ளுவது இந்து மதத்தின் தனிச் சிறப்பாகும். தோண்டத்தோண்ட ஊற்றில் நீர் சுரப்பதைப்போல, இந்துமதச் சிந்தனைகளைத் தோண்டத் தோண்ட புதிய புதிய எண்ணங்கள் ஊற்றெடுப்பதைப் பார்க்கமுடியும். இன்னும் தோண்டுவோம்; வாருங்கள்.

(தொடரும்...

## தங்குதடையின்றித் தனித்துவமாய் மலர்கின்றது

சந்நிதியான் உறைந்தருளும் சந்நிதியான் ஆச்சிரமத்தின்
சந்நிதியானைப் போற்றி ஏற்றும் மோகனதாஸ் சுவாமிகளின்
சிந்தையில் உதித்த சிறந்த நல் ஞானச்சுடர்
இந்த வெளியீடு இன்று இரு நூற்றி ஐம்பதாகத் திகழ்கின்றது.

பார்புகழும்தமிழ்ப் பூங்காதனி லன்று அச்சேற்றி
ஈர்நூறு ஐம்பது மலர்களாக ஆரம்பித்து
பார் போற்றச் சொந்தக் கணனியிலே பதிவாகி
ஈராயிரத்து ஐந்நூறு பிரதிகளாக வருகிறது.

ஆன்மீகக் கதைகளுடன் அந்தாதி அருள்வெண்பா
மேன்மைமிகு பயணக் கட்டுரைகள் படப்பதிவு
தேனான நற்சிந்தனை தெவிட்டாத குறள்அமுதம்
தான்தரும் தகவல்களால் இத்தரணியையே ஆள்கிறது.

ஆற்றங்கரையானின் அற்புத அருளினாலே
போற்றிடும் வண்ணம் பொலியும் எம் ஆச்சிரமத்தால்
ஆற்றிடும் சேவைகளை அவனியோர் அறியும் வண்ணம்
சாற்றுகின்ற ஓராவணம் எம் சந்நிதியின் ஞானச்சுடர்.

வங்கியொடு வர்த்தக நிலையங்களுக்குச் சென்று
எங்களின் நூலுக்கு விளம்பரங்கள் தாருமென்று
ஆங்கவரை இரந்து அவருதவி பெற்றிடாது
தங்கு தடையின்றி தனித்துவமாய் மலர்கிறது.

என்னாலே ஏதுமில்லை என்னிடம் ஏதுவுமில்லை
மன்னவன் சந்நிதியான் மனமார தந்திங்கே
தன்னாலே காரியங்கள் தளராது நடாத்திவைக்க
என்னையோர் கருவியாக்கினன் என்பார் மோகன்ஐயா.

வண்ண வடிவழகன் மாண்பான ஞானச்சுடர்
மண்ணிலே மக்களெல்லாம் மனப்போக்கில் வாழாது
திண்ணமாய்த் தெய்வீகக் கருத்துக்களால் தெளியவைத்து
விண்ணளாவும் புகழோங்கிவளர வேலவனை வேண்டுவோமே.

-அன்னைதாசன்-

*கேட்கப்படுவதற்குமுன் கருணை காட்டுவதே தியானம்.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஞானச்சுடரே! வாழ்த்துகின்றோம்!

– **திரு கி. குலசேகரன்** அவர்கள் –

இன்று தொழில்நுட்ப ரீதியாக உலகம் பல்வேறு முன்னேற்றங்களைக் கண்டிருக்கிறது. நாம் கணினி யுகத்தில் வாழ்ந்து கொண்டிருக்கிறோம்! கல்வித் துறையின் பல்வேறு பகுதிகளிலும் நாம் பாரிய வெற்றிகளைப் பெற்றுக்கொண்டே வருகிறோம்! இவ்வாறான அறிவு வளர்ச்சிகளைக் கண்ட பின்பும், மனித வாழ்வில் நாம் அமைதியைக் காணமுடிகிறதா? சண்டை சச்சரவுகள் ஓய்ந்தனவா? போட்டி பொறாமைகள் தீர்ந்தனவா? இன, மத வேறுபாடுகள் நீங்கினவா? இல்லை என்றுதானே கூறவேண்டியிருக்கிறது. அல்லல்கள் படுவோரும் அகதிகளாய் அலைவோரும், நாளுக்கு நாள் அதிகரித்தவண்ணமே இருக்கிறார்கள்.

துன்பத்துக்கு அறியாமையும் காரணமாக இருக்கிறது என்பதை நாம் அறிந்திருக்கிறோம். ஆனாலும் அறிவால் வளர்ந்து விட்டோம் என்று நாம் பெருமிதமடைந்தாலும் எம் துன்ப நிலைக்கு என்ன காரணம்? என்று எண்ணிப் பார்க்கவேண்டும். நாம் அறிவியல் சார்ந்த அறிவில் வளர்ந்தோமேயன்றி அறிவியலை, எம் அன்பு நெறியை மறந்தே செல்கிறோம். இதனாற்றான் துன்பம் எங்கள் தொடர்கதையாக தொடர்ந்து கொண்டிருக்கின்றது. இந்த நிலையை மாற்றுவதில் தொண்டர், நிறுவனங்களும், சமய நிறுவனங்களும் பெரும் பங்கு வகிக்கின்றன. அதனாற்றான் மனித விழுமியங்களும், பண்பாடு, கலாசாரங்களும் இன்னமும் போற்றி வளர்க்கப்படுகின்றன.

இந்த வகையில், "கலாநிதி", "ஞான தான வள்ளல்", "லங்கா இரத்தின ஜோதி" என்றெல்லாம் பல்வேறு தரப்பினரால் பட்டம் அளித்துக் கௌரவிக்கப்பட்டவரும், 2018ம் ஆண்டு யாழ் மாநகர சபையினரால் "யாழ் விருது" வழங்கிக் கௌரவிக்கப்பட்டவருமான மோகனதாஸ் சுவாமிகள் தலைமையில் இயங்கும் சந்நிதியான் ஆச்சிரமமும், அதன் சைவ கலை பண்பாட்டுப் பேரவையும் ஆற்றும் பணிகளும் அளப்பரியவை.

அன்னதானப் பணிகளுடன் ஏனைய அறப்பணிகள், வைத்தியப் பணிகள், கல்விப் பணிகள் என எம்மால் அடுக்கிச் சொல்லக் கூடிய நானாவித பணிகளையும், நற்பணிகளாகவே செய்யும் இவ் ஆச்சிரமம் சமயக் கருத்துகள், கட்டுரைகள், கவிதைகள், சமயப் பெரியார்களின் வரலாறுகள் என்பவைகளை உலகளாவிய ரீதியில் கொண்டு செல்வதற்கான ஓர் ஊடகமாக விளங்கும் மாதாந்த சஞ்சிகையான ஞானச்சுடரின் 250ஆவது மலரை வெளியிடுவது கண்டு நாம் பெரு மகிழ்ச்சியும் பேரானந்தமும் அடைகின்றோம்.

1998ஆம் ஆண்டு தைமாதம் வெளிவந்த இம்மலர் இன்றுவரை தொடர்ந்து வெளிவந்து ஞான ஒளி பரப்பி நிற்பது அந்தச் சந்நிதிவேலன் திருவருளாலேயே! போர் காலச் சூழ்நிலையிலும் பல்வேறு இன்னல்கள் மத்தியிலும், காகிதாதிகள் பற்றா நிலையிலும் ஆண்டவன் துணையோடு இம்மலர் தவறாது வெளிவந்தமை ஆண்டவனின், ஆறுமுகனின் அற்புதமே என்றுதான் கூற வேண்டும். மலருக்கான ஆக்கங்களைத் தேடிச் சென்ற காலம் நீங்கி இன்று ஆக்கங்கள் ஆச்சிரமத்தைத் தேடி வருகின்ற நிலை

*மதம் என்பதன் உட்பொருள் சத்தியமும் அகிம்சையும்தான்.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இம் மலரில் மக்கள் கொண்டிருக்கும் விருப்பையும், ஆண்டவன்மீது அளப்பரிய பக்தி கொண்ட எழுத்தாளப் பெருமக்களின் ஆர்வத்தையும் வெளிப்படுத்திக் காட்டுகின்றது.

இலங்கைத் திருநாட்டில் எத்தனையோ மாத சஞ்சிகைகள் வெளிவந்தும் அவற்றுள் பல சஞ்சிகைகளைத் தொடர்ந்து வெளிவர முடியாத நிலையில் நின்றுவிட்டன. சஞ்சிகையை வெளியிடுகின்ற பணியை மட்டும் செய்கின்றவர்கள் பல்வேறு காரணங்களுக்காக இவ்வாறு இடை நிறுத்தம் செய்த போதும் பல்வேறுபட்ட பணிகளை மேற்கொள்கின்ற ஆச்சிரமத்தினர் மலர் வெளியிடுதலை தம் பணிகளில் ஒன்றாகக் கொண்டு மலரிலே திகதியிட்டு பிரதி மாதத்திலும் இறுதி வெள்ளிக்கிழமைகளில் இச் சஞ்சிகையை வெளியிடுவது அவர்களின் திட்டமிட்டு எதையும் செய்யும் செயற்பாடுகளுக்கு சான்று பகர்கின்றது. அழகான, ஆண்டவனின் படத்துடன் ஆலயப் படத்தையும், முன் அட்டை, பின் அட்டையாகக் கொண்டு, விபூதியுடன் இம் மலர் எம் கைகளில் தவழ்கின்றபோது, சந்நிதி ஆலயமே எம் மனக் கண்முன் தோன்றுகின்றது.

அச்சுப் பிழைகளின்றி, விளம்பரங்கள் ஏதுமின்றி யாரும் மெச்சுகின்ற வண்ணமாக, மேன்மைமிகும் ஆன்மீகக் கருத்துக்களை தாங்கிவரும் இம்மலர் 250ஆவது மலராக வருவது கண்டு இதயம் பூரிக்கின்றது. வெளியீட்டின் பின்னணியில் இருந்து செயற்படும் அனைத்து உள்ளங்களையும் வாழ்த்தி, இம் மலரின் தரம் மென்மேலும் வளர்ந்து பல்லாண்டுகள் காலம் தொடர்ந்து வெளிவர செல்வக்குமரனின் அருள்வேண்டி அவன் பாதம் வணங்கி அமைகின்றேன்.



சமுதாயப் பணிகளின் வரிசையில் சுயதொழில் ஊக்குவிப்பிற்காக தையல் இயந்திரம் வழங்கும் நிகழ்வு.

மௌனமே வலிமை மிக்கது. மற்றது அனைத்தும் வலிமை அற்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சந்நிதியான் ஆச்சிரமம் சேவைகள் – பணிகள்

– தொகுப்பு: வல்வையூர் அப்பாண்ணா –

## புனிதம் பெற்ற பூவரச மரத்தடி:

ஆச்சிரம முற்றத்தில் உள்ள பூவரச மரம் சிறுமரமாகவிருந்து, கிளை பரப்பி செழித்து வளர்ந்து- இன்று ஆச்சிரம முற்றத்தைமூடி குளிர்ந்த நிழல் கொடுத்து வருவது ஆச்சிரம வளாகத்தினுள் காலடி வைக்கும் ஒவ்வொருவரும் நன்கறிவர். பூவரச மரத்தின் வளர்ச்சியைப் போன்று- மரத்தடியில் உள்ள வடக்குப் பார்த்தபடியான வழிபடும் இடங் கூட காலத்துக்குக் காலம் பல்வேறு மாறுதல்கள்பெற்று வந்துள்ளது. மழை வெய்யில் அணுகாத தகரக் கொட்டகையினுள் விநாயகர், வேலும் - நீல மயிலுடன், உருவிற் பெரிய சிவலிங்கம் பிரதிஷ்டை செய்யப்பட்டு தனியொரு வணக்க ஸ்தலமாக உள்ளமையையும் இன்று காணலாம். இரவும் பகலும் எந்நேரமும் ஒளிர்ந்து கொண்டிருக்கும் விளக்கொளியில், தினமும் அபிஷேக ஆராதனைகள் செய்வது வழமையானது. வெள்ளி மற்றும் விசேட காலங்களில் ரா. சரஸ்வதி எனும் நடுத்தர வயதுப் பெண்மணியின் விசேட பூமாலை அலங்காரம் பார்ப்போரைப் பரவசப்படுத்துகிறது. மேற்குறித்த பெண்மணி வசதி குறைந்த, ஆதரவற்ற, சந்நிதிச் சுற்றாடலில் தங்கியிருப்பவர் என்பது குறிப்பிடத்தக்கது. உள் நுழையும் அடியவர்கள் கிண்ணங்களில் வைக்கப்பட்டுள்ள திருநீற்றினைப் பூசிப் பொட்டிட்டு பூவரச மரத்தினை வலம்வந்து வணங்குவதை தினமும் பார்க்கிறோம்.





கதிர்காமம் கொடியேற்றத்தன்று செல்வச்சந்நிதி ஆலயத்திலிருந்து "வேல் போகும்" நிகழ்வினை அனைவரும் பார்த்திருப்பீர்கள். மாலை 6.30 மணியளவில் கோவில் வாசலிலிருந்து முருகன் அடியார்களது விண்ணதிரும் அரோகரா கோஷத்துடனும் கோவில் பிரதம பூசகர் கூப்பிய கரங்களுடன் நேர் வீதி வழியாக அழைத்துவரப்பட்டு ஆச்சிரம

*நல்லவர்கள் மற்றவர்களுடைய நன்மைக்காக மட்டுமே வாழ்கிறார்கள்.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வாசலை அண்மித்த இடத்தில் அடியார்கள் சிதறு தேங்காய் அடிக்க, பிரதம பூசகர் கைகளை விரித்து வேலை வழியனுப்பி வைப்பது ஒரு உணர்வுபூர்வமான நிகழ்வாகும். ஆச்சிரம வாசலருகே இந்நிகழ்வு நடைபெறுவதாலேயே "புனிதம் பெற்ற பூவரச மரம்" எனக் குறிப்பிட நேர்ந்தது.



பூவரச மரத்தின் வலது புறம் குடிநீர் பெறுமிடமும்- கைகழுவும் இடமும் உள்ளது. இடது புறம் "ஆச்சிரமம்" என்பதனை அடையாளப் படுத்தும் தென்னங்கீற்றினால் வேயப் பட்ட விறாந்தைப் பகுதியும், அதன் இடதுபுறமாக சுவாமிகளின் மேசையும் சில வாங்குகளும் உள்ளன. விறாந்தையின் முழு அகலத்தையும் ஆக்கிரமித்தபடி- உட்புறமாக- எந்நேரமும் பரபரப்பாக இயங்கிக் கொண்டிருக்கும் "அச்சுக்கூடம்" உண்டு. இங்குதான் ஏறக்குறைய 21 ஆண்டுகளாக இடையீடின்றி வெளிவரும் மாதாந்த சமய சஞ்சிகையான "ஞானச்சுடர் அச்சேறுகிறது.

**இதுவே சந்நிதியான் ஆச்சிரம முற்றத்து நிழற்படம்.**



*வெற்றி என்பது விழாமல் இருப்பதல்ல, வீழ்ந்தபின் எழுவதேயாகும்.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஏன்?..... எதற்காக...

சந்நிதியான் ஆச்சிரமத்து சேவைகள்- பணிகள் பலவும் பரபரப்பின்றி- விளம்பரமின்றி- அமைதியாக மேற்கொள்ளப்படுவதனாலும், இந்த விபரத்தினைத் தெரிந்தவர்கள் சிலராகவும்- தெரியாதவர்கள் பலராகவும் இன்றுவரை உள்ளமையாலும் இத் தொகுப்பின்மூலம் முடிந்தவரை பணிகளின் விபரங்களை எடுத்துக்கூற விளைகின்றேன். அத்துடன், ஆச்சிரமப் பணிகள் பற்றி ஆய்வினை மேற்கொள்ள பல்கலைக்கழக மாணவர்கள் அடிக்கடி வருகிறார்கள். இவர்களைப்போல பின்னாளில் வரும் பல்கலை மாணவர்களின் ஆய்வுப் பணிக்கு இத்தொகுப்பு பயனுள்ளதாக இருக்கும் என்பதுவே இந்த ஆக்கத்தின் நோக்கம். தவிர, இது ஆச்சிரமப் பணியினை விளம்பரப்படுத்தும் நோக்கம் கொண்டதல்ல என்பதை வாசகர்கள் புரிந்துகொள்ள வேண்டும்.

எவ்வாறாயினும் இதுகூட முழுமையானதாகக் கருதமுடியாது. சில விடயங்கள் விடுபட்டிருக்கலாம். பல விடயங்கள் இடப்பெறுமதி கருதி சுருங்கக் கூறப்பட்டிருக்கலாம். வாசகர்கள் பொறுத்தருள்க.

## நித்திய அன்னப்பணி:

நித்திய அன்னப்பணியே ஆச்சிரமத்தின் உயிர்மூச்சு. ஆரம்பகால அன்னப்பணி சேவைக்காக சுவாமிகள் பட்ட சிரமங்களும்- கஷ்டங்களும் ஏராளம். அவை காலங்கடந்த விடயங்களாகி விட்டமையால் அதுபற்றி இங்கு எதுவும் குறிப்பிடவில்லை. அரசம்மா மடத்தில் ஆச்சிரமம் இயங்கிய காலத்தில் 1988இல் பங்குனி உத்தரத்தன்று "நித்திய அன்னப்பணி" ஆரம்பமாயிற்று. அன்றுமுதல் இன்றுவரை அன்னதானக் கந்தன் திருவருட் கடாட்சத்தினால் அன்னப்பணி தொடருகின்றது. அன்று ஏற்றி வைக்கப்பட்ட அடுக்களையின் அடுப்புகள் இன்றுவரை ஓய்வின்றி ஒளிர்ந்துகொண்டிருக்கிறது. அந்த அடுக்களையில்




*நம் எதிர்காலத்தை உழைப்பின் துணைகொண்டு நம்மால் மாற்றமுடியும்.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அன்னம் வடிக்கப்படுவதும், அடியார்கள் பசி நீங்க வயிராற பரிமாறப்படுவதும் முருகன் திருவருளே.



சந்நிதிச் சுற்றாடலில் ஒட்டுமொத்த இடப்பெயர்வு ஏற்பட்டு, மிகப் பிரமாண்டமான புத்தம் புதிய சித்திரத் தேர் எரிந்து சாம்பர் மேடாகிய ஒரு குறுகிய காலப்பகுதி கருமை நிறைந்தது. அதனை மறக்க முயற்சிக்கிறோம். முடியாமல் உள்ளது.

குடும்பங்களினால் கைவிடப்பட்டு, சந்நிதியானே கதியென சந்நிதிச் சுற்றாடலில் தங்கியிருக்கும் 60க்கும் அதிகமானோருக்கு மூன்றுவேளை உணவும்- காலை 7 மணிக்கு பால் தேநீரும், மாலை 4 மணிக்கு வெறும் தேநீரும் தவறாது வழங்கப்பட்டு வருகிறது. புதனன்று அப்பம் அல்லது தோசை, வெள்ளியன்று இடியப்பம், சனியன்று பாண் காலை வேளையின் விசேட உணவுகளாக வழங்கப்படுகிறது. மதிய உணவு மாறுபடாது. இரவு பாணும் சாம்பாரும் விரும்பியவர்களுக்கு அன்னமும் வழங்கப்படுகிறது. காலை உணவு 8.30, மதிய உணவு பகல் 12.00 மணி, இரவு உணவு மாலை 5.30, இதுவே உணவு வழங்கலுக்கான நேரம். பந்தியில் அமர்ந்து சாப்பிட முடியாதவர்களுக்காக தட்டுகளில் உணவு கொடுப்பதும்,



*ஒழுக்கமுள்ளவர்கள் இந்த உலகிற்கு ஏணியாய் இருப்பார்கள்.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கோயிலடியிலிருந்து ஆச்சிரமத்திற்கு நடந்துவர முடியாதவர்களுக்கான உணவினை வேறொருவர் வாங்கிச் செல்வதும் இங்கு வழமையில் உள்ளது.

இதைவிட ராசவள்ளிக்கிழங்கு- வத்தாளைக் கிழங்கு போன்றவற்றிற்கான காலங்களில் இத்தகைய கிழங்கு வகைகளும், ஆடிப்பிறப்பு நாளில் கருப்பணிக் கூழும்- பிடிக்கொழுக் கட்டையும், சித்திரை வருடப்பிறப்பு போன்ற விசேட நாட்களில் சர்க்கரைப் பொங்கலும் சரஸ்வதி பூசை, திருவாதிரை நாளில் அவல் கடலையுடன் பொங்கலும் விசேடமாக வழங் கப்படுகிறது.



புதுவருடம் - தீபாவளி போன்ற விசேடங்களை முன்னிட்டு உடுபுடவைகள்- வேட்டிகள் என் பனவும், மழைக்காலம் ஆரம்பிக் கும் முன்பதாக போர்வைகளும் வழங்கப்படுகிறது. இத்தகைய உடுபுடவை- போர்வைகள் வழங் கலில் தனிப்பட்டவர்களின் அன் பளிப்புகளும் அடிக்கடி கிடைப்ப துண்டு. வெளியே இருந்து வரும் ஒருசிலர் காசு (நாணயத்தாள்கள்) வழங்குவதையும் நாம் அடிக்கடி பார்த்திருக்கிறோம்.

அண்மைக்காலமாக வாரமொருமுறை வழங்கப்பட்டு வந்த 1 சன்லைற் சோப், 1 லக்ஸ் சோப் அவர்களது துஷ்பிரயோகம் காரணமாக, இப்போது மாதத்திற்கு இரு தடவைகள் வழங்கப்பட்டு வருகிறது.

சந்நிதிச் சுற்றாடலில் உள்ள இத்தகையோரின் மருத்துவ வசதியினை பிரதான நோக்கமாகக் கொண்டு ஆரம்பமான மருத்துவசேவைபற்றி வேறொரு இடத்தில் தரப்படுகிறது.

## இவர்களுக்கு மட்டுமா அன்னப்பணி? முருகனுக்கு...

தினமும் காலையில் ஆச்சிரமத்தின் முதற்பணியாக 3படி பச்சரிசியும், 1 போத்தல் தேங்காய் எண்ணையும் முருகன் சந்நிதானம் போய்ச் சேருகிறது. சனிக்கிழமைகளில் விசேட மாக நடைபெறும் முருகனின் திருமுழுக்குப் பூசை நாளில் இவற்றிற்கு மேலதிகமாக 3 படி நாட்டரிசியும்- அதற்கான மரக்கறி வகைகளும் சேர்த்து அனுப்பப்படுகிறது.

மாலையில் இருள் கவியும் வேளை வந்ததும்- ஆச்சிரமப் பணியாள் ஒருவர் காவு தடியில் முன்புறம் இரண்டும் பின்புறம் இரண்டாக தோளில் சுமந்தபடி கொண்டு செல்லப்படும் கண்ணாடிப் பெட்டிகளில் வைக்கப்பட்டுள்ள நான்கு விளக்குகளும் முருகன், பிள்ளையார், வள்ளியம்மன், தெற்கு வாசல்களில் வைக்கப்படுகிறது. மேற்குறித்த இந்த மூன்று கைங்கரியங் களும் அரசம்மா மடத்தில் ஆச்சிரமம் இயங்கத் தொடங்கிய 1988இலிருந்து என்ன காற்று- மழை- புயல்- வெள்ளம் எதுவரினும் நேரம் தவறாமல் அன்னக் கந்தனின் திருச் சந்நிதானம் போய்ச் சேருகிறது. காலையில் அரிசியுடன் செல்லும் ஆச்சிரமப் பணியாள் விளக்குகள் அனைத்தையும் மீண்டும் ஆச்சிரமம் கொண்டு வந்து சேர்ப்பார்.

*மன வலிமை இல்லாதவர்கள் சந்தர்ப்பங்களுக்குக் காத்திருக்கின்றனர்.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கந்தசஷ்டி காலத்தில் தினமும் ஒரு கூடை நிறைய பலவிதமான பழ வகைகள் கோவில் மடைப்பள்ளியில் தயாராகும் தீர்த்தம் வழங்கலுக்காக அனுப்பப்படுகிறது. இதைவிட உட்பிரகாரத்தில் தீர்த்தம் வழங்கிவரும் தனிப்பட்டவர்களுக்கும் கிடைப்பதற்கு ஏற்றபடி பழங்கள் அனுப்பி வைக்கப்படுகிறது.

## கல்விப் பணி:

ஆச்சிரமத்தின் கல்விப்பணி என்பது சிறுவர் பாடசாலை- அறநெறிப் பாடசாலை முதற்கொண்டு பல்கலைக்கழக மாணவர்களது உதவி ஈறாக உள்ள பல்வேறு பரிமாணங் களைக் கொண்டுள்ளது. ஆச்சிரம சுற்றாடலில் உள்ள சிறுவர் பாடசாலை- அறநெறிப் பாட சாலைகளின் ஆண்டுவிழாவின்போது அல்லது விளையாட்டுப்போட்டி வேளையின்போது அவர் களுக்குத் தேவையான பரிசுப் பொருட்கள் முதலானவை ஆண்டு தவறாது வழங்கப்படுகிறது.

கடந்த பல வருடங்களாக ஆண்டிறுதியில் பாடசாலை அதிபரின் சிபார்சு கடிதத்துடன் வரும் வறுமைக்கோட்டுக்குக் கீழுள்ள மாணவர்களிடமிருந்து பதிவுகளை மேற்கொண்டு, பாடசாலை ஆரம்பமாகும் தினத்திற்கு முன்பாக இந்த வழங்கல் நடைபெறுகிறது. அந்தந்த தரத்திற்கு என்ன விதமான கொப்பி வகைகள் வேண்டும் என்பதுபற்றி அந்தந்த தரங்களில் கற்பிக்கின்ற ஆசிரியர்களின் ஆலோசனைக்கு அமைவாக, ஆண்டு 1 முதல் ஆண்டு 12 வரையிலான மாணவர்களின் தேவைக்கு அமைவாக கொப்பிகளின் வழங்கல் வித்தியாசப்படும். கொப்பி வகைகள், பேனை- பென்சில், கொம்பாஸ், கலர் பென்சில் என பல்வேறு எழுது கருவிகளும் இதனுள் அடங்கும். இந்தத் தேவைகளுக்காக ஒவ்வொரு புதிய கல்வியாண்டிலும் ரூபா 2 லெட்சம் வரை ஒதுக்கீடு செய்யப்படுகிறது. மாணவர்களின் தேவைக்கேற்பவும், நிதி வசதிக்கேற்பவும் இது ஜனவரி மாத முற்பகுதியில் இரண்டு மூன்று தடவைகளில் நடைபெறுகிறது.



*துன்பம் என்ற ஒன்று இருந்தால்த்தான் சுகம் என்ற ஒன்றும் இருக்கும்.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பல்கலைக்கழக மாணவர்களது கல்வி ஊக்குவிப்பு பணிகள் பற்றிப் பார்ப்போம். ஒவ்வொரு மாதமும் இறுதி வெள்ளிக்கிழமைகளில் வழங்கப்பட்டுவரும் (2011) உலர் உணவுப் பொருள்களின் விநியோக நாளில், அவர்களால் அழைத்து வரப்படுகின்ற மாணவர் களுக்கு மாதாந்தம் 1000 வீதம் வழங்கப்பட்டு வந்தது. ஆண்டுகள் கடந்து செல்ல, பல்கலைக் கழக மாணவர்களின் கோரிக்கைகளும் அதிகரிக்க, உதவி வழங்கும் முறையினில் பல மாறுதல்கள் செய்யப்பட்டன. குறிப்பாக வெளிமாவட்ட பல்கலைக்கழக மாணவர்கள் உட்பட,

1) கிராம உத்தியோகத்தரால் சிபார்சு செய்யப்பட்டு, உதவி அரசாங்க அதிபரினால் அத்தாட்சிப்படுத்தப்பட்ட கடிதம் பெறுதல்.
2) பல்கலைக்கழகத் தெரிவினை உறுதி செய்யும் பதிவாளரின் கடிதப் பிரதியினைப் பெறுதல்.
3) பயனாளிகளின் குடும்ப சூழல்- வருமானம் பற்றிய தகவலை ஏதோ ஒரு வழியில் பெற்றுக்கொள்ளல்.
4) தெரிவு செய்யப்பட்ட பயனாளிகளைக் கிட்டிய இலங்கை வங்கிக் கிளையில் தனிப்பட்ட சேமிப்புக் கணக்கினை ஆரம்பிக்கும்படி ஆலோசனை கூறல்.

மேற்குறித்த வகையில் தெரிவு செய்யப்பட்ட மாணவ மாணவியரின் கொடுப்பனவு ரூபா 2000, ரூபா 2500 என அதிகரிக்கப்பட்டு அவரவர் வங்கிக் கணக்குகளுக்கு மாதம் தவறாது பணம் அனுப்பப்பட்டு வருகிறது. ஏறக்குறைய 40பேர் 2012 முதல் 2015 வரையிலான காலப்பகுதியில் பயனடைந்தனர். 2016, 2017, 2018 ஆண்டுகளில் 91 பல்கலைக்கழக மாணவர்கள் இந்த உதவித் திட்டத்தில் பயனடைந்து வருகின்றனர். ரூபா 5000 மாதாந்தம் பெற்றுக்கொள்வோரும் சிலருண்டு. வருட ஆரம்பத்தில் பயனாளிகளின் தொடர்பு ஏற்படாவிடில் (பல்கலைக் கல்வி நிறைவு பெற்றதாகக் கருதி) அவர்களது கொடுப்பனவுகள் நிறுத்தப்படு கின்றது. மேற்குறித்த பல்கலைக்கழக மாணவர்களது மாதாந்த கொடுப்பனவு விபரங்கள் வருடாந்த பதிவேடுகளிலும், வங்கியின் மாதாந்த கணக்குப் பட்டியலிலும் தெளிவாக உள்ளன.

வெளியூர் பாடசாலைகளிலிருந்து கல்விச் சுற்றுலா வரும் நூற்றுக்கணக்கான மாணவர் களுக்கும், கடந்த மூன்று- நான்கு வருடங்களுக்கு முன்னர் திறந்து வைக்கப்பட்ட, சந்நிதிக்கு சரி தெற்காக வெளிக்கள நிலையத்திற்கு ஆய்வுகளை மேற்கொள்ள வரும் நூற்றுக்கணக்கான மாணவ மாணவியர்கட்கும் மதிய உணவு வழங்கப்பட்டு உபசரிக்கப்படுகிறார்கள். இதில் சம்பந்தப்பட்ட பாடசாலைகள் வருகை தரவுள்ள மாணவர்களின் தொகைபற்றி முன்னறிவிப்பு செய்வதை தற்போது வழமையாக்கிக் கொண்டுள்ளனர்.

## மகத்தான மருத்துவ சேவை

சந்நிதியான் காலடியே தஞ்சமென பல்வேறு மடங்களிலும் தங்கியிருக்கும் கதியற்றவர்களுக்கான நித்திய அன்னப்பணி ஆச்சிரமத்தில் தொடர்ந்து வரும் நாளில், அவர்களது மருத்துவ தேவைகளைக் கவனிக்கவென சுவாமிகளின் சிந்தனையில் உருவானதே "இலவச மருத்துவ சேவை"யாகும். ஆச்சிரமத்தில் இப்போது கண்ணெதிரே உள்ள உயர்ந்த- விசாலமான- பரந்த கட்டிட அமைப்பில்லாமல், பழைய- ஒடுங்கிய மண்டபங்களோடு கிடுகினால் வேயப்பட்ட முன் மண்டபத்தில் நோயாளர் வரிசையாக



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வாங்குகளில் அமர்ந்துகொள்ள, இடதுபுற மண்டபத்தில் வைத்தியர்கள் நோயாளர்களைப் பரிசோதிக்க, வடக்குப் பார்த்த மேடையில் மருந்தாளர்கள் மருந்துகளை வழங்க இலவச மருத்துவசேவை நடைபெற்று வந்தது. பரு. ஆதார வைத்தியசாலை வைத்திய அதிகாரியாக இருந்த டாக்டர் சி. கதிரவேற்பிள்ளை அவர்களே இந்தச் சேவையினை ஆரம்பித்து வைத்தவர் ஆவார். தொடர்ந்து டாக்டர் மா. யோகேஸ்வரதேவர், டாக்டர் இ. ஞானசீலன், டாக்டர் சி. இராசலிங்கம் ஆகியோர் டாக்டர் சி. கதிரவேற்பிள்ளை அவர்களின் பணியினைத் தொடர்ந்து செய்து வந்தனர். வாரத்தில் ஞாயிறு, புதன் ஆகிய இரு நாட்களாக இப்பணி தொடர்ந்தபோது, டாக்டர் பொன். சின்னத்தம்பி, டாக்டர் சி. சிவயோககுரு ஆகியோர் பொறுப்பேற்றுக்கொண்டனர். இடைப்பட்ட நாளில் கண் டாக்டர் ச. குகதாசன் அவர்களும், மகப்பேற்று நிபுணர் டாக்டர் சி. பவானி அவர்களும் வாரத்தில் ஒருமுறை வருகை தந்து நோயாளர்களைப் பரிசோதித்து வந்தார்களாயினும் அவர்களது கடுமையான வேலைகளுக்கு மத்தியில் அதனைத் தொடர முடியாது போயிற்று.









சந்நிதியான் ஆச்சிரமத்துடன் இணைந்தபடி மருத்துவ சேவை நடைபெறுவதில் இருந்த சிரமங்களை நீக்குவதற்காக, தனியாக ஒரு மருத்துவசேவைக் கட்டிடத்தை அமைக்க முடிவு செய்து, ஆச்சிரமத்திலிருந்து 300 மீற்றர் தெற்காக புதிய மருத்துவசேவைக் கட்டிடம் தோற்றம் பெற்றது. 01.01.2010இல் அமரர் தி. மகேஸ்வரன் அவர்களின் முதலாவது ஞாபகார்த்த நாளில் அமரர் மகேஸ்வரன் அவர்கள் ஆச்சிரமத்திற்கு ஆற்றி வந்த அருஞ் சேவைகளை மனதிற் கொண்டு, அவரது பணிகளுக்கான நன்றியாக, சந்நிதியான் ஆச்சிரம நிதி மூலம் கட்டப்பெற்ற "அமரர் தி. மகேஸ்வரன் ஞாபகார்த்த மருத்துவமனை" அன்னாரின் புதல்வியினால்

*வெற்றியின் அடிப்படை எடுத்த செயலில் நிலையாக நிற்பதே.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

01.01.2010இல் அன்னாரின் மறைவின் ஓராண்டு பூர்த்தி அன்று திறந்து வைக்கப்பட்டது.

விசாலமான முன் மண்டபமும், டாக்டர் நோயாளரைப் பரிசோதிக்கத் தனியறையும், மருந்தகம் தனியான ஒரு அறையிலுமாக போதுமான வசதிகளுடன் இன்று மருத்துவமனை திகழ்கிறது. பயிற்றப்பட்ட ஒரு பெண்மணி மருந்தாளராகப் பணி புரிகிறார். கிளினிக் கொப்பி முறைகளும், இரத்தப் பரிசோதனை-





குருதி அழுத்த சோதனை ஆகியனவும் இங்கு மேற்கொள்ளப்படுகின்றன. இழுப்பு நோயாளர்களின் பாவனைக்கான "பம்ப்" உட்பட சகல மருந்துகளும் இலவசமாக வழங்கப்படுகின்றன. எந்த மருந்தும் வெளியே வாங்கும்படி சிட்டை எழுதிக் கொடுக்கும் வழக்கம் இங்கில்லை. டாக்டர் பொன். சின்னத்தம்பி அவர்கள் தமது சொந்த காரணங்களினால் சேவையிலிருந்து விலகிக்கொள்ள, கடந்த பல வருடங்களாக- பல்வேறு சிரமங்களுக்கு மத்தியிலும் டாக்டர் சி. சிவயோககுரு அவர்கள் ஒவ்வொரு ஞாயிற்றுக் கிழமைகளிலும் தமது சேவையினைத் தொடர்ந்து வருகிறார். டாக்டர் சி. சிவயோககுரு அவர்களுக்கு சந்நிதியான் ஆச்சிரமம் தனது விசேட நன்றியினைத் தெரிவித்துக் கொள்கின்றது.



## ஒரு பிற்குறிப்பு:

ஒரு புரிதலுக்காக 25.12.2003 தினக்குரல் பத்திரிகையில் வந்த செய்தியின் ஒரு வசனம் மட்டும் கீழே தரப்பட்டுள்ளது. "14.10.2001இலிருந்து மார்கழி 2003வரை உள்ள காலப்பகுதியில் 9219 நோயாளர்கள் ஆச்சிரம இலவச மருத்துவ சேவையில் பயனடைந்துள்ளதாகவும் இதற்காக வருடம் ஒன்றுக்கு ரூபா மூன்று இலட்சத்து ஏழாயிரத்து ஐம்பது ரூபாவுக்கான மருந்து வகைகள் கொள்வனவு செய்யப்பட்டுள்ளதாகவும் அச்செய்திக் குறிப்பு கூறுகிறது.

*நேர் வழியில் அடையமுடியாததை ஒருநாளும் தவறான வழியில் அடையமுடியாது.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**வழங்கல்**

பெறுமதிகூடிய வழங்கல்களின் பட்டியல் மட்டுமே கீழே தரப்பட்டுள்ளது. வாய்மூலம் கோரப்பட்ட உதவிகளின் பிரகாரம் வழங்கப்பட்ட ஏராளமான உதவிகள் இங்கு குறிப்பிடப் படவில்லை. அதனால் இங்கு குறிப்பிட்டுள்ள பட்டியல் முழுமையானதாக இல்லை.

சந்நிதியைச் சுற்றியுள்ள கிராமங்கள், மற்றும் அயலூர்களில் வறுமைக் கோட்டுக்குக் கீழ் வாழும் மக்கள், கணவனை இழந்த விதவைக் குடும்பம், உழைக்க வேண்டிய ஆண்மகன் நோய்வாய்ப்பட்டிருத்தல், யுத்த பாதிப்புக்கள் முதலான காரணங்களை ஆராய்ந்து, அவரவர் தரத்திற்கு ஏற்றபடி மாதாந்தம்- கடைசி வெள்ளி மாலையில்- அரிசியும் பாடசாலை செல்லும் பிள்ளைகளின் தேவைக்கேற்றபடி பணமும் வழங்கப்படுகிறது. 2011இல் ஆரம்பித்தபோது 46பேர் பயனடைந்த இந்த வழங்கல் நடைமுறை படிப்படியாக அதிகரித்து இன்று மாதாந்தம் நூற்றுக்கணக்கானோர் பயனடைந்தும் வருகின்றனர்.

நித்திய அன்னப்பணியினால் பயனடைந்துவரும் சந்நிதிச் சுற்றாடலில் உள்ள அனைவருக்கும் தீபாவளியை அண்மித்த காலப்பகுதியில் உடுபுடவைகள்- வேட்டிகள், மழைக் காலத்திற்கான படுக்கை விரிப்புகளும் ஒவ்வொரு ஆண்டும் வழங்கப்பட்டு வருகிறது. இந்த வழங்கலில் சில சந்தர்ப்பங்களில் பொதுமக்களும் இணைந்துகொள்வதுண்டு.

யாழ். சமூக சேவைப்பிரிவு தொடக்கம் பரு. பிரதேச செயலர் பிரிவு, கரவெட்டி பிரதேச செயலர் பிரிவு, மருதங்கேணி பிரதேச செயலர் பிரிவு ஆகியவற்றினால் நடாத்தப்படும் முதியோர் தின விழாக்களில்- அவர்களின் வேண்டுகோளுக்கு ஏற்றபடி உடுபுடவைகள்- வேட்டிகள் முதலியன ஒவ்வொரு ஆண்டும் வழங்கப்படுகிறது.

தொண்டைமானாறு என்பது, சந்நிதி முருகனதும்- சந்நிதியான் ஆச்சிரமத்தினதும் சொந்த வீடு போன்றது. அதனால் தொண். மகா வித்தியாலயமும் உறவுக்காரராகி நெருங்கிவிட ஆச்சிரமத்தின் அக்கறையும் சற்று தூக்கலாக இருப்பது தவிர்க்க முடியாது. இந்த அடிப்படையில், தொண். மகா வித்தியாலய மாணவர்களுக்காக பல சந்தர்ப்பங்களிலும் பல்வேறு விதமாகவும் உதவிகள் வழங்கப்பட்டன. 2007இல் 73 மாணவர்களுக்காக ரூபா 43000 செலவில் பாடசாலைச் சீருடைகள் வழங்கப்பட்டன. 2008 இல் பாடசாலை மாணவ மாணவியருக்கான கழுத்துப் பட்டிகள் வழங்கப்பட்டன. அரசாங்கம் வழங்கிய பாடசாலைச் சீருடைத் துணியினை தைத்துக் கொடுக்கும் பணியினை சந்நிதியான் ஆச்சிரமம் ஏற்றுக் கொண்டு- பெரும் பொருட்செலவில் சீருடைகளை தைத்துக் கொடுத்ததையும் குறிப்பிட்டே ஆக வேண்டும்.



*பிறரை விமர்சிக்கும் ஒருவன் தன் குறைகளை வெளிப்படுத்துகிறான்.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பரு. தம்பசிட்டி சர்வோதய முன்பள்ளி, வடமராட்சி முன்பள்ளி கொத்தணி, வல்வெட்டித்துறை முன்பள்ளி கொத்தணி, கொற்றாவத்தை பூமகள் ச.ச.நி, கலைவாணி அரசடி முன்பள்ளி, வல்வெட்டித்துறை அ.மி. பாடசாலை மற்றும் றோ.க. பாடசாலை, புன்னாலைக் கட்டுவன் அ.த.க. பாடசாலை, புலோலி மெதடிஸ் மிஷன் பாடசாலை, கற்கோவளம் புனித நகர் அறநெறிப் பாடசாலை, இமையாணன் கலைமகள் முன்பள்ளி, கெருடாவில் இ.த.க. பாடசாலை, உடுவில் முன்பள்ளி கொத்தணி, தொண். வளர்மதி முன்பள்ளி, யா/ உடுவில் மான்ஸ் பாடசாலை, வலிகாமம் வடக்குப் பிரிவுக் கொத்தணி, அல்வாய் இ.த.க பாடசாலை, தெல்லிப்பழை தந்தை செல்வா ஞாபகார்த்த முன்பள்ளி, கொட்டடி நமசிவாயம் வித்தியாலயம், தம்பசிட்டி-ஆத்தியடி முன்பள்ளி முதலானவைக்கு அவற்றின் வருடாந்த பரிசளிப்பு விழாக்கள், விளையாட்டுப் போட்டியின்போது பரிசுப் பொருட்களாகவும் கற்றல் உபகரணங்களாகவும் வழங்கப்பட்டன. இவற்றுள் சிலவற்றிற்கு மீண்டும் மீண்டும் உதவிகள் வழங்கப்பட்டுள்ளது.

இதைவிட அமரர் மகேஸ்வரன் ஞாபகார்த்தமாக 95 மாணவர்களுக்கும், இலுப்பைக் கடவை கலாசார மண்டபத்தில் வைத்து 104 மாணவர்களுக்கும் கற்றல் உபகரணங்களும், அல்வாய் சின்னத்தம்பி வித்தியாலய மாணவர்களுக்கு 270 கழுத்துப் பட்டிகளும் வழங்கப்பட்டன.

கிளி. புனித அந்தோனியார் றோ.க. வித்தியாலயத்திற்கு ரூபா 40000மும் யா/ கரந்தன் இராமுப்பிள்ளை வித்தியாலயம் மற்றும் நீர்வேலி பாடசாலைகளின் பரிசளிப்பு விழாவிற்காக ரூபா 50000மும் திருவள்ளுவர் அறநெறிப் பாடசாலையினர் கணனி வாங்குவதற்காக ரூபா 25000மும் வழங்கப்பட்டது.

தொண். வல்லை வீதியைச் சேர்ந்த கிரிஸ்ரின் நாகம்மா என்பவருக்கு மலசலகூடம் அமைக்க உதவியாக 10000 மும் வடமாகாணக் கிளை நடாத்திய வெள்ளைப் பிரம்பு தின போக்குவரத்து செலவிற்காக 5000மும், மறவன்புலோ மேற்கு சாவகச்சேரி- ஆ. அன்னலெட்சுமி எனும் பெண்மணிக்கு 3500உம், மாவட்ட சமூக சேவைகள் அலுவலகம் நடாத்தும் சர்வதேச மாற்று வலுவுள்ளோர் தின விழாவிற்காக 50 போர்வைகளும், யா/ நீர்வேலி சின்னத்தம்பி



சிரேஸ்ட த. பாடசாலை மைதானம் வாங்குவதற்கான ஒரு பகுதி நிதியாக 50000மும், இராமநாதபுரம்- கண்டி வீதி இல 325/6 யூனிற், செ. தியாகராசா என்பவருக்கு தண்ணீர் தொட்டி அமைக்கவும்- அதற்காக மோட்டரு மாக 55000மும், தேசிய இந்து சமய அறநெறிக்கல்வி விழிப்புணர்வு வாரத்தை முன்னிட்டு, இந்துப் பண்பாட்டு நிதியத்திற்கு 15000மும், இலங்கை முதலுதவிச் சங்கம் உகந்தை மலை தரிசனத்திற்காக 15000மும், யாழ். அரியாலை ப. இந்திராணி என்பவரின் வீட்டுத் திருத்த வேலைகளுக்காக 11000மும், புதுக்குளம் முதியோர் இல்லத்தின் பல்வேறு தேவைகளுக்காக (1,00000) ஒரு இலட்சம் ரூபாவும், 2018 சித்திரை வருடப்பிறப்பன்று 165 பேருக்கு உடுபுடவைகளும்-வேட்டிகளும் அன்பளிப்பாக வழங்கப்பட்டுள்ளன.

*மலருக்கு மணமும் மனிதனுக்குக் குணமும் அவசியம்.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




சமுதாயப் பணிகளின் வரிசையில் யாழ்/ அல்வாய் வடக்கு றோ.க.த. பாடசாலை மாணவர்களுக்கான கற்றல் உபகரணங்களும், முதியோர் தினத்தை முன்னிட்டு கரவெட்டி பிரதேச செயலகத்திற்குரிய உடுபுடவைகளும் வழங்கும் நிகழ்வு.




*தோல்வி மனச்சோர்வைத் தருவதில்லை. மாறாக ஊக்கத்தையே தருகிறது.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அல்வாய் கொக்கட்டியாபதி ஞானவைரவர் ஆலயம் ரூபா 5000, வடமராட்சி வடக்கு தும்பளை தெற்கு தோற்றாவடி ஸ்ரீ மனோன்மணி அம்மன் ஆலயம் ரூபா 25000, உடுவில் கடவுள் சமாதி ரூபா 50000, கற்சிலை மடு- ஒட்டுசுட்டான் சம்மளந்துளாய் பிள்ளையார் ஆலயம் ரூபா 50000 ஆகியவை கோவில்களின் கட்டிட புனர்நிர்மாண வேலைகளுக்காக வழங்கப்பட்டன.

கிளி 4, 5/2 திருவையாறு செஞ்சோலை சிறுவர் இல்லத்திற்கு, 02.03.2014இல் கட்டிட அமைப்பிற்காக 50 சீமெந்து பைகளும், 17.02.2017இல் ரூபா 65000 பெறுமதியான உணவுப் பொருட்களும், 16.06.2018முதல் மீண்டும் இரு மாதத்திற்கு ஒரு தடவை உலர் உணவு வகைகளும் வழங்கப்படுகின்றன.

14.01.2011இல் சுழிபுரம் ரவீந்திரன் கிருஷாந்தினியின் கண்சிகிச்சைக்கு உதவியாக ரூபா 5000, நாவற்குழி 300 வீட்டுத்திட்டத்தைச் சேர்ந்த சோமசுந்தரம் சறோஜினிதேவிக்கு கண் சிகிச்சைக்கு உதவியாக ரூபா 5000, புன்னாலைக்கட்டுவன் குட்டியபுலத்தைச் சேர்ந்த சின்னையா சின்னராசா கண்ணாடி பெறுவதற்காக ரூபா 6000, அக்கராயன்குளம் கோ. கோபிஷாந் சிறுவனின் இருதய சிகிச்சைக்கு உதவியாக ரூபா 5000, வாழைச்சேனை- பேத்தாழை- கல்குடா வீதியிலுள்ள செல்வன் பாஸ்கரன் பிரணவன் எனும் மாணவனின் இருதய சிகிச்சைகட்கு உதவியாக ரூபா 50000, பாரிசவாத நோயினால் பாதிக்கப்பட்ட ஒருவரின் பராபரிப்புக்காக ரூபா 15000, கற்கோவளம் புனித நகரைச் சேர்ந்த க. ரஞ்சனின் மகனுக்கு வைத்தியச் செலவுக்காக ரூபா 10000 வழங்கப்பட்டது.

## உழவு யந்திரமும் - தண்ணீர் கொள்கலனும்

கிளிநொச்சி- வன்னேரிக்குளம் சிவயோக சுவாமிகள் திருவடி நிலைய முதியோர் இல்லத்தின் விவசாயப் பணிக்கான தேவை கருதி ரூபா 15 லெட்சம் பெறுமதியான உழவு யந்திரம் 29.10.2017இல் நேரில் கையளிக்கப்பட்டது.




*சிறு துணிவு இல்லாததால் உலகில் பல திறமைகள் சிதறிப்போகின்றன.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கதிர்காம வருடாந்த உற்சவத்தை நோக்கமாகக் கொண்டு நடைப்பயண அடியார்கள், உகந்தைமுதல் கதிர்காமம் வரையிலான இடைத் தூரத்தில் ஏற்படுகின்ற குடிநீர்ப் பிரச்சினையை நீக்குவதற்காக ரூபா 6 லெட்சம் பெறுமதி யான 5000 லீற்றர் கொள்வனவு உடைய தண்ணீர் கொள்கலன் தம்பிலுவில் சிவ தொண்டர் அமைப்பாளரிடம் நேரில் சென்று வழங்கப்பட்டது.




மேற்குறித்த இரு உதவிகளிலும் ஆச்சிரமத்தின் பணிக்கு பேருதவி புரியும் திரு அருட்செல்வம் (பபாசாமி) அவர்களது பங்களிப்பு முக்கியமானது.

ஒரு வாரத்திற்கு முன்னர் ஒரு தடவை 15.10.2018 (செவ்வாய்) புதுக்குடியிருப்பு தேவிபுரத்திற்குச் சென்ற சுவாமிகள் வாழ்வாதார உதவியாக ஒரு குடும்பத்திற்கு தையல் யந்திரமும், ஒரு குடும்பத்திற்கு மாடும் கன்றும், ஒரு மாற்றுத் திறனாளிக்கு 3 சில்லுச் சைக்கிளும் வழங்கியதுடன், கதவுகள் இல்லாமற் காணப்பட்ட 3 வீட்டு அறைகளுக்கு நிலை கதவுகள் பொருத்துவதற்காக- அழைத்துச் செல்லப்பட்ட தச்சு மேத்திரி மூலமாக- அளவுகள் எடுக்கப்பட்டு அடுத்த வாரம் இவ்வீடுகளுக்கு நிலைகளும் கதவுகளும் பொருத்தப்படவுள்ளது.

தம்பிலுவில் கிராமத்தின் குடிநீர்த் தேவைக்காக ரூபா 4 லெட்சம் பெறுமதியான நீர்த்தாங்கியும் அதற்கு நீர் நிரப்புவதற்குரிய தண்ணீர் பம்பும் 2018 புரட்டாதிமாத நடுப்பகுதியில் வழங்கப்பட்டது. இதற்கான அன்பளிப்பினை சுவிஸ் சைவநெறிக்கூடம் வழங்கியுள்ளது.

1) புதுக்குடியிருப்பு கைவேலி 1ஆம் வட்டார கிரா முன்னேற்றச் சங்கத் தலைவரின் வேண்டு கோளை ஏற்று வழங்கப்பட்ட 8 சைக்கிள்களுடன் மொத்தமாக 70 சைக்கிள்களும்...
2) வறுமைக் கோட்டிற்குக் கீழான பெண்களின் வருவாய் மேம்பாட்டிற்காக 10 தையல் இயந்திரங்களும்...
3) கால் ஊனமுற்றவர்களின் போக்குவரத்து வசதிக்காக 13 முச்சக்கர வண்டிகளும்...
4) பார்வைக் குறைபாடுடைய 22 பேர்களுக்கு மூக்குக் கண்ணாடிகளும் வழங்கப் பட்டுள்ளன. இவர்களில் மூன்றில் இரண்டு பகுதியினர் மாணவர்கள் என்பது குறிப்பிடத் தக்கது.

## சில நிகழ்வுகள்

சந்நிதியான் ஆச்சிரமத்தின் வருடாந்த நிகழ்வுகள் பலவுண்டு. விசேட நிகழ்வுகளும் சிலவுண்டு. இத்தகைய விழாக்களின்போது பூவரச மரத்தடியில் வீற்றிருக்கின்ற சிவன், முருகன், பிள்ளையார் அனைத்தும் விசேட பூமாலை அலங்காரங்களோடு திகழ, ஆச்சிரம மண்டபமும், முற்றமும் வாழை தோரணங்களாலும், நந்திக் கொடிகளாலும் அலங்கரிக்கப்பட்டு புதிய மெருகோடு தோற்றம் பெறும் விசேட நிகழ்வுகளில் அநேகமானவை சந்நிதியில் நடைபெறுகின்ற விசேட பூசை வழிபாட்டுடன் ஆரம்பமாகி, ஆச்சிரம மண்டபத்தில் நிறைவு பெறும்.

*வறுமை இனிய பண்புக்குச் சோதனைக் கருவி.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வருடந்தவறாது நடைபெறுகின்ற நிகழ்வுகளாவன:

1) திருவாசக விழா (பண்ணிசைப் போட்டிகள்- சமய அறிவுப் போட்டிகள் சில காலம் நடைபெற்றதாயினும் போதுமான ஆதரவின்மையால்- இப்போது திருவாசக விழா மட்டுமே நடைபெறுகிறது)
2) வே. முருகேசு சுவாமிகளின் குருபூசை தினம்
3) வைகாசிப் பெருவிழா (சில வருடங்களில் விசேட பட்டிமன்றங்கள் போன்றவையும் நடைபெறுவதுண்டு)
4) ஸ்ரீமத் மயில்வாகனம் சுவாமிகள் குருபூசை தினம்
5) மாணிக்கவாசகர் குருபூசை
6) திருவாசக முற்றோதல்
7) அருணகிரிநாதர் விழா.

ஒவ்வொரு வெள்ளியன்றும் 63 நாயன்மார் மகேஸ்வர பூசையும் சிவபுராணம் ஓதுதலும் தவறாது நடைபெறும் நிகழ்வாகும். (சந்நிதியானுடன் தொடர்புபட்ட சில விடயங்களும் ஒரு தகவலுக்காகக் கீழே தரப்பட்டுள்ளது)

05.05.1995- அரசம்மா மடத்தில் இயங்கி வந்த சந்நிதியான் ஆச்சிரமம் தற்போதைய இடத்தில் திறந்து வைக்கப்பட்டது. உயர்திரு வே. முருகேசு சுவாமிகள் தலைமை வகிக்க, நல்லை ஆதீன முதல்வர் திறந்து வைத்தார்.

25.05.1995- செல்வச் சந்நிதிச் சுற்றாடலில் செல் வீச்சு

17.03.1997- உயர்திரு வே. முருகேசு சுவாமிகள் சிவபதமடைந்தார். 18.03.1997 காலையில் அவரது பூதவுடல் தீயுடன் சங்கமம்.

09.10.1999- ஆறு திருமுருகனுக்கு பாராட்டு விழா.

08.05.2003- எழுச்சி விழா- இரண்டாவது உலகத் தமிழ் மாநாட்டிற்கு அனுசரணையாக, வடமராட்சி இந்து அமைப்புகள் ஒன்றியத்தினால் நடாத்தப்பட்ட "எழுச்சி விழா". பிரதம விருந்தினராக அமரர் தி. மகேஸ்வரனும், விசேட சொற்பொழிவாளராக தமிழக அறிஞர் முகவர் இரா. செல்வகணபதியும் கலந்து கொண்டனர்.

04.07.2004- வாரியார் சிலை பிரதிஷ்டை ஊர்காவற்துறை கரம்பனைச் சேர்ந்த நா. சிவானந்தஜோதி அவர்களினால் அன்பளிப்புச் செய்யப்பட்ட 21kg எடையுடைய வாரியார் சிலை, ஆச்சிரம மைய மண்டபக் கருவறையில் பிரதிஷ்டை செய்யப்பட்டது.

23.10.2004- புதிய சித்திரத்தேர் வெள்ளோட்டம். இந்து கலாசார அமைச்சராகவிருந்த மறைந்த மகேஸ்வரனது உதவியினால் "புதிய சித்திரத் தேர்" கட்டி முடிக்கப்பட்டு வெள்ளோட்டம் நிகழ்ந்தது.

ஒரு தகவல்: பிரமாண்டமான பழைய சித்திரத்தேர் வெள்ளோட்டம் 06.09.1984இல் நடந்தது. 1986இல் இத்தேர் முற்றாக எரிந்து சாம்பரானது.

2004- மார்கழி- சுனாமி அனர்த்தம்

*உற்சாகம் உள்ளவனை எந்த எதிர்ப்பாலும் தடை செய்துவிட முடியாது.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சுனாமி அனர்த்த அகதிகளுக்கு நாளாந்தம் 1500 உணவுப் பார்சல்கள் ஒரு மாத காலத்திற்கு வழங்கப்பட்டன.

மந்திகை வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட காயப்பட்ட நோயாளருக்காக ரூபா 15000 பெறுமதியான மருந்து வழங்கப்பட்டது.

வட கிழக்கு குடத்தனை- நாகர் கோவில் பகுதியின் கடல் அனர்த்த எச்சங்களை துப்பரவு செய்யும் சேவையில் ஈடுபட்ட மக்களுக்குத் தினமும் 500 உணவுப் பார்சல்கள் ஒரு வார காலத்துக்கு வழங்கப்பட்டது.

31.03.2005- வடமராட்சி வலிகாமம் பகுதிகளில் இயங்கும் 87 முன்பள்ளிகளின் ஆசிரியைகளுக்கான கருத்தரங்கு நடைபெற்றது.

01.04.2005- சிவத்திரு வ. குமாரசாமி ஐயர் அவர்களின் மணிவிழாவும்- பாராட்டு விழாவும் நடைபெற்றது.

2005- கார்த்திகை- சந்நிதியில் கார்த்திகைத் திருவிழா.



சந்நிதியில் விசேட பூசைகள் மட்டுமே நடைபெற்று வந்த கார்த்திகை நாள், அமரர் தி. மகேஸ்வரன் முயற்சியினால் கார்த்திகைத் திருவிழாவாக மாறியது- தை மாதத்தில் வரும் கார்த்திகைத் திருவிழா இன்றும் மகேஸ்வரன் குடும்பத்தாருக்கே உரித்தானது.

14.02.2008- அமரர் தியாகராசா மகேஸ்வரனின் ஆத்ம சாந்திப் பிரார்த்தனை.

26.11.2008- ஆச்சிரம வாசலில் இருந்த அரசமரம் நள்ளிரவில் (நிஷா) புயற்காற்றினால் சரிந்தது.

*கலங்கமற்ற மனது, மிகச் சிறந்த அறிவாற்றலைவிட மேலானது.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

2009- சந்நிதியான் ஆச்சிரமம்- சேவைகள் பணிகள் பாகம்- I வெளியீடு

31.01.2010- 2002- 2009 வரை வாராந்த வெள்ளி நிகழ்வுகளில் பங்குகொண்டு சிறப்பித்த நிகழ்ச்சியாளர்கள் அனைவரும் கௌரவிக்கப்பட்டனர்.

06.02.2012- சந்நிதியான் ஆச்சிரமம்- சேவைகள் பணிகள் பாகம் 2 வெளியீடு. இப்புத்தகத்தின் கடைசிப் பக்கத்தில் சுவாமிகள் எழுதிய ஒரு பக்க கட்டுரையில்- நித்திய அன்னப்பணிக்கு முதன் முதலாக வித்திட்டவர் கைதடியைச் சேர்ந்த அமரர் த. வேலாயுதன் ஆவார் என நன்றியோடு நினைவு கூர்ந்துள்ளார்.

03.11.2012 சந்நிதியில் தங்கியுள்ள முதியோரில் 24 பேர்களை- காரைநகர் ஈழத்துச் சிவன் கோவில் திருவாதிரை பார்க்க அழைத்துச் சென்றது.

03.03.2015- சிவன் மானுட மேம்பாட்டு நிறுவனத்தின் ஏற்பாட்டில் சமயப் பயிற்சி நெறி- ஆன்மீகம் மற்றும் மானிட மேம்பாட்டுடன் தொடர்புடைய வேலைத் திட்டத்தின் முக்கிய நிகழ்வாக சிவதீட்சை பெறும் நிகழ்வு இடம்பெற்றது. சராசரி 40 பேர்வரை பங்கு கொள்ளும் இந்நிகழ்வு இதுவரை 6 முறைகள் நடந்திருக்கிறது.

1990- கந்தசஷ்டி கால சொற்பொழிவு 5 நாட்களும் இரவு 7.00 மணிக்கு சொல்லின் செல்வர் இரா. செல்வவடிவேல் அவர்களினால் 1990 முதல் நிகழ்த்தப்பட்டு வருகிறது.

25.03.2017- போக்குவரத்து அமைச்சர் நிமால் சிறிபால டிசில்வாவின் பாரியாரும்- விலங்குகள் நலன்புரி நம்பிக்கை நிதியத்தின் தலைவியுமான திருமதி ஜராங்கனி டி சில்வா வருகை.



*பெற்றுக்கொள்பவன் அல்ல, கொடுப்பவனே பேறு பெற்றவன்.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

18.06.2017 சைவப்புலவர் க. நித்திய தசீதரன் அவர்களின் ஞாபகார்த்தப் பேருரை.

17.02.2018- மாணவர் கௌரவிப்பு

தேசிய மட்டத்திலும்- மாகாண மட்டத்திலும் முதல் இடங்களைப் பெற்ற மாணவர்களுக்கான கௌரவிப்பு.

06.10.2016- ஆச்சிரம சுற்றாடலில் உள்ள 70 முதியவர்கள், இன்றைய முதியோர் தின விழாவில் கௌரவிக்கப்பட்டனர்.

சுவாமிகளுக்கு "யாழ் விருது" வழங்கிய யாழ். மாநகராட்சி மன்ற சைவ சமய விவகாரக் குழுவிலுள்ள யாழ் நகர பிதா திரு இம்மானுவேல் ஆனல்ட் (போசகர்), திரு இ.த. ஜெயசீலன் (தலைவர்) உட்பட அனைவரும் கௌரவிக்கப்பட்டனர்.



## மலையக மண்சரிவு


2014- ஒக்டோபர் மாதம்- ஊவா மாகாணம்- பதுளை மாவட்டம்- ஹப்புத்தளை மீரியப்பெத்த தோட்டத்தில் ஏவிய பாரிய மண்சரிவு மலையகம் முழுவதையுமே பெரும் சோகத்தில் ஆழ்த்தியது. நூற்றுக் கணக்கானோர் உயிரிழப்பிற்குக் காரணமான இந்த மண்சரிவின் பாதிப்பை அறிந்ததும் ஆச்சிரம சுவாமிகளும்- அவரோடு யாழ். சின்மயா மிஷன், சைவ மகாசபை போன்ற ஏனைய 7 சைவ நிறுவனங்களும் இணைந்து ஆரம்ப அவசர நிவாரணப் பொதிகளுடன் 07.11.2014இல் மலையகம் விரைந்தனர். பூனாகலை தமிழ் மகா வித்தியாலயத்தில் தங்கியிருந்த மண்சரிவினால் பாதிக்கப்பட்ட மக்களை நேரில் சந்தித்து. தம்முடன் எடுத்துச் சென்ற உணவுப் பொதிகள், உதவிப் பொதிகள் ஆகியவற்றை வழங்கினர். 227 குடும்பங்களைச் சேர்ந்த 887பேரில் 423 ஆண்களும், 332 பெண்களும், 132 குழந்தைகளும் அப்பாடசாலையில் தங்க வைக்கப்பட்டிருந்தனர்.

*எதற்காகவும் உண்மையைத் தியாகம் செய்யக்கூடாது.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இதைவிட "மேலும் மண்சரிவு ஏற்படலாம்" என்ற அறிவிப்பின் பிரகாரம், காகில் தோட்டம் பொதுநோக்கு மண்டபத்தில் தங்கியிருந்த பொதுமக்களையும் சந்தித்து ஆறுதல் கூறினர். இரண்டு- மூன்று முறை தொடர்ந்த மலையகப் பயண அனுபவங்கள் மூலமாக, அம்மக்களின் தேவைகள்- அவர்களுக்கான அவசர உதவிகள் பற்றியும் சுவாமிகள் நன்கு அறிந்து கொண்டார். இந்த எண்ணங்களுக்கு அமைவாக சுவாமிகளின் மாதந் தவறாத மலையகப் பயணங்கள் அமைந்தது. சுவாமிகளின் மலையகப் பயணங்களின்போது அம்மக்களுக்கு வழங்கப்பட்டு வரும் உதவிகளும் கீழே தரப்படுகிறது.



பண்டாரவளை இந்து கலாசார மண்டபத்தில் நடைபெற்ற ஊவா கல்வி மேம்பாட்டு ஒன்றிய அங்குரார்ப்பண நிகழ்வில் எடுக்கப்பட்ட தீர்மானத்தின்படி யாழ்ப்பாணத்தின் பிரபல பாடசாலைகளில் மலையக மாணவர்கள் 11பேர் அனுமதிக்கப்பட்டு தமது உயர்கல்வியைத் தொடருகிறார்கள். இவர்களது கல்வி சம்பந்தமான செலவுகளை சைவ மகா சபையும், உணவுச் செலவீனங்களை சந்நிதியான் ஆச்சிரமமும் ஏற்றுக்கொண்டுள்ளது.

02.01.2015- பொலநறுவை- கறப்பளை சமணப்பிட்டி ஸ்ரீ சாரதாதேவி அறநெறிப் பாடசாலைக்கு ரூபா இரண்டு லெட்சத்து மூவாயிரத்து நூற்று நாற்பத்தேழு (2,03147) ரூபா பெறுமதியான 110 கூரைச் சீற்றுகள் நேரில் வழங்கப்பட்டது.

08.02.2015- அம்பாறை மாவட்டம்- பொத்துவில் பிரதேசத்திலுள்ள கோமாரி என்னும் இடத்தில் பின் தங்கிய அறநெறிப் பாடசாலை மாணவர்களுக்காக 1250 மீற்றர் சீருடைத் துணியும், கற்பிக்கும் ஆசிரியைகள் 25 பேருக்கு சேலைகளும் வழங்கப்பட்டன.

19.04.2015- ஹஸ்தும்முல்லை- நாமகள் தமிழ் வித்தியாலய மாணவர்களுக்காக ரூபா 27000 பெறுமதியான கற்றல் உபகரணங்கள் வழங்கப்பட்டன.

*அஞ்சாமையைவிட நேர்மையாக இருத்தலே அழகானது.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பொலநறுவை அறநெறிப் பாடசாலை மாணவர்களுக்கு 100 மீற்றர் துணி சீருடைகளாகத் தைத்து வழங்கப்பட்டது.

02.05.2015- ஹப்புத்தளை- கோணமுட்டாவ தமிழ் வித்தியாலய தரம் 5இல் கற்கும் மாணவர்களுக்கான புலமைப் பரிசில் பயிற்சிப் புத்தகங்கள் வழங்கியமை.

03.05.2017 களுத்துறை- ஹொரனை- இங்கிரிய சிறுவர் பள்ளிக்கு கற்றல் உபகரணங்கள் வழங்கப்பட்டன.

25.06.2017- தொட்டிலாகல சித்திர வேலாயுத சுவாமி திருக்கோவிலின் கட்டுமானப் பணிக்காக ஒரு லெட்சம் (100000) ரூபாவும்

03.07.2017- அப்புத்தளை, 122- தம்பேத்தன்னை வீதியில் வசிக்கும் வீரப்பன் முருகையா என்பவருக்கு இருதய சிகிச்சைக்காக ரூபா 15000ம்

14.08.2017- பண்டாரவளை- ஜெகநாதன் ரமணி என்பவருக்கு சுயதொழில் முயற்சிக்காக 15000ம்

11.11.2017- கம்பளை- அட்டபாகை- அட்டபாகை தோட்டம் ஸ்ரீ முத்துமாரி அம்பாள் ஆலய திருப்பணிக்காக ரூபா ஒரு லெட்சம் (100000)ம்

20.11.2017- ஏற்கனவே மண்சரிவினால் பாதிக்கப்பட்ட பெண்களுக்கான உடு புடவைகளும்

19.12.2017 அப்புத்தளை கோணமுட்டாவ தமிழ் வித்தியாலய மாணவி ஜெ. கோகிலா வுக்கு ரூபா 15000மும்

24.12.2017- அம்பாறை மாவட்டம்- மாணிக்கமடு- இறக்ககாமம் அறநெறிப் பாடசாலைக்கு கணனி வாங்குவதற்காக ரூபா 25000ம்

07.01.2018- பதுளை கதிரேசன் கோவில் அறநெறிப் பாடசாலைக்கு கற்றல் உபகரணங்கள்,

03.03.2018- சமனப்பிட்டி அறநெறிப் பாடசாலை மாணவர்களுக்கு சத்துணவுப் பொதியும், கற்றல் உபகரணங்கள் வாங்குவதற்கு ரூபா 15000ம், வாரம் மதிய உணவு வழங்கும் செயற்பாடும்

03.03.2018- பண்டாரவளை தெமோதரை தோட்டத்திலுள்ள முருகன் கோவில் கட்டிட புனரமைப்புக்காக ரூபா 50000ம்

03.03.2018 பண்டாரவளை கிரேக் கீழ்ப்பிரிவு தோட்ட மக்களுக்கு உடுபுடவைகளும்

25.05.2018- அம்பாறை- தம்பிலுவில் சிவதொண்டன் அன்னதான சபையினருக்கு 20 வேட்டிகளும் வழங்கப்பட்டன.

மலையகம் சம்பந்தமான இக்குறிப்பில் 3 முக்கிய நிகழ்வுகளை ஞாபகப்படுத்துவது பொருத்தமாக இருக்கும்.

*கல்வி என்பது வழமையில் ஒரு ஆபரணம், வறுமையில் ஒரு புகலிடம்.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

1) பண்டாரவளை இந்து இளைஞர் மன்றத்தாரின் 05.12.2015இல் விழாவில் உரையாற்றிய அமரர் சைவப்புலவர் நித்திய தசீதரனுக்கு பொன்னாடை போர்த்தி நினைவுச் சின்னம் வழங்கிய நிகழ்வு மறக்கமுடியாதது. இன்று அவர் எம்மோடு இல்லையாயினும், ஆச்சிரமத்துடன் அவர் கொண்டிருந்த ஒவ்வொரு அசைவுகளும் மனதில் நிழலாடுகிறது.



2) 20.02.2016- "மீரியப்பெத்தை மண்சரிவும் அதன் தாக்கமும்" "புத்தக வெளியீடு ஆச்சிரம மண்டபத்தில் நடைபெற்றது. புத்தக வெளியீட்டிற்காக மலையகத்திலிருந்து வருகை தந்திருந்த குழுவினர், மலையக மண்சரிவின் பாதிப்பு, தொடர்ந்து சுவாமிகள் ஆற்றிவரும் பணிகள்பற்றி தெளிவாகக் கூறினர்.

3) 13.3.2017 இந்நாளைய பதுளைப் பிரயாணத்தில் நல்லை ஆதீனம் அவர்கள் கலந்து கொண்டது. முக்கிய அம்சமாகும். பொதுவாக இப்படிப்பட்ட பிரயாணம் தவிர்த்துக் கொள்ளும் நல்லை ஆதீனம் அவர்கள், விரும்பி வருகை தந்து ஆச்சிரம சுவாமிகளோடு கூடவே மூன்று நாட்களும் தங்கியிருந்து- மலையகத்தில் நடைபெறும் ஆச்சிரமப் பணிகளையும் அவதானித்துத் திரும்பியமை ஒரு முக்கிய அம்சமாகப் பார்க்கப்பட வேண்டும்.

குருநாகல் வில்கொட வீதியில் உள்ள இந்து தமிழ் மகா வித்தியாலய மாணவர்கள் ஐவரின் போக்குவரத்து வசதிக்காக 5 துவிச்சக்கரவண்டிகள் வழங்கப்பட்டதுடன் அதிபரது விடுதி திருத்த வேலைக்காக ரூபா 50000மும் வழங்கப்பட்டது.

மாத்தளை கடவெல்ல வீதியில் உள்ள கலைமகள் வித்தியாலயத்திற்கு ரூபா 25000 பெறுமதியான கற்றல் உபகரணங்களுடன் இரண்டு மடிக்கணனிகளும் வழங்கப்பட்டன.

*துன்பத்தைச் சந்திக்கத் தெரிந்தவனுக்கு வாழ்க்கையில் தோல்வியே இல்லை.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பிரயாணத்தில் கலந்துகொண்ட நல்லை ஆதீனம் அவர்கள் இவற்றினை வழங்கியதுடன் நீண்ட நாட்களின் பின், பிரயாண இறுதியில் கதிர்காமக் கந்தனையும் தரிசனம் செய்தமை குறிப்பிடத்தக்கது.





உணவுப் பொருளாக, பணமாக, ஆசிரியர்களுக்குப் பயிற்சியாக, ஆசிரியைகளுக்கு உடுபுடவையாக, கருத்தரங்குகளாக மலையகம் நோக்கிய சுவாமிகளின் பயணம் மாதந் தவறாமல் நடைபெறுகிறது. மலையகத்தில் சுவாமிகள் சந்திக்கின்ற பொது நிறுவனங்கள், பாடசாலைகள், அறநெறிப் பாடசாலைகள், கோவில்கள் எனப் பலராலும் முன் வைக்கப்படும் கோரிக்கைகளின் பட்டியல் நீண்டு செல்கிறது. ஆனாலும் மலையக மாணவர்களின் கல்வி மேம்பாட்டிலேயே சுவாமிகளின் கவனம் கூடுதலாக உள்ளது. இந்த அடிப்படையில், 02.11.2018 வெள்ளியன்று இரவு 15 பேர் கொண்ட ஆசிரியர் குழுவினரோடு சுவாமிகள் மலையகம் நோக்கிப் புறப்படுகிறார். சனி- ஞாயிறு ஆகிய இரு முழு நாட்களும் மாணவர்களுக்கான கற்றல் வகுப்புகள், மீட்டல் வகுப்புகள், கருத்தரங்குகள் ஆகியன ஒரே வேளையில் வெவ்வேறு இடங்களில் நடைபெறுவதற்கான ஏற்பாடுகள் துரிதமாக நடைபெறுகின்றன. இதற்காக ஏற்படுகின்ற சகல செலவுகளையும் சந்நிதியான் ஆச்சிரமம் மகிழ்வோடு ஏற்றுக்கொண்டுள்ளது.

*சுயமாகச் சிந்திக்கத் தெரிந்தவனுக்கு ஆலோசனை தேவையில்லை.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஞானச்சுடர்

சந்நிதியான் ஆச்சிரமத்தில் "சைவ கலை பண்பாட்டுப் பேரவை" தோற்றம்பெற்ற பின்னர் இரண்டு காரியங்கள் முனைப்புப் பெற்றன. (1) சைவ சமயக் கோட்பாடுகளை வலியுறுத்தவும் பரப்பவும் வழிவகை செய்யவென - சைவ மணம் கமழும் "ஞானச்சுடர்" சமய சஞ்சிகையை மாதந்தோறும் வெளியிடல். (2) ஆச்சிரம மண்டபத்தில் வாராந்த நிகழ்வுகளை ஒழுங்கு செய்தல்.

சைவ கலை பண்பாட்டுப் பேரவையின் தீர்மானத்தின்படி நெல்லியடி தமிழ்ப்பூங்கா அச்சகத்தில் 1998 தை மாதத்தில் 25 பக்கங்களுடன் "ஞானச்சுடர்" முதல் மலர் அச்சிடப்பட்டு, சந்நிதியான் ஆச்சிரம மண்டபத்தில் வைத்து வெளியிடப்பட்டது.

விளம்பரம் எதுவுமின்றி- விற்பனை நிலையங்களை நாடாமல் "ஞானச்சுடர்" 20 வருடங்கள் கடந்து 21ஆவது ஆண்டில் நடைபயின்று, 250ஆவது மலராக இன்று மலர்ந்து மணம் வீசுகிறது என்பது முருகன் கொடுத்த வரம். உந்துதலுக்கும் ஊக்கப்படுத்துதற்கும் பலர் இருந்தாலும்கூட அவனருளாலே 250 பிரதியுடன் ஆரம்பித்த ஞானச்சுடர் இன்று 2250 பிரதிகளாக வெளிவருகிறது. ஏறக்குறைய 150 பிரதிகள் வெளிநாடுகளுக்கும், ஏனையவை நாட்டின் வெளிமாவட்டங்களுக்கும் தபால் மூலம் அனுப்பப்படுகிறது. ஒருசில இடங்களுக்கு மட்டுமே நேரிலும், யாழ் குடாநாட்டின் ஏனைய சகல பகுதிகளுக்கும் தபால்மூலமும் ஞானச்சுடர் சென்று சேருகிறது. ஞானச்சுடரின் கருத்துக்களும்- கட்டுரைகளும் இளம் வயதினருக்கு ஏற்றதாக இல்லை என்பதில் உண்மையிருப்பினும் நடுத்தர வயதுக்கு மேற்பட்டோர் அனைவரும்




விரும்பி வாசிக்கும் ஒரு சமய சஞ்சிகை என்பது அவர்களது கடிதங்கள் மூலமும்- தொலைபேசி அழைப்புக்கள் மூலமும் அறியமுடிவதில் சைவ கலை பண்பாட்டுப் பேரவை தமது நோக்கம் நிறைவெய்தி வருவதுகண்டு பேருவகை கொள்கிறது. ஞானச்சுடரின் ஆரம்ப காலங்களில் சுவாமிகள் ஆக்கங்கள் பெறுவதற்காக பல வீட்டின் படிகள் ஏறிச் சென்றதுண்டு. ஆனால் இன்று கட்டுரைகளும்- கவிதைகளும் தபால்மூலமும்- நேரிலும்- ஈ.மெயில் மூலமாகவும் வந்து குவிந்தவண்ணம் உள்ளது. கட்டுரைகளைத் தெரிவுசெய்வதே தர்மசங்கடமான காரியமாக இன்றுள்ளது.


ஆரம்பகால கட்டுரைகளோடு ஒப்பிடுகையில் கட்டுரைகள்- கவிதைகளின் தரம் வெகுவாக அதிகரித்திருப்பதுபற்றி வெளியீட்டுரை- மதிப்பீட்டுரை நிகழ்த்துவோரின் உரைகள் மூலம் அறியமுடிகிறது. ஞானச்சுடரின் வெற்றிக்குக் கட்டுரையாளர்களதும் கவிதையாளர்களதும் காத்திரமான பங்களிப்பு என்பதே உண்மையாகும். இதனைக் கருத்திற்கொண்டு, சைவ கலை பண்பாட்டுப் பேரவையினர் இதுவரை நான்கு முறைகள் கட்டுரையாளரையும்- கவிதையாளர்களையும் கௌரவித்துள்ளனர். இந்த விசேட கௌரவிப்பில் புதிய கட்டுரையாளர்களும் உள்ளீர்க்கப்பட்டமை அவர்களுக்குப் பெரும் ஊக்குவிப்பாக அமைந்தது. இதேபோன்று, மாதாந்தம் ஞானச்சுடர் வெளியீட்டு நாளில் வெளியீட்டுரை- மதிப்பீட்டுரை நிகழ்த்துவோரும் பேரவையினால் ஒருமுறை கௌரவிக்கப்பட்டனர்.

*உயர்ந்த எண்ணம் கொண்டவர்களுக்கு தனிமை என்பதே இல்லை.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஞானச்சுடரின் 100ஆவது மலர், 150ஆவது மலர், 225ஆவது மலர் ஆகியவை விசேட நிகழ்ச்சிகளுடன் விமரிசையாக வெளியிடப்பட்டு வைக்கப் பட்டன. ஆவணி 2014இல் வெளியிடப்பட்ட 200ஆவது மலரில், 1998 தைமாதத்தில் வெளியிடப்பட்ட ஞானச்சுடரின் முதற் பிரதி- அட்டைப்படம் முதல் இறுதிப் பக்கம் ஈறான 25 பக்கங்களும் முழுமையாக மறு பிரசுரம் செய்யப்பட்டமையை வாசகர்கள் அறிவார் கள். 02.10.2016இல் வெளியாகிய 225ஆவது மலருடன் விசேட இணைப்பாக "ஞானதானம்" சஞ்சிகையும் வெளியீடு செய்யப்பட்டது. உதயன் பத்திரிகையின் "புத்தக சாலை" எனும் புத்தகங்களை விமர்சனம் செய்யும் பகுதியில், மேற்குறித்த விசேட மலர்கள் ஒவ் வொன்றைப் பற்றியும் விமர்சனங்கள் வெளியாகியமையும் கவனிக்கத் தக்கது.




ஞானச்சுடரின் உள்ளடக்கம் குறள்வழி- நற்சிந்தனை- பொருளடக்கம் என வழமை மாறாது தொடர்ந்தாலும், 2000ஆம் ஆண்டு தை மாதத்திலிருந்து "சுடர் தரும் தகவல்" எனும் புதிய பகுதி மலரை அலங்கரிக்கிறது. மனித நேயத்தைப் புகட்டும் ஒரு உண்மைச் சம்பவம் இந்த முதலாவது "சுடர் தரும் தகவலில்" உள்ளது. உயிரோட்டமான- சமுதாய மேம்பாட்டுக்கான கருத்துக்களை ஆணித்தரமாக எடுத்துக்கூறும் ஒரு பக்கமாக இது மிளிர்கிறது. கண்டனங்களைக்கூட, மற்றவர் மனம் நோகாதவாறு நாசூக்காகத் தெரியப்படுத்து வது "சுடரின்" தனிப்பாணி.

ஒவ்வொரு மாத "ஞானச்சுடர்" வெளியீட்டு வேளையின்போதும் விசேட பிரதி பெறுவோர் பட்டியலில் உள்ளவர்கள் தவறாது வருகை தந்து- அன்பளிப்புகள் வழங்கி- முதற்பிரதியினைப் பெற்றுக்கொள்ளும் நடைமுறை இன்றுவரை நீடிக்கிறது. ஏதோ ஒரு வகையில் ஆச்சிரமத்தோடு நெருங்கிய ஈடுபாடு கொண்டுள்ள அனைவரும் இந்த முதற்பிரதி பெறுவோரின் பட்டியலில் கௌரவம் பெறுகின்றனர். இந்த வரிசையில், எல்லா மக்கள் வங்கிக் கிளைகளினதும் சகல தரத்திலான ஊழியர்களும் ஒன்றிணைந்து தைமாத சிறப்புப் பிரதி பெறுவோர் பட்டியலில் இடம்பெறுவதுடன், அவர்கள் வழங்கும் பெருநிதியானது ஆச்சிரமத்தின் காத்திரமான பல்வேறு அறப்பணிகளுக்கும் பயன்படுகிறது என்பதை சந்நிதி யான் ஆச்சிரமம் நன்றியோடு நினைவிற் கொள்ளுகிறது.

2008இல் ஆரம்பமான வாசகர் போட்டிக்கான வினாக்கள் ஒவ்வொரு ஆண்டிலும் கார்த்திகை மாதத்தில் வெளியிடப்பட்டு, மார்கழி மாதத்தில் வாசகர் போட்டிக்கான முடிவுதேதி நிறைவுபெற்று, (மறு ஆண்டு) தைமாத ஞானச்சுடர் மலரில் தெரிவு செய்யப்பட்டு மாசிமாத மலர் வெளியீட்டின்போது வெற்றிபெற்ற போட்டியாளர்களுக்கு பெறுமதிமிக்க பரிசில்கள் வழங்கப்படுவது வருடம் தவறாத நிகழ்வாகும்.

இதேபோன்று "ஞானச்சுடர்" வாசகர் கௌரவிப்பு 31.03.2017இல் நடைபெற்றது. வாசகர்களுக்கு "ஞானச்சுடர்" பற்றிய தங்கள் அபிப்பிராயங்களை ஒளிவு மறைவில்லாமல் எழுதி அனுப்பும்படி கேட்டு ஒரு மாத கால அவகாசம் வழங்கப்பட்டு, பேரவையுடன் தொடர்புகொண்ட அத்தனை வாசகர்களின் கடிதங்களும் உள்ளடக்கிய பங்குனி 2017 மலர் வெளியீட்டு தினத்தில் அனைவரையும் அழைத்து தனித்தனியாகக் கௌரவிக்கப்பட்டனர்.

*துன்பத்தைப் போன்ற பயிற்சிக் கருவிகள் வேறு இல்லை.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆச்சிரம சுவாமிகளின் வட இந்திய யாத்திரை பயணக்கட்டுரை மூன்று முறை தொடராக வெளிவந்தது. தமக்கே உரிய மிக எளிமையான தமிழில்- வாசகர்களையும் தம்மோடு யாத்திரைக்கு அழைத்துச் சென்று சகல இடங்களையும் சுற்றிக் காண்பித்த உணர்வுடன் வட இந்திய யாத்திரைத் தொடரினை முழுமைபெறச் செய்தார் சுவாமிகள்.

## ஞானபண்டித..... விருதுகள்

சைவத்திற்கும்- தமிழுக்கும்- சமுதாயத்திற்கும் பெரும்பணியாற்றிய மதிப்பிற்குரியவர்கள்- பெரியவர்கள்- சேவையாளர்களைக் கௌரவப்படுத்தும் பணியினைச் சந்நிதியான் ஆச்சிரமம் காலத்திற்குக் காலம் வழங்கி வருகிறது. இந்த வரிசையில் ஞானபண்டிதன் முருகன் திருநாமத்தை முன்னிறுத்தி "ஞான பண்டித....." என ஆரம்பித்து அவரவர் துறைக்கேற்றபடி வழங்கப்பட்ட பட்டங்களின் பட்டியல் இது:

16.05:1993

01) "ஞான பண்டித இயலரசு" : அமரர் பண்டிதர் க. முத்துவேலு

02) "ஞான பண்டித ஆய்வரசு" : அமரர் கதிர் தணிகாசலம்

03) "ஞான பண்டித இசையரசு" : திரு செ. குமாரசாமி

22.05.1994

"ஞான பண்டித தமிழ்க் குரிசில்" : பேராசிரியர் அ. சண்முகதாஸ்

14.06.1998

"ஞான பண்டித கலா வித்தகி" : செல்வி தங்கம்மா அப்பாக்குட்டி

29.05.1999

"ஞான பண்டித சேவா சுரபி" : டாக்டர் சி. கதிரவேற்பிள்ளை

03.06.2001

"ஞான பண்டித அமுத சுரபி" : அமரர் அருட்கவி சீ. விநாசித்தம்பி

24.05.2002

"ஞான பண்டித விமலதாசன்" : திரு த.ந. பஞ்சாட்சரம்

30.05.2004

"ஞான பண்டித சேவா ஜோதி" : அமரர் வை. வேலும்மயிலும்

09.06.2006

"ஞான பண்டித ஆன்மீகச் செம்மல்" : திரு கு. கங்கைவேணியன்

21.05.2017

"ஞான பண்டித சமூக இரட்சகர்" : திரு க. சோமசேகரம் (மகாராணி)

10.06.2018

"ஞான பண்டித ஆன்மீக வித்தகர்" : திரு ஆ. சிவநாதன்

*இயற்கை ஒரு வேலையை முடிப்பதற்காகவே ஓர் அறிஞனைப் படைக்கிறது.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## புத்தக வெளியீடுகள்

சந்நிதியான் ஆச்சிரம மண்டபத்தில் புத்தக வெளியீடுகள் பலவும் நடந்தேறியுள்ளன. வெள்ளி வாராந்த நிகழ்வுகளிலும், விசேட நிகழ்வுகளிலுமாக வெளியிடப்பட்ட புத்தகங்களும்- அவற்றின் ஆசிரியர்கள் பெயர்களும் கீழே தரப்பட்டுள்ளது.

2000 "சந்நிதிச் செல்வம்"
வல்வை ந. அனந்தராஜ

13.07.2003 "திருவிளையாடற் பூசைப் பாமலர்கள்"
சிவகவிமணி ஆ. கதிர்காமத்தம்பி

17.09.2004 "அருள் வழங்கும் மாரியம்மன் இதுதான் இந்து தர்மம்"
கோப்பாய் சிவம்

02.02.2007 "முருக மந்திரம்"
சிவத்தமிழ் வித்தகர் சிவ. மகாலிங்கம்

15.07.2006 "திருவருட்பயன் வசனரூபம்"
வல்வெட்டி கவிஞர் ஆ. கதிர்காமத்தம்பி அவர்களின் மனைவி திருமதி மாதேவிப்பிள்ளை

29.10.2009 "மானிடத்தை மேம்படுத்தும் மாண்புமிகு கோட்பாடுகள்" பாகம்- I,II
சிவத்திரு வ. குமாரசாமி ஐயர்

"சந்நிதியான் அற்புதங்கள்" பாகம்- I
திரு ந. அரியரத்தினம்

27.11.2009 "அகர வரிசையில் கால் நூறடிகள்"
திரு க. கனகராசா

18.09.2015 "திருக்குறள் மூலமும் உரையும்- 1330 குறள் இறுவெட்டு வெளியீடு"
திரு ஸ்ரீ அவர்கள்

26.03.2016 "விழுதுகள்" - கட்டுரைத் தொகுதி
திரு சுந்தரலிங்கம் (சுந்தா)

இதுவரை சந்நிதியான் ஆச்சிரமம் - சைவ கலை பண்பாட்டுப் பேரவை சார்பாக ஆச்சிரம விசேட நிகழ்வுகளில் வெளியிடப்பட்ட வெளியீடுகள் கீழே தரப்பட்டுள்ளது.

ஆசாரக் கோவை
அருட்கனி
பாராயண அட்சரமாலை
சரஸ்வதி தோத்திர மஞ்சரி
சந்நிதியான் ஆச்சிரம சேவைகள் பணிகள்- பாகம்- I,II
வட இந்திய யாத்திரை
ஞானதானம்
மீரியப்பெத்த மண்சரிவும் - அதன் தாக்கமும்
வித்தகச் செழுமை

*உனக்குத் தெரியாததை தெரியாது என்று ஒப்புக்கொள்வதே அறிவு.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சுவாமிகளுக்கு விருது

சந்நிதியான் ஆச்சிரமத்தினால் நிறைவேற்றப்படும் பணிகள் அனைத்தும் சுவாமிகளின் சிந்தனையின் வெளிப்பாடேயாகும். சிந்திப்பது - செயற்படுத்துவது இவற்றுக்கிடையேயுள்ள அத்தனை காரியங்களையும் தொலைபேசிமூலமாகவே ஒருங்கிணைத்து, அந்தந்த தேவைகளுக் கேற்றபடி- தேவையானவர்களைத் தெரிவு செய்து, அவர்கள் மூலமாக அப்பணிகளை நிறைவு செய்வது சுவாமிகள் நன்கறிந்தது. எவ்வித அலட்டலுமில்லாமல்- பதட்டமுமில்லாமல் சுவாமிகள் அந்தந்த காரியங்களை நிறைவாக்கி அமைதியாக விறாந்தையில் வலது பக்கமாக உள்ள தனது சிம்மாசனத்தில் (பழைய கதிரையில்) முருகாவென்று அமர்ந்திருப்பார். சேவைகள் நிறைவேறும். ஆச்சிரம சேவைகளும் பணிகளும் ஒரு சிறு புள்ளியாக ஆரம்பித்து, படிப்படியாக வட்டம் பெருத்து- இன்று சந்நிதியான் காலடி முதல் மலையகம் வரை நீடித்து நிலைத்து நிற்கிறது.

இந்த நோக்கங்களையும் செயற்பாடுகளையும் நன்கு புரிந்துகொண்ட- தெரிந்துகொண்ட நல்ல உள்ளங்கள் சுவாமிகளுக்கு விருதுகளையும் கௌரவங்களையும் வழங்கி அழகு பார்க்கிறார்கள். விருதுகளை எதிர்பார்த்து வேலைத் திட்டங்களை வகுக்காத சுவாமிகள் விருப்பமில்லாமலும், விலகிக் கொள்ள முடியாமலும் இவற்றினை ஏற்றுக்கொள்ள வேண்டிய சூழ்நிலை உருவாகி விடுகின்றன. இந்த வகையில் சுவாமிகளுக்கு வழங்கப்பட்ட விருதுகளும்- கௌரவங்களும்- பட்டங்களின் பட்டியல் வருமாறு:

| | |
|---|---|
| 2000 | "சமாதான நீதவான்"<br>மறைந்த இந்து கலாசார அமைச்சர் தி. மகேஸ்வரன் அவர்களின் முயற்சி இது. |
| 27.01.2002 | "அமுதகலாஜோதி"<br>யாழ்ப்பாணம் பிரம்மஸ்ரீ கு. சிவராஜசர்மா வழங்கியது. |
| 12.02.2006 | "அமுத வாருதி"<br>கொழும்பு பம்பலப்பிட்டி சரஸ்வதி மண்டபத்தில் வழங்கியது. |
| 31.08.2007 | "அறப்பணி அரசு"<br>ஆச்சிரம ஆர்வலர்கள் வழங்கியது. |
| 20.04.2014 | "லங்கா இரத்தின ஜோதி"<br>பாரம்பரிய சுதேச வைத்திய பிரதி அமைச்சர் பண்டு பண்டார நாயக்காவால் ஆச்சிரமத்தில் வைத்து வழங்கப்பட்டது. |
| 2014 | "சிவஞான ஜோதி"<br>உலக சைவத் திருச்சபை |
| 02.10.2016 | "ஞானதான வள்ளல்"<br>ஆச்சிரம ஆர்வலர்கள் |
| 01.09.2017 | "கௌரவ டாக்டர் பட்டம்"<br>தமிழ்நாடு மத்திய பல்கலைக்கழகம் வழங்கியது. |
| 21.08.2018 | "யாழ் விருது"<br>யாழ் மாநகராட்சி மன்ற சைவ சமய விவகாரக்குழு. |

*நம்பக் கற்றுத் தராதீர்கள். எதையும் சிந்திக்கக் கற்றுத் தாருங்கள்.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பத்திரிகைகளில் "சந்நிதியான் ஆச்சிரமம்"

சந்நிதியான் ஆச்சிரமத்தினால் மேற்கொள்ளப்பட்டு வரும் பல்வேறு பணிகள் பற்றிப் பலரும் பத்திரிகைகளில் முழுப்பக்க கட்டுரைகளாகவும், பகுதிக் கட்டுரைகளாகவும், வேறு விடயதானங்களுடன் கலந்து எழுதப்பட்ட விடயங்களையும் பல சந்தர்ப்பங்களிலும் எழுதியுள்ளார்கள். இடப்பெறுமதி கருதி, ஆச்சிரமம்பற்றி வெளியாகிய முழுப்பக்க கட்டுரைகளின் தலைப்புகளும், அதை எழுதியவர்களின் பெயர்களும் கீழே தரப்பட்டுள்ளது.

31.03.2004 - உதயன்

"சந்நிதியுடன் இரண்டறக் கலந்த தவத்திரு முருகேசு சுவாமிகள்"

சந்நிதியான் ஆச்சிரமம்.

31.05.2005 - உதயன்

"ஞான பண்டித சேவா ஜோதி - வை. வேலும் மயிலும் அவர்கள்"

ந. அரியரத்தினம்

10.02.2006 - தினக்குரல்

"ஆச்சிரமத்தின் அறப்பணிகள்"

ஓர் அபிமானி

30.04.2006 - உதயன்

"நலிவுற்றோருக்கு உதவும் சந்நிதியான் ஆச்சிரமம்"

ந. அரியரத்தினம்

மானிடன் - ஒளி1 கதிர் 2

"இமயமாய் உயர்ந்து நிற்கும் சந்நிதியான் ஆச்சிரமம்"

ஆசிரியர்

19.08.2007 - தினக்குரல்

"சர்வதேச அரங்கில் தொண்டாற்றும் சந்நிதியான் ஆச்சிரமம்"

ஈழத்தீபன்

17.02.2008 - உதயன்

"சமயத் தொண்டுடன் சமமாக சமூகப்பணியாற்றும் சந்நிதியான் ஆச்சிரமம்"

ஆறு. திருமுருகன்

31.08.2009 - வலம்புரி

"சுவாமிகளுக்கு அகவை 60"

துரை. கணேசமூர்த்தி

05.09.2009 - உதயன்

"ஆன்மீகப் பணியாற்றும் மோகன் சுவாமிகளுக்கு அகவை 60"

துரை. கணேசமூர்த்தி

*உண்மைக்கு ஒப்பானது உலகில் எதுவுமில்லை.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

22.01.2011 - வலம்புரி

"14ஆவது ஆண்டில் ஞானச்சுடர்"

துரை. கணேசமூர்த்தி

03.01.2012 - தினமுரசு

"சந்நிதியான் ஆச்சிரமம் தளராது தொடரும் சமூக சேவைகள்"

ஓர் அபிமானி

17.02.2013 - உதயன்

"அடியார்களுக்கு அளப்பரிய சேவையாற்றும் சந்நிதியான் ஆச்சிரமம்"

ஓர் அபிமானி

**நிறைவாக...**

இந்தத் தொகுப்பின் ஆரம்பத்தில் ஏன்...? எதற்காக...? எனக் கேட்டிருந்தேன். இப்போது இத்தனை விபரங்களுக்கும் தகவல்களுக்கும் முடிவில் எப்படி...? என இன்னொரு வினாவை முன் வைக்கிறேன். இந்த கைங்கரியங்கள் அத்தனையும் எப்படி நடைபெறுகிறது? தங்கள் சிந்தனைக்கே விட்டு விடுகிறேன். சந்நிதியான் ஆச்சிரமமும்- சுவாமிகளும் வேறல்ல. இரண்டும் ஒன்றே. ஆச்சிரமம் என்றால் மோகன் சுவாமிகள். மோகன் சுவாமிகள் என்றால் ஆச்சிரமம். இதுவே உண்மை. இதுவே யதார்த்தம்.

ஆச்சிரமத்திற்கு வருகை தரும் நல்ல உள்ளங்கள் பலரும் அள்ளிக் கொடுத்தும், சிலர் கிள்ளிக்கொடுத்தும் சேருகின்ற ஒவ்வொரு ரூபாவும் ஆச்சிரம அறப்பணிக்கு உதவுகின்றது. புலம் பெயர்ந்துள்ள நம்மவர்கள் பலரும் ஆச்சிரம வங்கிக் கணக்கிற்கு நேரடியாகத் தங்கள் பங்களிப்பினை வழங்கி வருகிறார்கள். "இது மலையக நிவாரணப் பணிக்காக...", "இது கல்விப் பணிக்காக...", "இது மருத்துவப் பணிக்காக..." எனக் குறிப்பிட்டுக் கிடைக்கும் நிதி உதவிகள் அவர்கள் விருப்பத்திற்கேற்ப அந்தந்தப் பணிகளின் தேவைகளுக்குப் பயன்படுகிறது. வர்த்தகர்கள் பலரும் சந்நிதி திருவிழா போன்ற விசேட காலங்களுக்கு முன்பாக தாராளமாக உலர் உணவுப் பொருட்களை வழங்குவதையும் வழமையாகக் கொண்டுள்ளனர்.

படிப்படியாக ஆச்சிரமத்தினை நோக்கி உதவி கேட்டு நீளும் கரங்கள் பலவுண்டு. குறிப்பாக மலையகத்திலிருந்து முன் வைக்கப்படும் கோரிக்கைகள் மிக அதிகமாகவும்- அவசரமானதுமாக உள்ளது. உடனடியாக அனைத்தையும் நிறைவேற்ற முடியாவிட்டாலும், உண்மையான தேவையறிந்து- அவசியமறிந்து ஆச்சிரமம் கை கொடுக்கும்.

சுவாமிகளின் எல்லா முடிவுகளுக்கும் பக்கபலமாகத் தோள்கொடுத்து நிற்கும் சைவ கலை பண்பாட்டுப் பேரவை உறுப்பினர்கள், மற்றும் ஆச்சிரம அனுதாபிகள், ஆர்வலர்கள், நலன்விரும்பிகள் அனைவரதும் பூரணமான ஒத்துழைப்புடன் எதிர்காலத்தில் ஆச்சிரமம் நடைபோடும் என்பது மட்டும் உறுதியானது. என்றும் முருகன் திருவருள் நம்மை வழிநடத்த வேண்டும் எனக் கேட்டு இத்தொகுப்பினை நிறைவு செய்து கொள்கிறேன்.

*எங்கே உண்மை இருக்கிறதோ அங்கே தன்னலம் இருப்பதில்லை.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஞானச்சுடர் 2018 ஐப்பசி மலர்

# கார்த்திகை மாத வாராந்த நிகழ்வுகள்

02.11.2018 வெள்ளிக்கிழமை முற்பகல் 10.30 மணியளவில்

சொற்பொழிவு :- "முருகனது அருட்செயல்கள்"

வழங்குபவர் :- திரு சிவஞானம் பாலமுரளி அவர்கள்

(ஆசிரியர், பொலிகை இ.த.க. பாடசாலை)

---

09.11.2018 வெள்ளிக்கிழமை முற்பகல் 10.30 மணியளவில்

சொற்பொழிவு :- "சேவலும் மயிலும்" (கந்தசஷ்டிகால நிகழ்வு தொடர்)

வழங்குபவர் :- செஞ்சொற் செல்வன் இரா. செல்வவடிவேல் அவர்கள்

---

16.11.2018 வெள்ளிக்கிழமை முற்பகல் 10.30 மணியளவில்

"இன்னிசை"

(பக்கவாத்திய சகிதம்)

---

23.11.2018 வெள்ளிக்கிழமை முற்பகல் 10.30 மணியளவில்

சொற்பொழிவு :- "கந்தபுராணம்" (தொடர்)

வழங்குபவர் :- திரு அ. குமாரவேல் அவர்கள்

(சிரேஷ்ட விரிவுரையாளர், யாழ்/ கல்லூரி வட்டுக்கோட்டை)

---

30.11.2018 வெள்ளிக்கிழமை முற்பகல் 10.30 மணியளவில்

**ஞானச்சுடர் கார்த்திகை மாத வெளியீடு**

வெளியீட்டுரை :- திரு ச. நவரத்தினராசவேல் அவர்கள்

(இளை. அதிபர்)

மதிப்பீட்டுரை :- திரு செ. பரமேஸ்வரன் அவர்கள்

(அதிபர்)

251ஆவது மலர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பதிவு இல. QD/49/NEWS/2018

# ஸ்ரீ செல்வச்சந்நிதி ஆலய முகப்புத் தோற்றம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org